# நக்கல் நமசிவாயம்

கொரோனாவுக்கு ஒவ்வொருத்தனும் சொல்லுற பரிகாரங்கள செய்யப்போய் புதுசா ஏதேனும் நோய் வந்திடுமோ எண்டு பயமாக்கிடக்குதடா தம்பி..




# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 307 பிலவ வருடம், ஆவணி மாதம் 03ஆம் திகதி வியாழக்கிழமை (19.08.2021) ஹிஜ்ரி - 1443, முஹர்ரம் பிறை - 09, 0115886187 - பக்கங்கள் 16

விலை ரூ.30


## செப்.1 வரை ரிஷாட்டுக்கு விளக்கமறியல்

•நா.தினுஷா

உயிர்த்த ஞாயிறு தின தற்கொலை குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின்பேரில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனுக்கு எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முதலாம் திகதிவரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது. 02

## மங்களவின் உடல்நிலையில் முன்னேற்றம்



•நா.தினுஷா

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி கொழும்பிலுள்ள தனியார் மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ள முன்னாள் நிதியமைச்சர் மங்கள சமரவீரவின் உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

அவரது உடல்நிலையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக மருத்துவமனையின் பேச்சாளர் ஒருவர் 'தமிழன்' நாளிதழுக்கு நேற்று உறுதிப்படுத்தினார்.

மங்கள சமரவீர சிகிச்சை பலனின்றி காலமானதாக இணையத்தளங்கள் சிலவற்றிலும் சமூக வலைத்தளங்களிலும் தகவல் வெளியாகியிருந்தது. 02

# நகரங்கள் பல முடக்கத்தில்!



## கொரோனா ஆபத்தால் சுய தீர்மானம்; 40இற்கும் மேற்பட்ட இடங்கள் ஸ்தம்பிதம்

•யோ.தர்மராஜ்

நாட்டில் கொரோனா தொற்று தீவிரமடைந்துவருவதால் எதிர்வரும் வாரங்களில் ஏற்படும் ஆபத்தை கருத்திற்கொண்டு, பல பகுதிகளிலுள்ள வர்த்தக தொழிற்சங்கங்கள், நகரங்களில் வர்த்தக நிலையங்களை மூடுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளன.

அதன்படி, நாட்டில் நேற்று மாலை வரை 40இற்கும் மேற்பட்ட நகரங்களில் இவ்வாறு வர்த்தக நிலையங்களை மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, பதுளை, திருகோணமலை, இரத்தினபுரி மற்றும் பலாங்கொடையிலுள்ள அனைத்து வர்த்தக நிலையங்களும் நேற்றுமுதல் ஒரு வாரத்திற்கு மூடப்பட்டுள்ளதுடன், வெலிமடை மற்றும் அனுராதபுரத்திலுள்ள வர்த்தக நிலையங்கள்... 02

## கொரோனா அலையில் சிக்கிய மருத்துவர் மொஹமட் ஜனன்

### சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு



கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டிருந்த மருத்துவர் ஒருவர் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைபெற்றுவந்த நிலையில் நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார்.

ராகம மருத்துவமனையில் பணியாற்றிவந்த 41 வயதுடைய மொஹமட் ஜனன் என்ற மருத்துவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். 02

## கொரோனா தொற்றிய ஊடகர் காலமானார்



சண்டே ஐலண்ட் பத்திரிகையின் தலைமை செய்தி ஆசிரியர் சுரேஷ் பெரேரா கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி சிகிச்சைபெற்றுவந்த நிலையில் நேற்றுமுன்தினம் காலமானார்.

கொழும்பு தெற்கு போதனா (களுபோவில) வைத்தியசாலையில் சிகிச்சைபெற்றுவந்த நிலையிலேயே அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். 02

## வடக்கு சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு கொரோனா



வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஆ.கேதீஸ்வரனுக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளது. வடக்கு பிரதம செயலாளர் தொற்றுக்குள்ளானதைத் தொடர்ந்து, அவருடன்... 02

## சுகாதார அமைச்சினால் நேற்று புதிய வழிகாட்டல்கள் வெளியீடு

02

# ஆணவ அதிகாரத்தால் ஏற்படும் உயிர்ப்பலியை தடுப்பதற்கு அடுத்த 10 நாட்கள் சுய முடக்கத்துக்கு அழைப்பு

## எதிர்க்கட்சி கூட்டணித் தலைவர்கள் அறிக்கை









கொவிட் தொற்று, கட்டுப்படுத்த முடியாதளவில் பரவி வருகிறது. அரசாங்கம் தனது பொறுப்புகளையும் கடமைகளையும் புறக்கணிப்பது ஒரு சோகமான நிலையாகும் எனச் சுட்டிக்காட்டியுள்ள எதிர்க்கட்சி கூட்டணியின் தலைவர்கள், குறைந்தபட்சம் 10 நாட்களுக்காவது சுயமாக முடங்கிக்கொள்ளுமாறு மக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

ஆணவ அதிகாரத்தில் அரசாங்கம் இருப்பதால் உயிரிழப்புக்கு அவர்கள் பொறுப்பேற்க வேண்டும் எனவும் உயிர்ப்பலியை தடுப்பதற்கு அரசிடம் திட்டமெதுவும் இல்லையெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 02

## 6 ஆயிரம் மெட். தொன் அரிசி பாகிஸ்தானிலிருந்து இறக்குமதி

### அமைச்சரவைத் தீர்மானங்கள் 04,14

## நாட்டை முடக்க மாட்டோம் என்ற விடாப்பிடி கிடையாது

### 8 மில்லியனுக்கும் அதிகமானோருக்கு தொழில் இல்லை

### சுகாதாரத்துறை பரிந்துரைத்தால் முடக்கத்துக்கு தயார் என அரசு அறிவிப்பு



•யோ.தர்மராஜ்

நாட்டில் தொழில் இல்லாது 8 மில்லியனுக்கும் அதிகமானோர் இருப்பதால், அரசாங்கம் என்ற ரீதியில் இவர்கள் குறித்து சிந்திப்பதனால் முடிந்தவரை தடுப்பூசிகளை வழங்கி நாட்டை திறக்கும் முறையை கடைப்பிடிப்பதற்கு தீர்மானித்துள்ளோம். எனினும், நாட்டை எவ்வேளையிலும் முடக்கவே முடியாது என்ற விடாப்பிடியான நிலைப்பாட்டிலும்... 02

## நாட்டை முடக்க முடியாது

### ஜனாதிபதி கோட்டா திட்டவட்டம்



02

## இலங்கைக்கு 250 மில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவி

### பங்களாதேஷ் வழங்கியது 02



## ஆப்கானிஸ்தானில் ஆட்சியமைக்க

### தலிபான் தலைவர்கள் வருகை 15

## நீதித்துறை ஆணைக்குழுவின் சுயாதீனம் மீது சந்தேகம்

### அதிகாரத்தைப் பயன்படுத்த இடமளியோம் என்கிறார் சஜித்

நாடு கொவிட்-19 தொற்றுநோயை எதிர்கொண்டுள்ள நிலையில் மேற்கொள்ள வேண்டிய நீதித்துறை நடவடிக்கை குறித்து கடந்த வாரம் இலங்கை நீதிபதிகள் நிறுவனத்தில் நடைபெற்ற மாநாடு குறித்து சர்ச்சைக்குரிய சமூக உரையாடல் தற்போது உருவாகியுள்ளது எனத் தெரிவித்துள்ள எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, அங்கு விவாதிக்கப்பட்ட விடயங்கள் நீதித்துறை ஆணைக்குழுவின் சுயாதீனம் மீது சந்தேகத்தை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளதெனக் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நீதித்துறை சேவை ஆணைக்குழு அரசியலமைப்பிலுள்ள ஒரு சுயாதீன அமைப்பாக இருந்தாலும், அதன் சுதந்திரத்தைப் பாதிக்கும் பல... 02




## கொரோனா தொற்றிய ...

இவர் 1985 தொடக்கம் 2005 வரையான காலப்பகுதியில், நாட்டின் சிறந்த நாடாளுமன்ற செய்தியாளர்களில் ஒருவராகத் திகழ்ந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அன்னாரின் மறைவுக்கு 'தமிழன்' ஆசிரியபீடம் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கிறது.

## இலங்கைக்கு...

அந்நிய செலாவணி நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கைக்கு ஆதரவளிக்கும் பங்களாதேஷின் முயற்சிகளின் ஒரு பகுதியாக இவ்வாரம் இலங்கைக்கு 50 மில்லியன் அமெரிக்க டொலர்களை பங்களாதேஷ் கடனாக வழங்குகிறது.

பங்களாதேஷிலிருந்து எந்தவொரு நாட்டுக்கும் முதன்முறையாக வழங்கப்படும் இந்தக் கடனுதவி பங்களாதேஷ் வங்கி (BB) மற்றும் இலங்கை மத்திய வங்கி (CBSL) ஓகஸ்ட் 3ஆம் திகதி கையொப்பமிட்ட நாணய பரிமாற்ற ஒப்பந்தத்தின் கீழ் வழங்கப்படும்.

ஒப்பந்தத்தில் பங்களாதேஷ் வங்கி மொத்தமாக இலங்கைக்கு 250 மில்லியன் அமெரிக்க டொலர்களை கடனுதவியாக வழங்குகிறது.

இலங்கையில் வேகமாகக் குறைந்துவரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் மற்றும் அதன் மாற்றுவிகிதத்தில் அழுத்தத்தை எளிதாக்குவதையும் இந்தக் கடன் தொகை நோக்காகக் கொண்டது.

கடன் தொகை மூன்று கட்டங்களாக வழங்கப்படுவதுடன், கடனின் முதல் தவணை (50 மில்லியன் டொலர்) இந்த வாரம் வழங்கப்படும்.

## நாட்டை முடக்க முடியாது...

யோ. தர்மராஜ்

நாட்டை முடக்குவதற்கு முடியாது. எனினும், நாடு முழுவதும் கடுமையான பயணக் கட்டுப்பாடுகளை அமுல்படுத்த நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தின்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நாட்டை முடக்கினால் பொருளாதாரத்தை முன்னோக்கி கொண்டுசெல்ல முடியாது என்பதோடு, அன்றாட வருமானத்தை நம்பி உழைப்போர் பாரிய அசௌகரியங்களை எதிர்நோக்க நேரிடும் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார். இதேவேளை, கொரோனா பரவலை தடுப்பதற்காக தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகளை துரிதப்படுத்துமாறும் அதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நாட்டை முடக்குவதே கொரோனா கட்டுப்பாட்டுக்கு ஒரே வழி என சுகாதார தரப்பினர் வலியுறுத்திவரும் நிலையிலேயே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

ஆனால், நாளைய தினத்துக்குள் நாட்டை முடக்குவதற்கு தீர்மானம் எடுக்காவிட்டால் எதிர்வரும் திங்கட்கிழமைமுதல் பலவந்தமாக நாட்டை முடக்குவதற்கான நடவடிக்கையை எடுக்க நேரிடும் என சுகாதாரத்துறையினர் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## செப். 1 வரை

கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றில் நேற்று அவரை ஆஜர்படுத்தியபோது நீதவான் பிரியந்த லியனகே இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

வழக்கு விசாரணை தொடர்பில் ரிஷாட் பதியுதீன் சார்பில் சில சமர்ப்பணங்களை முன்வைக்க வேண்டும் என அவர் சார்பில் நீதிமன்றில் ஆஜராகியிருந்த சட்டத்தரணி என்.எம்.ஷஹீட் நீதவானிடம் கோரிக்கை முன்வைத்தார். அதற்கமைய குறித்த வழக்கை எதிர்வரும் 26ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுப்பதற்கும் அதன்போது ரிஷாட் எம்.பி. தரப்பிலான சமர்ப்பணங்களை முன்வைக்க முடியும் எனவும் நீதவான் தெரிவித்தார்.

இதேவேளை, ரிஷாட் பதியுதீனை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முதலாம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

## நாட்டை முடக்க மாட்டோம்...

அரசாங்கம் இல்லை என அமைச்சரவை பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டை முழுமையாக முடக்கல், இரு தடுப்பூசிகளும் 40 முதல் 50 வீதம் வழங்கிய பின்னர் நாட்டை திறத்தல் மற்றும் முடிந்தவரை தடுப்பூசிகளை வழங்கி நாட்டை திறத்தல் போன்ற மூன்று முறைகளையே உலக நாடுகள் கொரோனா தொற்றை கட்டுப்படுத்துவதற்கு கடைப்பிடிக்கின்றன. இதில் இந்த மூன்றாவது முறையையே இலங்கையில் கடைப்பிடிப்பதற்கு சுகாதாரத்துறை தீர்மானித்துள்ளது.

சில துறைகள் முற்றாக முடக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, கல்வித்துறை ஒன்றரை வருடங்களுக்கு மேலாக முற்றாக முடக்கப்பட்டுள்ளது. எனினும், நாட்டை முடக்குவது குறித்து சுகாதாரத்துறையே இறுதி முடிவெடுக்க வேண்டும். அதேபோன்று, நாட்டை எவ்வேளையிலும் முடக்கவே முடியாது என்ற கட்டாய நிலையிலும் அரசாங்கம் இல்லை. சுகாதாரத்துறையினர் பரிந்துரைக்கும் பட்சத்தில் நாட்டை முழுமையாக முடக்குவதற்குத் தயாராக இருக்கிறோம்.

அரச துறை மற்றும் ஓய்வூதியம் பெறுவோரின் எண்ணிக்கை 2 மில்லியனுக்கும் அதிகமாகும். ஆனால், எவ்வித வேலையும் இல்லாதோர் 8 மில்லியனுக்கும் அதிகமாக உள்ளனர். ஆகவே, அரசாங்கம் என்ற ரீதியில் இந்த 8 மில்லியன் மக்கள் குறித்து சிந்திப்பதனாலேயே மூன்றாவது முறையை கடைப்பிடிப்பதற்கு தீர்மானித்துள்ளோம் - என்றார்.

## மங்களவின் உடல்நிலையில்...

எனினும், அந்தத் தகவல் உண்மையில்லையென அவருக்கு சிசிச்சையளிக்கும் வைத்திய நிபுணர் ஒருவர் தெரிவித்துள்ளார். இதுகுறித்து மங்கள சமரவீரவின் ஊடகப் பிரிவை தொடர்புகொண்ட போது, அவ்வாறு வெளியாகும் செய்திகளில் எந்தவித உண்மைத்தன்மையும் இல்லையென தெரிவிக்கப்பட்டது. தனியார் மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அவர் தொடர்ந்தும் சிகிச்சைபெற்று வருவதாக ஊடகப் பிரிவு தெரிவித்தது. இதேவேளை, தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர விரைவில் குணமடைய வேண்டுமென பிரார்த்திப்பதாக அமைச்சரவைப் பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான டலஸ் அழகப்பெரும நேற்று தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## நீதித்துறை ஆணைக்குழுவின்...

விவகாரங்கள் மேற்கூறப்பட்ட கூட்டத்தில் விவாதிக்கப்பட்டுள்ளன.

நீதித்துறை சேவை ஆணைக்குழு பல்வேறு நீதிமன்றங்களிலிருந்து நீதிபதிகளை அழைத்து போராட்டங்களை நடத்துவது தொடர்பான நீதிமன்ற உத்தரவுகளை பிறப்பிக்கும் மற்றும் நீதி நிர்வாகம் தொடர்பான வழிமுறைகளை வெளியிடுவது, நீதித்துறையின் சுதந்திரத்தை மோசமாக பாதிக்கும். இதேபோல், மாநாட்டில் கலந்துகொள்ளத் தவறினால் பதவி உயர்வு, சம்பள உயர்வு, வெளிநாட்டுப் பயிற்சிக்கு அனுப்புதல் மற்றும் உயர் நீதிமன்றங்களுக்கான நியமனங்கள் ஆகியவை கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

இது நீதித்துறை ஆணைக்குழுவின் சுயாதீனத்தின் மீது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

இது ஒருவகையான கடுமையான எச்சரிக்கையாக அமைவதோடு, தேவைக்கேற்ப நீதித்துறையை கையாள அரசாங்கம் அல்லது நிறைவேற்றுத்துறை அதிகாரியின் நலன் கருதி இந்த மாநாடு நடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இத்தகைய தேவையற்ற செல்வாக்கு வழங்கப்பட்டு, உண்மைகள் மற்றும் நீதிபதிகளின் விருப்பப்படி வழங்கப்படவேண்டிய நீதி ஆகியவற்றில் எதிர்மறையான விளைவை ஏற்படுத்துவது தவிர்க்க முடியாததாக மாறிவிடும்.

இத்தகைய தேவையற்ற செல்வாக்கு, சட்டத்தின் ஆட்சி மற்றும் நீதித்துறையின் சுதந்திரத்தில் 20ஆவது திருத்தத்தின் தாக்கத்தின் மீதான பொதுமக்கள் சந்தேகத்தை மேலும் அதிகரிக்கும். உயர் நீதிமன்றங்களின் நீதிபதிகளை இடமாற்றம் மேற்கொள்ளும் அதிகாரம், நீதிமன்ற நிர்வாக அதிகாரிகளை நியமிக்கும் அதிகாரம், பதவி உயர்வு, சேவை தரம் கீழ்நிலைப்படுத்தல் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கை அதிகாரம் பெற்ற நீதித்துறை சேவை ஆணைக்குழுவிற்கு, நீதிமன்றங்களில் நீதி நிர்வாகம் குறித்த பரிந்துரைகள், உத்தரவுகள் அல்லது ஆலோசனைகளை வழங்க அதிகாரம் இல்லை என்பதை குறிப்பிட்டேயாக வேண்டும்.

அரசியலமைப்பில் கூறப்பட்டுள்ள சட்டத்தின் அதிகாரங்களும் கோட்பாடுகளும் இழக்கப்படுமானால், இந்த நிறுவனங்களின் சுதந்திரம் குறைந்தபட்சமாக அல்லது முற்றிலுமே இல்லாதுபோகும் என்பது குறிப்பிட வேண்டிய ஒரு விடயமல்ல என்பதோடு இது ஒரு ஜனநாயக நாட்டில் சட்டத்தின் ஆட்சிக்கு ஒரு கொடிய அடியாகும் என்பதையும் குறிப்பிட வேண்டும்.

நீதியை நிலைநாட்டுவது மட்டுமல்ல, அதை நிர்வகிக்கும் செயல்முறையும் தெளிவாக இருக்கவேண்டும் என்பதால் இதுபோன்ற அழுத்தங்கள் மீண்டும் நிகழாமல் தடுப்பதன் மூலம் நீதித்துறையின் சுதந்திரத்தை உறுதி செய்வதற்காக அனைத்து அரசியல் கட்சிகள், சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்களையும் கைகோர்க்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

சம்பந்தப்பட்ட கூட்டத்திற்கு வரவழைக்கப்பட்ட கடிதத்தின் உள்ளடக்கம் நீதித்துறையின் தன்னிச்சையான அரசியல் செல்வாக்கின் ஜனநாயகமற்ற தன்மையைக் குறித்துக்காட்டுகிறது.

பாரபட்சமற்ற நீதித்துறையுடன் விளையாட எந்த சக்திக்கும் உரிமையோ அல்லது அதிகாரமோ இல்லை என்பதை நாங்கள் வலியுறுத்துகிறோம்.

அதன் சுதந்திரத்திற்காக சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க நாங்கள் தயங்க மாட்டோம்.

ஜனநாயகத்தின் மூன்று முக்கிய தூண்களான சட்டமன்றம், நிறைவேற்றுத்துறை மற்றும் நீதித்துறை ஆகியவற்றுக்கு தனித்தனியே மரியாதை செலுத்துவது ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு அவசியமானதொரு விடயமாகும். அதன் கட்டுப்பாடும் சமநிலையும் அவசியமானதாகும்.

தூண்களில் ஒன்றினேதும் சமநிலை பாதிக்கப்படாமல் பார்த்துக்கொள்வது தவிர்க்க முடியாத பொறுப்பாகும்.

நீதித்துறையில் ஊடுருவிய துரோகத்தின் வரலாற்றை நாங்கள் மறக்கமாட்டோம், அந்த இருண்ட நிழல்களை மீண்டும் வேட்டையாட மேற்கொள்ளும் அனைத்து முயற்சிகளையும் நிச்சயமாக நாம் தோற்கடிப்போம்.

மக்கள் இறையாண்மை, நீதித்துறையின் சுதந்திரத்திற்கு சவால்விடும் சகல விடயங்களுக்கும் எதிராக முன்நிற்போம் என்பதில் நாங்கள் உறுதியாக உள்ளோம் என்பதோடு, இவற்றை பாதுகாப்பதற்காக முன்னிலை வகிக்க நாங்கள் ஒருபோதும் தயங்க மாட்டோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கொரோனா அலையில்...

கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டதை தெரிந்து தாம் பணியாற்றிய அதே மருத்துவமனையில் சிகிச்சைபெற்றுவந்த மருத்துவர், கடந்த சில தினங்களுக்கு முன் கொரோனா தொற்றின் பாதிப்பு அதிகரித்தமையால் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டார்.

எனினும், சிகிச்சைப் பலனின்றி அவர் நேற்று காலை உயிரிழந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் குறித்த மருத்துவர் கொரோனா தடுப்பூசி இரண்டையும் பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## வடக்கு சுகாதார...

தொடர்பில் இருந்த வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஆ.கேதீஸ்வரன் தன்னை தனிமைப்படுத்திக் கொண்டார். அவருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜன் பரிசோதனையில் தொற்று உறுதியாகியுள்ளது.

## சுகாதார அமைச்சினால்...

***யோ.தர்மராஜ்***

கொரோனா தொற்று தீவிரத்தால் தொற்றுப்பரவலை கட்டுப்படுத்துவதற்கு சுகாதார அமைச்சினால் புதிய சுற்று நிருபம் நேற்று வெளியிடப்பட்டுள்ளது.

இந்த சுற்றறிக்கை ஓகஸ்ட் 31 ஆம் திகதிவரை நடைமுறையில் இருக்கும் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, அத்தியாவசிய மற்றும் மருந்து பொருட்களை பெற்றுக்கொள்வதற்கு வீட்டிலிருந்து ஒருவர் மாத்திரமே வெளியில் செல்ல முடியும்.

மேலும், அனைத்து பராமரிப்பு மையங்களையும் இரண்டு வாரங்களுக்கு மூட அறிவிக்கப்பட்டுள்ளதுடன், மேலும், அனைத்து பாலர் பாடசாலைகள், பாடசாலை, உயர் கல்வி நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்கள் மறு அறிவிப்பு வரும்வரை மூடப்பட்டுள்ளன.

விருந்துகள் மற்றும் திருமணங்களும் தடைசெய்யப்பட்டுள்ளதுடன், மத வழிபாட்டு இடங்களில் கூட்டு நடவடிக்கைகள் அல்லது கூட்டங்களுக்கும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

பாதசாரி பாதைகளை பயன்படுத்தும்போது கூட்டங்களாக செல்லாது, தனித்தனியாக பயன்படுத்த வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இன்று (நேற்று) முதல், அனைத்து மசாஜ் பார்லர்கள், உடற்பயிற்சி நிலையங்கள், உட்புற உடற்பயிற்சி நிலையங்கள், சிறுவர் பூங்காக்கள், இசை நிகழ்ச்சிகள், கடற்கரைகளில் ஒன்றுகூடல் மற்றும் நீச்சல் தடாகங்களையும் 31ஆம் திகதிவரை மூட அறிவிக்கப்பட்டுள்ளது.

உணவகங்களில் இடவசதியில் 50 வீதமானோருக்கு மாத்திரமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அத்தோடு, ஹோட்டல்கள் மற்றும் வாடகை அறைகளில் இடவசதியில் 25 வீதமானோருக்கே அனுமதிக்கப்பட்டுள்ளது.

பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்தும்போது, பயணிகள் இருக்கைகளின் எண்ணிக்கைக்கு மட்டுமே பயணிகளை ஏற்றிச் செல்ல வேண்டும், மேலும் அத்தியாவசிய சேவைகளில் ஈடுபடுபவர்களுக்கு மட்டுமே மாகாணங்களுக்கு இடையே பயணிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தனியார் வாடகை வாகன சேவைகளைப் பயன்படுத்தும்போது, பயணிகள் இருக்கைகளின் எண்ணிக்கைக்கு மட்டுமே பயணிகள் ஏற்றிச் செல்லப்பட வேண்டும். மேலும், தனியார் வாகனங்களில் பயணிக்கும்போது, ஆசனங்களின் எண்ணிக்கைக்கு அமையவே பயணிக்க முடியும்.

தனியார் நிறுவனங்களில் அத்தியாவசிய சேவைகள் தொடர்பான குறிப்பிட்ட எண்ணிக்கையிலான ஊழியர்களை மட்டுமே கொண்டுவர சேவைகளை வழங்க நிறுவன தலைவர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும், அரச மற்றும் தனியார்துறை நிறுவனங்கள் தமது செயற்பாடுகளை முன்னெடுக்கும்போது சம்பந் தப்பட்ட மாகாணத்தில் வசிக்கும் ஊழியர்களை வேலைக்கு அழைக்க முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். சில நேரங்களில் நிறுவனத் தலைவரின் வேண்டுகோளுக்கமையவே ஊழியர்களை அழைக்க முடியும்.

கடுமையான சுகாதார வழிகாட்டுதல்களுக்கு அமைய பொருளாதார நிலையங்களில் மொத்த விற்பனைக்கு மட்டுமே திறக்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

மாநாடுகள், சந்திப்புகள் அல்லது கருத்தரங்குகளுக்கு அனுமதியில்லை. ஆடை தொழிற்சாலைகள், விவசாய நிறுவனங்கள் மற்றும் மீன்பிடித் தொழில்கள் என்பன கடுமையான சுகாதார வழிகாட்டுதலின் கீழ் செயற்பட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பல்பொருள் அங்காடிகளில் இடவசதியில் 25 வீதமானவருக்கே அனுமதிக்கப்படுவதோடு, இரண்டு நபர்களுக்கு இடையே 1.5 மீட்டர் இடைவெளி கடைப்பிடிக்க வேண்டும். கடையில் ஒரேநேரத்தில் நுழையக்கூடிய நபர்களின் எண்ணிக்கை காட்சிப்படுத்தப்பட வேண்டும்.

இன்று (நேற்று) முதல் அனைத்து வணிக வளாகங்களும் மூடப்பட்டுள்ளன.

வங்கிகள், குத்தகை வசதிகள் மற்றும் அடகு நிலையங்கள் ஒரே நேரத்தில் 10 வீதமான வாடிக்கையாளர்களுக்கு மட்டுமே நுழைய அனுமதிக்கப்படுகிறது.

அத்தோடு, கடுமையான சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்றுவதை நிறுவனம் உறுதிசெய்ய வேண்டும்.

கடுமையான சுகாதார வழிகாட்டலுக்கமைய புடவை விற்பனை நிலையங்களை திறப்பதற்கு அனுமதிக்கப்படுகின்றன. சில்லறை விற்பனை நிலையங்களில் 10 வீதமானோருக்கே அனுமதி.

வாராந்த சந்தை, திறந்த கடைகள், பேக்கரி, சிகையலங்கார நிலையங்கள், அழகு நிலையங்களில் இடவசதியில் 25 வீதமானவருக்கு நுழைய அனுமதிக்கப்படுகிறது மற்றும் அனைவரும் கண்டிப்பான சுகாதார வழிகாட்டுதல்களை கடைப்பிடிக்க வேண்டும்.

தையல் நிலையங்கள், தொலைபேசி விற்பனை நிலையங்கள், எரிவாயு நிலையங்கள் மற்றும் கட்டிட கட்டுமான தளங்களில் சுகாதார வழிகாட்டுதல்களுக்கமைய திறக்க அனுமதி. சிறைக்கைதிகளையும் பார்க்க அனுமதி இல்லை.

## நகரங்கள் பல...

இன்று முதல் ஒரு வாரத்துக்கும் மூட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்போது நிலவும் தொற்றுநோய் சூழ்நிலை காரணமாக இந்த முடிவு எடுக்கப்பட்டதாக அநுராதபுரம் ஒன்றிணைந்த தொழிற்சங்கத்தின் தலைவர் சரத் முனசிங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஹட்டன், கொட்டகலையிலுள்ள அனைத்து வர்த்தக நிலையங்களையும் இன்று முதல் 26ஆம் திகதிவரை ஒருவாரத்திற்கு மூடுவதற்கு கொட்டகலை வர்த்தகர்கள் சங்கம் தீர்மானித்துள்ளது.

அத்தோடு, தங்காலை மற்றும் கரந்தெனியாவிலுள்ள அனைத்து வர்த்தக நிலையங்களும் நேற்றுமுதல் ஒரு வாரத்திற்கு மூடப்பட்டுள்ளன.

மேலும், புத்தளத்திலுள்ள அனைத்து வர்த்தக நிலையங்களும் இன்று இரவுமுதல் எதிர்வரும் புதன்கிழமை (25ஆம் திகதி) வரை மூடப்படும் என தொழிற்சங்கத்தின் தலைவர் சுசந்த குணவீர தெரிவித்தார்.

நீர்கொழும்பு மற்றும் கொச்சிக்கடை நகரங்கள் இன்றுமுதல் எதிர்வரும் 25ஆம் திகதிவரை முடக்கப்படவுள்ளன. அத்துடன், நாளை முதல் சியம்பலாண்டுவ நகரமும் மூடப்படுகின்றது.

மேலும், நுவரெலியா – வெலிமட நகரமும் இன்றுமுதல் 26 ஆம் திகதிவரை மூடப்படுகிறது. அத்தோடு, காலி – கம்புறுப்பிட்டிய நகரமும் நாளை முதல் 25ஆம் திகதிவரை மூடப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கொவிட் பரவலுக்கு மத்தியில் கொழும்பு – 12 பகுதியிலுள்ள அனைத்து இரும்புப்பொருள் (ஹார்ட்வெயார்) மொத்த விற்பனை நிலையங்களையும் தற்காலிகமாக மூடுமாறு த சிலோன் ஹாட்வெயார் சம்மேளனம் கேட்டுக்கொண்டுள்ளது.

தமது பணியாளர்கள், வாடிக்கையாளர்களின் நலனை கருத்திற்கொண்டு இந்தத் தீர்மானத்தை எட்டியுள்ளதாக அந்த சம்மேளனத்தின் தலைவர் எஸ்.டி.எஸ்.அருளானந்தன் தெரிவித்துள்ளார்.

அதன்படி, பழைய சோனகத் தெரு, குவாரி வீதி, அப்துல் ஜப்பார் மாவத்தை, பண்டாரநாயக்க மாவத்தை, மகா வித்தியாலய மாவத்தை மற்றும் அதனை அண்மித்துள்ள அனைத்து இரும்பு பொருட்கள் மொத்தவிற்பனை நிலையங்களையும் மூடுமாறு அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை, யாழ்ப்பாணம், கேகாலை, சிலாபம், அம்பாறை, வென்னப்புவ , கெக்கிராவ, மொனராகலை, திவுலப்பிட்டிய, தெரணியகல, ஊரகஸ்மங்ஹந்திய, வாதுவ, பாதுராகொட, ரிகில்லகஸ்கட மற்றும் அலவ்வ ஆகிய நகரங்கள் மறு அறிவித்தல்வரை மூடப்பட்டுள்ளன.

அத்தோடு, கம்பஹா, அம்பலாந்தோட்டை, அம்பலாங்கொடை, மரந்தகஹமுல, வெயங்கொட, தங்கொட்டுவ, சேருநுவர, பலாபத்வல, உல்பத்த, தங்காலை, வலப்பனை, பண்டாரவளை, எம்பிலிப்பிட்டிய மற்றும் மாத்தளை, யட்டவத்த ஆகிய நகரங்களும் மூடப்பட்டுள்ளன.

நாடளாவிய ரீதியில் கொரோனா தொற்று தீவிரமடைந்துள்ள நிலையில், நாட்டை குறைந்தது இரு வாரங்களுக்காவது முடக்கவேண்டிய இக்கட்டான நிலையில் இருப்பதாக சுகாதாரத் துறையினர் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர். எனினும், ஜனாதிபதி உள்ளிட்ட அரசாங்கம் நாட்டை முடக்குவதற்கான தீர்மானத்தை எடுப்பதாகவில்லை.

இதனால், தங்களின் உயிர்களை தாங்களாகவே பாதுகாக்கவேண்டும் என்பதால் சுய கட்டுப்பாட்டை கடைப்பிடிக்குமாறு பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் உள்ளிட்ட சுகாதாரத்துறை தொழிற்சங்கங்கள் வலியுறுத்தின.

இதனையடுத்து, தற்போது நாட்டிலுள்ள பல முக்கிய நகரங்களிலுள்ள வர்த்தக சங்கங்கள் தாங்களாகவே முன்வந்து தங்களுடைய பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்களை ஓரிரு வாரங்களுக்கு மூடுவதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளதால் கடந்த இரு நாட்களாக பல நகரங்கள் பொது முடக்கத்தைப் போன்று காட்சியளிக்கின்றன.

எனினும், வர்த்தக நிலையங்களின் இந்த செயற்பாடு ஒரு பக்கத்தில் கொரோனா கட்டுப்பாட்டுக்கு உதவியாக இருந்தாலும் மறுபக்கத்தில் அரசாங்கத்தின் எவ்வித திட்டமிடலும் இல்லாதமையினால் வர்த்தக நிலையங்கள் முன்னறிவிப்பின்றி அடுத்தடுத்த நாட்களில் மூடப்படுவதால் தங்களுக்குத் தேவையான அத்தியாவசிய பொருட்களை பெற்றுக்கொள்வதில் மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்கின்றனர்.

இதனால், பல பகுதிகளின் கடைகளில் மக்கள் வரிசை வரிசையாக நின்றாலும் ஒரு பக்கத்தில் பொருட்களின் விலை அதிகரிப்பால் தங்களுக்கு தேவையான பொருட்களை கொள்வனவு செய்வதில் பெரும் நெருக்கடியை சந்தித்துள்ளனர்.

## ஆணவ அதிகாரத்தால்...

இதுதொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தவிசாளர் அமீர் அலி ஆகியோர் கூட்டாக நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இந்த முக்கியமான நேரத்தில், ஐக்கிய மக்கள் சக்தியின் அனைத்து அரசியல் கட்சிகளும் நாட்டுமக்களை மருத்துவ ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலின்பேரில் சுயமாக முடங்கிக் கொள்ளுமாறு அழைப்பு விடுக்கின்றன. குறைந்தபட்சம் தீர்மானமிக்க அடுத்த பத்து நாட்களுக்காவது அதன் செயற்பாட்டிற்கு பங்களிக்குமாறு வேண்டுகிறோம். ஏனென்றால், மக்களின் உயிரைக் காப்பாற்றுவதற்கான திட்டங்கள் அல்லது தேவைகள் அரசாங்கத்திடம் இல்லை என்பது தெளிவாகத் தெரிகிறது என்பதலாகும்.

உலக சுகாதார ஸ்தாபனம், சர்வதேச மற்றும் தேசிய மருத்துவர்கள், இலங்கையின் தற்போதைய நிலைமை குறித்து நாட்டை உடனடியாக அறிவியல் ரீதியாக முடக்குதலுக்கு உட்படுத்த வேண்டும் என்று சுட்டிக்காட்டியுள்ளனர். ஆனால், இந்த அறிவுறுத்தல்களை பொருட்படுத்தாமல் அரசாங்கம் தன்னிச்சையாக செயற்படுவதாகத் தெரிகிறது. இந்த நேரத்தில், நியூஸிலாந்து பிரதமர் டெல்ட்டாவால் பாதிக்கப்பட்ட ஒருவரை அடையாளம் கண்டபோது நாட்டை மூடி உடனடியாக நடவடிக்கை எடுத்தமை ஒரு முன்னுதாரணமன்றி ஓர் இலட்சியமான செயற்பாடாகும்.

டெல்ட்டா வைரஸின் மூன்று பிறழ்வுகள் இலங்கையில் இதுவரை கண்டுபிடிக்கப் பட்டுள்ளதாக அமைச்சர் சன்ன ஜயசுமன நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். அவசர காரணங்களுக்காக மட்டும் வீட்டை விட்டு வெளியேறுமாறு கொவிட் ஒழிப்பு செயலணியின் பிரதானி இராணுவத் தளபதியால் கூட கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

ஒருபுறம், அரசாங்கம் வைரஸின் பிறழ்வு விகாரங்கள் பரவுவதைப் பற்றி பேசுவதோடு மறுபுறம் மக்களை வீடுகளை விட்டு வெளியேற வேண்டாம் என்றும் வலியுறுத்துகிறது. அவ்வாறே நாடு முடக்குதலை மேற்கொள்ளாது என்றும் கூறுகிறது.

கொவிட் கட்டுப்படுத்தல் சார்ந்த விடயங்களை தனது அரசியல் நிகழ்ச்சிநிரலின்பால் தொடர்ச்சியாக முடிவுகளை எடுத்த அரசாங்கம், இன்று மக்களின் உயிர்களைக் கொன்றுகொண்டே இருக்கிறது. இந்தப் பிரச்சினையைத் தீர்க்க மக்களின் வாழ்க்கையை கடவுளிடம் ஒப்படைக்க அரசாங்கம் முன்மொழிகிறது.

இதைக் கூறியது அரசாங்க அமைச்சரவையின் ஊடகப் பேச்சாளர்களில் ஒருவரே. எனவே, இதை ஒரு எளிய அறிக்கையாக நிராகரித்துவிட முடியாது. அரசாங்கத்தின் முந்தைய நடவடிக்கைகள் புராண சித்தாந்தத்தில் கொவிட் பரவல் நோயைக் குணப்படுத்த முயன்றதென்பது இரகசியமல்ல. முட்டிகளை கீழே போடுதல், காளி பானம் மற்றும் ரிதிகல பானம் போன்ற திட்டங்களை செயற்படுத்த அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள் யதார்த்தமான உதாரணங்களாகும். வேறு வழியின்றியே சாதாரண மக்கள் உதவிக்காக கடவுளிடம் திரும்புகிறார்கள்.

அரசாங்க ஊடகப் பேச்சாளர் கடவுளிடம் மக்களை ஒப்படைப்பதன் கருத்தின் மூலம், இந்தத் தொற்றுநோயை கட்டுப்படுத்த அரசாங்கத்திடம் எந்தத் திட்டமும் இல்லை என்பதுவே தெளிவாகிறது.

நாட்டுமக்கள் தாமாகவே தங்களை பாதுகாத்துக் கொள்ளவேண்டும் என்பதுவே அரசாங்கத்தின் எண்ணமாக உள்ளது. நாட்டின் பொருளாதாரம் சரிந்துவிட்டதாலும், சர்வதேச அரங்கில் நம்பிக்கை முறிந்துவிட்டதாலும் நாட்டை முடக்கிவைத்து விட்டு மக்களுக்கு ஆதரவளிக்க முடியாத அரசாங்கம், சிறுபிள்ளைத்தனமான முயற்சியை மேற்கொண்டுள்ளது. நாடு முடக்கப்பட்டால் மக்களுக்கு நிவாரணம் அளிக்கும் பொருளாதார ஆற்றல் அரசாங்கத்திற்கு இல்லை என்று நாடாளுமன்றத்தில் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க கூறிய அறிக்கையால் இது உறுதி செய்யப்படுகிறது.

அரசாங்கம் இப்போது என்ன செய்கிறது? பொது ஊழியர்களை வேலைக்கு அழைப்பது, பகுத்தறிவற்ற பயணக் கட்டுப்பாடுகள், ஊடக வெளியீடுகள் மற்றும் வர்த்தமானி அறிவிப்புகள் போன்ற அபத்தமான செயல்களில் ஈடுபட்ட வண்ணம் நாட்டு மக்களின் உயிருக்கு ஆபத்தை விளைவித்துக்கொண்டிருக்கிறது. நாளுக்கு நாள் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை நான்கு இலக்கங்களை எட்டும்போது தினசரி இறப்பு எண்ணிக்கை மூன்று இலக்கமாக உயரும்போது மனிதப் படுகொலையில் ஈடுபடுவதன் மூலம் கொவிட் தொற்றுநோயை கட்டுப்படுத்துவதற்காகவா நாடு மூடப்படாதுள்ளது என்று நாங்கள் அரசாங்கத்திடம் கேட்கிறோம். ஆணவம், அதிகாரத்தில் உள்ளமையால் உண்மையைப் புரிந்துகொள்ளாமை மற்றும் திறமையின்மை ஆகியவை இன்று அரசாங்கத்தின் மூன்று தூண்களாக மாறிவிட்டன. இந்த நேரத்தில் ஏற்படும் ஒவ்வொரு உயிர்ச்சேதத்திற்கும் அரசாங்கமே பொறுப்பு.

இந்த முக்கியமான நேரத்தில், ஐக்கிய மக்கள் சக்தியின் அனைத்து அரசியல் கட்சிகளும் நாட்டுமக்களை மருத்துவ ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலின்பேரில் சுயமாக முடங்கிக் கொள்ளுமாறு அழைப்பு விடுக்கின்றன. குறைந்தபட்சம் தீர்மானமிக்க அடுத்த பத்து நாட்களுக்காவது அதன் செயற்பாட்டிற்கு பங்களிக்குமாறு வேண்டுகிறோம்.

ஏனென்றால், மக்களின் உயிரைக் காப்பாற்றுவதற்கான திட்டங்கள் அல்லது தேவைகள் அரசாங்கத்திடம் இல்லை என்பது தெளிவாகத் தெரிகிறது என்பதலாகும்.

# இன்றைய ராசி பலன்

நாள்: 19.08.2021 வியாழக்கிழமை – ஆவணி 03

**ஜோதிடர் நற்பவி**

தொலைபேசி இலக்கம் : 0715346213/0714037141

**சுப நேரங்கள்**
காலை 11.08- 12.01
பகல் 1.08- 1.47

**பிரம்ம முகூர்த்தம்**
மாலை 4.34 -5.21

**அசுப நேரங்கள்**

**ராகு காலம்**
பகல் 1.48-3.20

**குளிகை காலம்**
காலை 9.11-10.44

**எமகண்ட காலம்**
காலை 6.07 - 07.40

**துர் முகூர்த்தம்**
காலை 10.11 - 11.00
மாலை 3.07- 3.56

**மேடம்** பணியிடங்களில் திறமைகள் ஆய்வுக்கு உட்படுத்த படலாம். பெண்களின் உடல்நலத்தில் சிறிய பிரச்சினைகள் உண்டாகலாம்.

**ரிஷபம்** வணிகத்தில் நிலைமைகள் சீராகும். பணிகளில் சில மாற்றங்கள் நிகழலாம். காதலர்களிடையான உறவில் சகிப்புத்தன்மை நன்மை.

**மிதுனம்** தம்பதியரிடையே அன்பு அதிகரிக்கும். திறமையின் வெற்றிகளில் இல்லத்திலும் மகிழ்ச்சி நிலவும். வணிக வளர்ச்சி உண்டாகும்.

**கடகம்** வாகனம் மற்றும் வாகன உதிரிப் பாகங்கள் தொழிலில் முயற்சிகள் நன்மை தரும். வேலைக்கான நேர்முகத் தேர்வில் நல்லநிலை உருவாகும்.

**சிம்மம்** பிள்ளைகளின் கல்வி விடயங்களிலும், செலவுகளிலும் கவனம் தேவைப்படலாம். வணிகத்தில் நிதி நிலைமையால் கவலை உண்டாகலாம்.

**கன்னி** கடன் கொடுப்பதிலும், பிறருக்கு பிணையாக கடன் வாங்குவதிலும் அதிக கவனம் தேவைப்படலாம். வியாபாரிகளுக்கு நல்ல நாளாக அமையலாம்.

**துலாம்** ஏற்றுமதி தொழிலில் புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கலாம். சில பிரச்சினைகள் தோன்றினாலும், இல்லத்தில் மகிழ்ச்சி நிலவும்.

**விருச்சிகம்** பண விடயங்களில் மகிழ்ச்சி உண்டாகும். விற்க வேண்டிய காணி/வீடு விடயங்களில் நன்மை உண்டாகலாம்.

**தனுசு** இலக்கிய ஆர்வலர்களுக்கு மகிழ்ச்சி உண்டாகும். பணிகளில் திறமைகளுக்கு பாராட்டும், பணி மாற்றங்களும் உருவாகலாம். இறையருளால் நல்ல நாளாக அமையலாம்.

**மகரம்** கல்வியில் கவனம் தேவைப்படலாம். பிரச்சினையான நேரங்களில் இறை தியானம் நன்மை. புதிய பணி நிலைகளும் உண்டாகலாம்.

**கும்பம்** தாய்-தந்தையரின் ஆலோசனைகள் நன்மை தரும். பிள்ளைகளின் வேலை விடயங்களில் மகிழ்ச்சி உண்டாகும். இறையருளால் மனதில் நல்ல நிலை உண்டாகலாம்.

**மீனம்** வணிகத்தில் புதிய நன்மைகளும், பணிகளில் பிரச்சினைகள் நீங்கப் பெறுதலும் உருவாகலாம். சில வெற்றிகளில் மகிழ்ச்சியும், இல்லத்தில் அமைதியான சூழலும் உருவாகும்.

# கம்பஹாவில் குழந்தை பிரசவித்த ஆறாவது நாளில் தாய் மரணம்

கம்பஹா மாவட்ட வைத்தியசாலையில் குழந்தை பிரசவித்த ஆறாவது நாளில் தாயொருவர் கொரோனா தொற்று காரணமாக உயிரிழந்துள்ளார்.

தெல்கொடவில் வசித்த 33 வயதுடைய தாயொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொதுச் சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

குழந்தைப் பிரசவத்துக்காக கடந்த 11 ஆம் திகதி குறித்த தாயார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அதன் பின்னர் அவருக்கு சுவாசப் பிரச்சினை உள்ளிட்ட கொரோனா நோய்க்குரிய அறிகுறிகள் தென்பட்டுள்ளன. இதனையடுத்து அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையின்போது கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இதன் காரணமாக சத்திரசிகிச்சை மூலம் குழந்தை பிரசவிப்பதற்கான ஆயத்தங்களை வைத்தியர்கள் மேற்கொண்டனர். இந்நிலையில், குழந்தை பிரசவித்தபோதிலும் கடுமையாக நோய்வாய்ப்பட்டிருந்த தாயார் ஆறு நாட்களின் பின்னர் உயிரிழந்துள்ளார்.

கொரோனா வைரஸின் பாதிப்பு குறித்த தாயாருக்கு மிக அதிகமாகக் காணப்பட்டதாகவும், பிறந்த சிசு தேகாரோக்கியத்துடன் உள்ளதாகவும் வைத்தியசாலையின் பணிப்பாளர் சமன் பத்திரண தெரிவித்துள்ளார்.




## கொரோனா தொற்றுக்குள்ளானோர் விபரம்

| மொத்த பாதிப்பு | சிகிச்சை பெறுவோர் | குணமடைந்தோர் | புதிதாக அடையாளம் | மரணம் |
|---|---|---|---|---|
| 3,65,683 | 42,721 | 3,16,528 | 3,609 | 6434 |

# கொரோனா தகவல்களுக்கு பண்டாரகமவில் புதிய தொலைபேசி இலக்கம் அறிமுகம்

பண்டாரகமவில் கொரோனா தொற்றுக்குள்ளாவோரின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்து வருவதால் கொரோனா தகவல்கள் மற்றும் நோயாளர் பற்றிய தகவல்களை வழங்குவதற்கு பிரதேச சபையினால் புதிய இலக்கம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் 0383132999 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு தகவல்களைப் பெறவும், வழங்கவும் முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்தும் நோக்கில் புதிய தொலைபேசி இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக பண்டாரகம பிரதேச சபைத் தலைவர் தேவேந்திர பெரேரா தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பண்டாரகமவில் 400 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜன் பரிசோதனைகளின் அறிக்கை கடந்த 13 ஆம் திகதி கிடைக்கப்பெற்றுள்ளது. இதனடிப்படையில் அவர்களில் 350 பேர் தொற்றுக்குள்ளாகியமை கண்டறியப்பட்டுள்ளதாக பொதுச் சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர். பண்டாரகமவில் கடந்த மூன்று மாதங்களில் மூவாயிரத்து 866 பேர் தொற்றுக்குள்ளாகியுள்ளதுடன், 56 பேர் உயிரிழந்துள்ளனர்.

இவ்வாறு தொற்றுக்குள்ளானோரில் 48 கர்ப்பிணிகளும் அடங்குவதாக பொதுச் சுகாதார அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

# பதுளையில் வீடுகளில் நோயாளர்களை பராமரிக்க முடியாத இக்கட்டான நிலை

## பொதுச் சுகாதார அதிகாரிகள் சங்கம் சுட்டிக்காட்டு

பதுளையில் நோயாளர்களை வீடுகளில் வைத்துப் பராமரிக்க முடியாத சூழ்நிலை காணப்படுவதாக மாவட்ட பொதுச் சுகாதார அதிகாரிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

குறிப்பாக பெருந்தோட்டப் பகுதிகளில் லயன் குடியிருப்புகளில் நபர்களை தனிமைப்படுத்தல் மற்றும் அவர்களுக்கான கழிவறை வசதிகளை செய்துகொடுப்பது இயலாத காரியம் எனவும் அவ்வமைப்பு தெரிவித்துள்ளது.

பதுளையில் சுமார் ஆயிரத்துக்கும் அதிகமான நோயாளர்கள் வீடுகளில் பராமரிக்கப்படுகின்றனர். அவ்வாறு பராமரிப்பதற்கு அரச சுற்றுநிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள வகையில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளதாக மாவட்ட பொதுச் சுகாதார அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் டி.எம்.ஏ.ஆர். திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

பதுளை மாவட்டத்தில் 59 பொதுச் சுகாதார அதிகாரிகள் மாத்திரமே பணியில் ஈடுபட்டுள்ளார்கள். அவர்களில் சிலர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளனர். இந்நிலையில் வீடுகளில் பராமரிக்கப்படும் நோயாளர்களை கண்காணிப்பதிலும், அவர்களுக்கு வசதிகளைச் செய்துகொடுப்பதிலும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளோம்.

அத்துடன் பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு 10 நாட்களின் பின்னரே அறிக்கைகள் கிடைக்கப் பெறுகின்றன. இது பாரதூரமான பின்விளைவுகளை ஏற்படுத்தும். நாம் எதிர்நோக்கியுள்ள சூழ்நிலை குறித்து உரிய அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியுள்ளோம் என்றார்.

# மாத்தறையில் 400 பேருக்கு தொற்று

மாத்தறையில் நேற்று முன்தினம் மாத்திரம் 400 பேர் கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர். அந்த மாவட்டத்திலுள்ள 17 பொதுச் சுகாதார அதிகாரி காரியாலயத்துக்குட்பட்ட பகுதியிலேயே இவ்வாறு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை, மாத்தறையில் ஆயிரத்து 451 வீடுகளில் 4 ஆயிரத்து 694 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தனிமைப்படுத்தப்பட்டிருந்த நபர் வர்த்தகத்தில் ஈடுபட்டபோது கைது

கொரோனா தொற்றுப்பரவல் காரணமாக வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த நிலையில், நிட்டம்புவவில் வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்ட நபர் ஒருவரை சுகாதார அதிகாரிகளின் அறிவுறுத்தலின்பேரில் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

குறித்த வர்த்தகரின் வீட்டிலுள்ளவர்களுக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளமை காரணமாக தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். எனினும், தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி நிட்டம்புவவில் உள்ள அவரது வர்த்தக நிலையத்தைத் திறந்து வியாபாரம் நடத்தியுள்ளார்.

இது தொடர்பாக பொதுமக்களால் வழங்கப்பட்ட தகவலையடுத்து வர்த்தக நிலையத்தை மூடுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டதாக அத்தனகல்லவுக்குப் பொறுப்பான பொதுச் சுகாதார அதிகாரி மனில் சோமதிலக தெரிவித்தார். அந்த வர்த்தகர் முதலாவது தடுப்பூசியை மாத்திரம் பெற்றுக்கொண்டவர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# துளிச் செய்திகள்

எல்பிட்டியவில் அரச வங்கியொன்றில் மூவருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளதையடுத்து, வங்கியை தற்காலிகமாக மூடுவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

மஹரகம பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் மேலும் நான்கு பொலிஸ் அதிகாரிகளுக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே 12 பேர் தொற்றுக்குள்ளாகியுள்ள நிலையில், 18 பேரை தனிமைப்படுத்துவதற்கு சுகாதார அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

ஹட்டனில் அரச ஊழியர்கள் ஆயிரத்து 296 பேருக்கு சினோபார்ம் இரண்டாம் கட்ட தடுப்பூசி பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பதுளையில் எழுமாறாக மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர். மற்றும் அன்ரிஜன் பரிசோதனைகளில் 60 வீதமானோர் கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்படுவதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பதுளை கிளையின் தலைவர் வைத்தியர் பாலித ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கம்பஹா மாவட்டத்தில் நேற்றுக் காலை ஆறு மணியுடன் நிறைவடைந்த 24 மணிநேரங்களில் 2 ஆயிரத்து 46 பேருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. அங்கு 29 ஆயிரத்து 594 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

களுத்துறை மாவட்ட வைத்தியசாலையில் பெரும் இடநெருக்கடி காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அங்கு கொரோனா தொற்று காரணமாக நேற்று முன்தினம் 18 பேர் உயிரிழந்துள்ளனர்.

தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 284 பேர் பொலிஸாரால் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்கள் மீது வழக்குப் பதிவுசெய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

புத்தளம் நகரத்தில் உள்ள அனைத்து வர்த்தக நிலையங்களையும் இன்றுமுதல் எதிர்வரும் 25 ஆம் திகதிவரை மூடுவதற்கு வர்த்தக சங்கத்தினர் தீர்மானித்துள்ளனர்.



நீதிமன்ற அதிகாரிகளுடன் நடத்தப்பட்டதாகக் கூறப்படும் மாநாடு தொடர்பில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தீவிரமாகக் கவனம் செலுத்தியுள்ளது.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், பிரதம நீதியரசர் மற்றும் நீதிச் சேவை ஆணைக்குழுவின் இரண்டு நீதிபதிகளுக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளது.

அந்த மாநாட்டில் கலந்துரையாடப்பட்டதாகக் கூறப்படும், ஊடகங்களில் வெளியான சில விடயங்கள் இந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

தொழிற்சங்கத்தினரின் எதிர்ப்பு நடவடிக்கை, நீதிமன்றத்துடன் தொடர்புடைய விடயம் தொடர்பில் கலந்துரையாடல், நாட்டில் நிலவும் தொற்று நிலைமைக்கு மத்தியில் பொதுமக்கள் ஒன்றுகூடுவதைக் கட்டுப்படுத்துவதற்கு குற்றவியல் வழக்கின் ஏற்பாடுகளிலுள்ள சரத்துக்களை பயன்படுத்தும் விதம் தொடர்பில் நீதிமன்ற அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்குதல், எதிர்ப்புகளை ஒடுக்குவதற்கு பொலிஸாரின் கோரிக்கைக்கு அமைய உத்தரவுகளை பிறப்பிப்பதற்கு அழுத்தம் விடுக்க முயற்சிக்கப்பட்டதாக நீதிமன்ற அதிகாரிகளிடையே நிலைப்பாடொன்றை ஏற்படுத்தல், ஆகிய விடயங்கள் இதன்போது கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளன.

வழக்கு விசாரணையின் போது, வழக்கின் தன்மையை அடிப்படையாகக் கொண்டு, வேறு விடயங்களை ஆராய்வதிலிருந்து சுதந்திரமாக நீதிமன்ற அதிகாரிகள் செயற்படுகின்றார்கள் என்ற நம்பிக்கை வழக்குத் தொடுனர்களுக்கும், அவர்களின் சட்டத்தரணிகளுக்கும் காணப்படல் வேண்டும்.

இந்த விடயம், நீதிமன்ற சுயாதீனம் மற்றும் சட்டவாட்சியின் அடிப்படையாகும் என்ற புரிதல் நீதிபதிகளுக்கு உள்ளதென அந்த கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நீதியை நிலைநாட்டுவது மாத்திரமன்றி, நிலைநாட்டப்படும் என காண்

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2021, ஓகஸ்ட் 19 ஆம் திகதி, வியாழக்கிழமை

# நீதித்துறையில் சுயாதீனம் தேவை!

பிக்க வேண்டியதும் அவசியமானது என்ற நிலைப்பாட்டிற்கு, தற்போது வெளியாகும் விடயங்கள் முரணானவை என சட்டத்தரணிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

குறித்த மாநாட்டின் மூலம், நீதிமன்ற விடயங்களை நிறைவேற்றுகையில், அதனை முன்னெடுக்க வேண்டிய விதம் தொடர்பில் அழுத்தம் அல்லது நீதிமன்றம் சார்ந்த எண்ணம் மற்றும் விருப்பத்தைப் பயன்படுத்துவதைத் தவிர்க்கும் எண்ணம் ஏதேனும் உள்ளதென்று, நீதிபதிகள் அல்லது பொதுமக்களின் மனங்களில் தோன்றக்கூடாது என சட்டத்தரணிகள் சங்கத்தின் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசியலமைப்பில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் சட்டக் கோட்பாடு இல்லாமற்போனால், இந்த நிறுவனங்கள் சுயாதீனமானவை என்ற நிலைப்பாடு குறைவடையும் அல்லது அற்றுப்போகும் என சட்டத்தரணிகள் சங்கம் குறிப்பிட்டுள்ளமையானது நியாயமானதே.

எவ்வாறான கடினமான சூழ்நிலையிலும் வரையறைகள் இன்றி பேணப்பட வேண்டிய கௌரவத்திற்கு, இவ்வாறான மாநாடுகள் தொடர்பில் தற்போது வெளியாகியுள்ள விடயங்களூடாக எதிர்மறையான அழுத்தங்கள் இல்லை என்பதை உறுதி செய்வதே, பிரதம நீதியரசர் தலைமையிலான நீதிச்சேவை ஆணைக்குழுவிற்கு இந்தக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டதன் நோக்கமாகும்.

இதே விடயத்தை நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் உரையாற்றிய ஜே.வி.பி. தலைவர் அனுரகுமார திசாநாயக்க இந்த விடயத்தை சுட்டிக்காட்டினார். இதில், மாநாடு என்ற பெயரில் அழைக்கப்பட்டு போராட்டத்தில் ஈடுபடுபவர்களுக்கு பிணை வழங்குவது தொடர்பில் அழுத்தம் கொடுக்கப்பட்டது. நீதிச்சேவை ஆணைக்குழுவின் தலைவர் அங்கு உரையாற்றினார். கைதாகுவோரை எந்தெந்த சட்டங்களின் அடிப்படையில் விளக்கமறியலில் வைக்கலாமென்பதற்கு விளக்கமளித்தனர். பிணை வழங்கப்பட்ட தீர்ப்புகள் தவறானவை என கூறப்பட்டது. இந்த தீர்ப்புகள் நீதிபதிகள் பதவி உயர்வு, வெளிநாட்டு புலமைப்பரிசில்களில் செல்வாக்கு செலுத்தும் எனக் கூறப்பட்டுள்ளது. ''இதுவா ஜனநாயகம்..?'' என அனுரகுமார கேள்வியெழுப்பினார். இதன் பின்னர், நாடாளுமன்ற சபையில் கருத்து வெளியிட்ட நீதியமைச்சர் அலி சப்ரி இந்த விவகாரம் குறித்து பதிலளிக்க 2 வார கால அவகாசத்தைக் கோரினார்.

நீதித்துறை என்பது மிகவும் சுயாதீனம் மிக்கது. ஏனைய துறைகளை போன்று சந்தேகத்திற்கிடமான வகையில் நீதித்துறை இருந்து விடமுடியாது. நீதிமன்றம் உட்பட்ட நீதித்துறையின் ஒவ்வொரு செயற்பாடும் சாதாரண மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்துவதாக இருக்க வேண்டும். அந்தவகையில் சட்டத்தரணிகள் சங்கத்தின் கடிதம் மற்றும் ஜே.வி.பி. தலைவரின் கருத்துகளை கருத்திற்கொண்டு உரிய பதிலை நீதியமைச்சர் வழங்க வேண்டும்.

# அமைச்சரவைத் தீர்மானங்கள்

## 17.08.2021 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்பட்ட முடிவுகள்




**01. எம்பிலிப்பிட்டிய விவசாயிகளின் தானியப் பாதுகாப்பு நிலையத்தை மசாலாப் பொருட்கள் சார்ந்த உற்பத்திகள் சந்தைப்படுத்தல் சபைக்கு குத்தகை அடிப்படையில் வழங்கல்.**

2016 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட யோசனைக்கமைய 200 மில்லியன் ரூபா செலவிடப்பட்டு நவீன உபகரணங்களுடன் கூடிய ஆய்வுகூடம் மற்றும் தானியங்களை உலர்த்தும் இயந்திரங்களுடன், 4000 மெட்ரிக் தொன் இயலளவு கொண்ட தானியப் பாதுகாப்பு நிலையம் இரத்தினபுரி மாவட்டத்தில் எம்பிலிப்பிட்டிய பிரதேச செயலகப் பிரிவில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. குறித்த தானியக் களஞ்சியத்தின் கூரையில் 100 கிலோவாட் இயலளவுடன் கூடிய சூரிய மின்கலத் தொகுதி பொருத்தப்பட்டுள்ளது. இத்தானியப் பாதுகாப்பு நிலையத்தின் அனைத்துச் சொத்துகளும் இரத்தினபுரி மாவட்டச் செயலாளரின் பொறுப்பில் காணப்படுவதுடன், மாவட்டச் செயலாளரின் தலைமையிலான ஆலோசனைக் குழுவின் மூலம் குறித்த நிலையத்தின் முகாமைத்துவப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்நிலையத்தை மிகவும் பயனுள்ள வகையில் பயன்படுத்தும் நோக்கில் மசாலாப் பொருட்கள் சார்ந்த உற்பத்திகள் சந்தைப்படுத்தல் சபைக்கு குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு நிதி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

**02. இலங்கையில் தரமான வாயுகோளத்தின்அனுகூலங்களை நிலைபேறான வகையில் பேணும் கருத்திட்டம்.**

கொவிட்-19 தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக அதிகமான நாடுகள் முடக்கப்பட்டமையாலும், பயணக்கட்டுப்பாடுகளை மேற்கொண்டமையாலும், வீதிகளில் பயணிக்கும் வாகனங்கள் குறைவடைந்தமையால், 2020 மார்ச் மாதம் தொடக்கம் அந்தந்த நாடுகளிலுள்ள நகரங்களில் வாயுகோளத்தின் தரம் அதிகரித்திருக்கின்றமை கண்காணிக்கப்பட்டுள்ளது.

தெற்காசிய வலயத்தில் கூடுதலான நகரங்களில் கொவிட்-19 தொற்றுப் பரவலுக்கும், வாயுகோளத்தின் தரத்திற்கும் இடையிலான தொடர்பு பற்றிய மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும், அது தொடர்பாக இலங்கையில் மேற்கொள்ளப்பட்டுள்ள ஆய்வுக் கற்கைகள் மிகவும் குறைந்தளவிலேயே காணப்படுகின்றது. இந்நிலைமையில், ஐக்கிய நாடுகளின் சுற்றாடல் வேலைத்திட்டத்தின் 'இலங்கையில் தரமான வாயுகோளத்தின் அனுகூலங்களை நிலைபேறான வகையில் பேணும் கருத்திட்டம் அடையாளம் காணப்பட்ட 25 செயற்பாடுகளை கொவிட் - 19 தொற்றுக் காலத்தில் நடைமுறைப்படுத்தல்' எனும் பெயரிலான கருத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கான ஒத்துழைப்புகளை வழங்குவதற்கு விருப்பம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மொத்த மதிப்பீட்டுச் செலவாக 15,000 அமெரிக்க டொலர் கொண்ட இக்கருத்திட்டத்தின் மூலம், கொவிட்-19 மற்றும் கொழும்பு நகர வாயுகோளத்தின் தரம் தொடர்பான கொள்கை ரீதியானதும் தொழில்நுட்ப ரீதியானதுமான பகுப்பாய்வை மேற்கொள்வதற்கும், வாயுகோளத்தின் தரத்தை அதிகரிப்பதற்குமான கொள்கை வகுப்புகளை மேற்கொள்ள வேண்டிய துறைகளை அடையாளம் காணல், வாயுகோளத்தின் தரத்தை நிலைபேறான தாக்கல் மற்றும் தூய்மையான வாயுக்களின் தரத்தை அதிகரித்தல் போன்ற செயற்பாடுகளில் பெறுபேறுகளைக் கொண்ட உயர்ந்த மட்டத்திலான வேலைத்திட்டங்களை ஒருங்கிணைப்பு செய்வதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. குறித்த கருத்திட்டத்தின் பெறுபேறுகள் மற்றும் கண்டுபிடிப்புகள் கொழும்பு நகரத்தில் தொற்று நிலைமையின் பின்னரான வாயுகோளத்தின் தரத்தை நிலைபேறான வகையில் மேம்படுத்தல் தொடர்பான பங்காளர்களின் உரையாடலில் பகிர்ந்து கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கமைய, குறித்த கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக சுற்றாடல் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**03. தூய சிலோன் தேயிலை (Pure Ceylon Tea) ஏற்றுமதிக்கான வர்த்தகக் குறியீட்டு நாமத்தை மேம்படுத்தும் யோசனை முறை.**

2015 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட யோசனைக்கமைய தேசிய புலமைச் சொத்துக்கள் பணியகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள இலங்கையர்களுக்குச் சொந்தமான சிங்கத்தின் இலச்சினை பொறிக்கப்பட்ட தூய சிலோன் தேயிலை வர்த்தகக் குறியீட்டு நாமத்தை மேம்படுத்துவதற்காக விநியோக விரிவாக்கல் செலவின் 50 வீதமான சீர்செய்தல் ஒதுக்கீடு வழங்கும் ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. குறித்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2015/2016 காலப்பகுதியில் 20 கம்பனிகளும், 2018/2019 காலப்பகுதியில் 18 கம்பனிகளும் அனுகூலங்களைப் பெற்றுள்ளன. மிகவும் முன்னேற்றகரமான பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்வதற்காக சிலோன் தேயிலையை உலகளாவிய ரீதியில் ஊக்குவிக்கும் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, 2021/2022 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட வர்த்தகக் குறியீட்டு நாமத்தை ஊக்குவிக்கும் யோசனை முறையை மேலும் விரிவாக்கம் செய்து தற்போது 12 நாடுகளில் உலகளாவிய ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் காணப்படும் சிலோன் தேயிலை விற்பனை நிலையங்களை Ceylon Tea Shops and Houses) விரிவாக்கம் செய்வதற்குத் தேவையான ஊக்குவிப்புகளை மேற்கொள்வதற்காக பெருந்தோட்டத்துறை அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**04. பாடசாலைச் சீருடைத்துணி கொள்வனவு செய்தல் - 2022.**

2022 ஆம் ஆண்டுக்கான பாடசாலை சீருடைத்துணிக் கொள்வனவுக்காக உள்ளூர் துணி உற்பத்தியாளர்களிடமிருந்து விலைமனுக் கோரப்பட்டுள்ளது. உற்பத்தியாளர்கள் 05 பேர் விலைமனு சமர்ப்பித்துள்ளனர். அதற்கமைய, அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள நிரந்தர பெறுகைக்குழுவின் பரிந்துரைக்கமைய விலை பேரம் பேசிய பின்னர் உடன்பாடு தெரிவிக்கப்பட்ட விலைக்கு பாடசாலைச் சீருடைத்துணிகளை குறித்த விபரக் குறிப்புக்களுக்கமைய உற்பத்தி செய்து, பிரித்து, பொதியிட்டு கோட்டக் கல்வி வலயங்களுக்கு விநியோகிப்பதற்கான ஒப்பந்தங்களைக் பின்வரும் நிறுவனங்களுக்கு வழங்குவதற்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது:-

வேன்கார்ட் இன்டஸ்ரீஸ் (தனியார்) நிறுவனம்
தங்கொட்டுவ வீவிங் (தனியார்) கம்பனி
பிரபா டெக்ஸ் இன்டஸ்ட்ரீஸ்
க்ரியேடிவ் டெக்ஸ்டைய்ல் மில்ஸ் (தனியார்) கம்பனி
ஸ்டார் டெக்ஸ் (தனியார்) கம்பனி

**05. 2015 ஆம் ஆண்டு 05 ஆம் இலக்க தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை சட்டத்தை திருத்தம் செய்தல்.**

2015 ஆம் ஆண்டு 05 ஆம் இலக்க தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல்கள் அதிகார சபை சட்டத்தை சமகாலத் தேவைகளுக்குப் பொருத்தமான வகையில் திருத்தம் செய்வதற்காக 2019 மார்ச் மாதம் 12 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல்கள் அதிகாரசபையின் நடவடிக்கைகளை வினைத்திறனாகவும், பயனுள்ள வகையிலும் மேற்கொள்வதற்காக குறித்த சட்டத்தை மேலும் வலுவாக்கப்பட வேண்டுமென அடையாளம் காணப்பட்டுள்ளது. அதற்கமைய, பொதுமக்களுடைய கருத்துகளைக் கேட்டறிந்து மேலதிகமாக மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்களை அடையாளம் காண்பதற்காக குழுவொன்றை நியமிப்பதற்காகவும், அடையாளம் காணப்படும் குறித்த திருத்தங்களை உள்வாங்கி 2015 ஆம் ஆண்டு 05 ஆம் இலக்க தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல்கள் அதிகாரசபை சட்டத்தைத் திருத்தம் செய்வதற்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**06. 2018 ஆம் ஆண்டு 34 ஆம் இலக்க இழப்பீடுகளுக்கான அலுவலக சட்டத்தின் கீழ் இழப்பீடுகளை வழங்குவதற்காக கொள்கைகள் மற்றும் வழிகாட்டல்கள்.**

இழப்பீடுகளைப் பெற்றுக்கொள்வதற்கு தகைமை வாய்ந்த அழுத்தங்களுக்கு ஆளாகியவர்களை அடையாளம் காண்பதற்காகவும் பொருத்தமான வகையில் தனியாகவும், கூட்டாகவும் இழப்பீடுகளை வழங்குவதற்காக 2018 ஆம் ஆண்டு 34 ஆம் இலக்க இழப்பீடுகளுக்கான அலுவலக சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இழப்பீட்டு அலுவலகம் நிறுவப்பட்டுள்ளது. அதற்கமைய, அழுத்தங்களுக்கு ஆளாகியவர்களுக்கு தனியாகவும், கூட்டாகவும் இழப்பீடுகளை வழங்குவதற்காக கொள்கை வகுப்புக்களை மேற்கொள்வதற்கான பொறுப்புக்கள் குறித்த அலுவலகத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, தயாரிக்கப்பட்டுள்ள கொள்கைகள் மற்றும் வழிகாட்டல்களுக்காகவும், ஏற்புடைய நிரல் அமைச்சுடன் இணைந்து குறித்த கொள்கைகள் மற்றும் வழிகாட்டல்களை நடைமுறைப்படுத்துவதற்காகவும் நீதி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**07. மோசடிகளைத் தடுக்கும் கட்டளைச் சட்டம் திருத்தம் செய்தல்.**

இறுதி விருப்பு ஆவணக் கட்டளைச் சட்டத்தை திருத்தம் செய்வதற்காக 2021 ஜூலை மாதம் 19 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அங்கு நொத்தாரிசு ஒருவர் முன்னிலையில் அல்லாமல் ஆனாலும், சாட்சியாளர்கள் 05 பேர் முன்னிலையில் மாத்திரம் எழுதப்பட்டு ஒப்பமிடப்பட்ட இறுதி விருப்பு ஆவணத்தில் ஒப்பமிடும் போது இடம்பெறும் மோசடிகளைத் தடுப்பதே குறித்த திருத்தங்களின் நோக்கமாகும். ஆனாலும், சாட்சியாளர்கள் 05 பேர் முன்னிலையில் இறுதி விருப்பு ஆவணம் எழுதப்பட்டு ஒப்பமிடுவதற்காக, மோசடிகளைத் தடுக்கும் கட்டளைச் சட்டத்திலும் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டுமென அடையாளம் காணப்பட்டுள்ளது. அதற்கமைய, முன்மொழியப்பட்டுள்ள திருத்தங்களை உள்ளடக்கி மோசடிகளைத் தடுக்கும் கட்டளைச் சட்டத்தை திருத்தம் செய்வதற்காக நீதி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**08.சீதாவக்க ஏற்றுமதி பதனிடல் செயன்முறை வலயத்தில் அமைந்துள்ள பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தை மேம்படுத்தல்.**

இலங்கை முதலீட்டுச் சபையின் கீழ் இயங்கி வரும் சீதாவக்க ஏற்றுமதி பதனிடல் செயன்முறை வலயத்தில் அமைந்துள்ள பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் நாளாந்தம் சுத்திகரிக்கப்படும் 9,500 கனமீற்றர் கொள்ளளவு கொண்ட நீரின் அளவு 15,000 கனமீற்றர் கொள்ளளவுக்கு அதிகரிப்பதற்காக அமைச்சரவை இதற்கு முன்னர் அங்கீகாரம் வழங்கியுள்ளது. அதற்கமைய, முதலீட்டுச் சபை நிதியின் கீழ் குறித்த கருத்திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்காக பொருத்தமான ஒப்பந்தக்காரர் ஒருவரைத் தெரிவு செய்வதற்காக நிர்மாணத் தொழிற்றுறை அபிவிருத்தி அதிகாரசபையில் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விலைமனுக் கோரப்பட்டுள்ளது. அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள நிரந்தரப் பெறுகைக் குழுவின் பரிந்துரைக்கமைய ஒப்பந்தத்தை சியரா கன்ஸ்ட்ரக்ஷன் (தனியார்) கம்பனிக்கு வழங்குவதற்காக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**09. கொவிட் - 19 நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்குவதற்குத் தேவையான திரவ மருத்துவ ஒட்சிசன் 360,000 லீற்றர்களை இறக்குமதி செய்தல்.**

தீவிர கொவிட் - 19 நோயாளர்களுக்குத் தேவையான திரவ மருத்துவ ஒட்சிசன் வழங்குவதை உறுதிப்படுத்துவதற்காக, 120,000 லீற்றர் ஒட்சிசனை மாதாந்தம் இறக்குமதி செய்து களஞ்சியப்படுத்துவதற்காக இதற்கு முன்னர் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. தற்போது பரவி வரும் திரிபடைந்த கொவிட் வைரஸ் காரணமாக ஒட்சிசன் தேவைப்படும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமையால், போதுமானளவு ஒட்சிசனை நாட்டில் களஞ்சியப்படுத்துவதற்கு இயலுமான வகையில் தற்போது மாதாந்தம் இறக்குமதி செய்யப்படும் 120,000 லீற்றர்களுக்கு மேலதிகமாக 360,000 லீற்றர்களை இறக்குமதி செய்வதற்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**10. தடுப்பூசி கொள்வனவு செய்தல்.**

கொவிட் - 19 தொற்று நிலைமையிலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்காக முதலில் 14 மில்லியன் சனத்தொகைக்கு தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக திட்டமிடப்பட்டுள்ளதுடன், 2021 ஓகஸ்ட் மாதம் 09 ஆம் திகதி ஆகும் போது 19.49 மில்லியன் தடுப்பூசிகள் கிடைக்கப் பெற்றுள்ளன. குறித்த தடுப்பூசி மருந்துகளில் 11.26 மில்லியன்கள் முதலாம் கட்டத்திற்கும் 3.25 மில்லியன்கள் இரண்டாம் கட்டத்திற்கும் பயன்படுத்தப்பட்டுள்ளன. கொவிட் - 19 தொற்று தாக்கங்களைக் குறைக்கும் நோக்கில் 18 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் 2021 செப்டெம்பர் மாதம் 30 ஆம் திகதியாகும் போது தடுப்பூசிகளை வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆகவே, அதற்குத் தேவையான தடுப்பூசிகளை அமைச்சரவையின் பேச்சு வார்த்தை உடன்பாட்டுக் குழு கலந்துரையாடி தீர்மானிக்கப்பட்ட அலகொன்றுக்கான விலையில் 09 மில்லியன் சினோபார்ம் தடுப்பூசிகளையும் 14 மில்லியன் பைசர் தடுப்பூசிகளையும் கொள்வனவு செய்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

**11. தனியார் - கூட்டுறவு பங்குடமையின் கீழ் புதிய அரிசி ஆலைகளைத் ஸ்தாபித்தல்.**

எமது நாட்டின் வருடாந்த அரிசி நுகர்வு அண்ணளவாக 2.2 மில்லியன் மெட்ரிக் தொன்களாகும். 2020/2021 பெரும்போகம் மற்றும் 2021 சிறுபோக நெல் விளைச்சல் அண்ணளவாக 4.8 மில்லியன் மெட்ரிக் தொன்களாக அமைவதுடன், குறித்த நெல் அளவில் 3.2 மில்லியன் மெட்ரிக் தொன் அரிசி உற்பத்தி செய்ய முடியும். சந்தையில் அரிசியின் விலை தொடர்ச்சியாக அதிகரித்த வண்ணமுள்ளது. இந்நிலைமைக்குத் தீர்வாக நெல் விளைச்சலில் குறிப்பிடத்தக்களவு தொகையை கூட்டுறவுச் சங்கங்களுடன் இணைந்து கொள்வனவு செய்து அரிசியை உற்பத்தி செய்து நியாய விலையில் விற்பனை செய்யும் நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக கூட்டுறவுச் சேவைகள், சந்தைப்படுத்தல் மேம்பாடு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சு திட்டமிட்டுள்ளது. அதற்கமைய, தனியார் - கூட்டுறவு பங்குடமையின் கீழ் குருநாகல், அனுராதபுரம், மட்டக்களப்பு, அம்பாந்தோட்டை மற்றும் அம்பாறை போன்ற மாவட்டங்களில் நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய 05 அரிசி ஆலைகளை தாபித்து, அடுத்த போகத்திலிருந்து நெல் கொள்வனவு செய்து அரிசியை உற்பத்தி செய்து, லங்கா சதொச மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விநியோகிப்பதற்காக வர்த்தக அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**12. கொவிட்-19 தொற்று நிலைமையால் கல்வி நடவடிக்கைகளைத் தொடர்ச்சியாக மேற்கொள்வதற்காக தொலைக்காட்சி சேவைகளின் ஒத்துழைப்புகளைப் பெறல்.**

கொவிட்-19 தொற்று நிலைமையால் பாடசாலைகளைத் திறக்க சிரமங்கள் காணப்படுவதால், மாணவர்களின் கல்வியை தொடர்ச்சியாக மேற்கொள்வதற்கு பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதன்கீழ் ஈ-தக்சலா கற்றல் முகாமைத்துவத் தொகுதி, இலங்கை ரூபாவாஹினி கூட்டுத் தாபனத்தின் 'ஐ' மற்றும் 'நேத்ரா' அலைவரிசைகளில் 'குருகுலம்' தொலைக்காட்சி கல்வி நிகழ்ச்சிகள் மற்றும் வீட்டு மட்டத்திலான கற்பித்தல் நிகழ்ச்சித்திட்டங்கள் தேசிய ரீதியில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

(தொடர்ச்சி 14 ஆம் பக்கம்...)

**மக்கள் கடிதம்**

*வாசகர்களே ,*

*உங்கள் ஊரிலுள்ள குறைநிறைகளை, பிரச்சினைகளை எங்களுக்குத் தபால் மூலமாகவோ, மின்னஞ்சலினூடாகவோ எழுத்துமூலம் தெரிவியுங்கள்.*

*பிரதி சனிக்கிழமைகளில் எமது பத்திரிகையில் வெளிவரவுள்ள மக்கள் கடிதம் பகுதியில் அவற்றைப் பிரசுரிப்போம்.*

thamilaneditor@gmail.com என்ற மின்னஞ்சலுக்கு அல்லது 0761393805 என்ற தொலைபேசி இலக்கத்தின் வட்ஸப்புக்கு அனுப்பலாம்.

# சுகாதாரத்துறை ஸ்தம்பிதமடைய முன்னர் விரைவாக 14 நாட்களுக்கு நாட்டை விஞ்ஞானபூர்வமாக முடக்குக!

## பிரதான வைத்தியசாலைகளின் எதிரில் தொழிற்சங்கங்கள் நேற்று அமைதிப் போராட்டம்




படப்பிடிப்பு: சமன் அபேசிறிவர்தன

விஞ்ஞானபூர்வமாக இரு வாரங்களுக்கு நாட்டை முடக்கி பி.சி.ஆர். பரிசோதனைகளின் எண்ணிக்கையை ஒரு இலட்சமாக அதிகரித்து, விரைவில் நோயாளர்களை அடையாளம் காணுமாறு அரசாங்கத்தை வலியுறுத்தி நாடுபூராகவுமுள்ள தெரிவுசெய்யப்பட்ட வைத்தியசாலைகளின் எதிரில் அரச தாதியர் சங்கம் உள்ளிட்ட பல்வேறு சுகாதார தொழிற்சங்கங்களினால் முன்னெடுக்கப்பட்ட அமைதிப் போராட்டம் நேற்று இடம்பெற்றது.

அதற்கமைய, கொழும்பு மற்றும் கண்டி தேசிய வைத்தியசாலைகள், கராப்பிட்டிய, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைகள் மற்றும் பதுளை, பலாங்கொடை, அங்கொடை, இங்கிரிய, மாகாண பொது வைத்தியசாலைகள் என்பவற்றில் இந்தப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

சுகாதாரத்துறை முழுமையாக வீழ்ச்சியடைவதற்கு முன்னர் 14 நாட்களுக்கு நாட்டை முழுமையாக முடக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் வலியுறுத்தினர்.

இதன்போது அரச தாதியர் சங்கத்தின் தலைவர் சமன் ரத்னபிரிய கருத்து தெரிவிக்கையில்,

கண்டி வைத்தியசாலையில் 200 வரையான பணியாளர்களுக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. வைத்தியசாலை கட்டமைப்பை எடுத்துக்கொண்டால் அநேகமானவர்களுக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. சுகாதாரப் பணிப்பிரிவில் 5 ஆயிரம் வரையிலானவர்களுக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு எந்த பதிலும் இதுவரையில் கிடைக்கபெறவில்லை.

அதன் காரணமாகவே விஞ்ஞான ரீதியாக நாட்டை முடக்க வேண்டும் என்று கோருகிறோம். அவுஸ்திரேலியாவில் ஒருவருக்கு தொற்று உறுதியானதும் அந்த பிரதேசத்தையே முடக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. ஒருவர் தொற்றுக்குள்ளானவராக அடையாளம் காணப்பட்டதும் நியூசிலாந்தையும் முழுமையாக முடக்குவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. ஆனால், எமது நாட்டில் நாளொன்றுக்கு 3 ஆயிரம் வரையில் நோயாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர்.

அதற்கமைய, நாட்டை முழுமையாக முடக்குவதற்கு முன்னர் தேவையான ஒட்சிசன், பி.சி.ஆர். பரிசோதனை தொகுதிகள் என்பவற்றை தயார் செய்து கொள்ள வேண்டியது அவசியமாகும். இராணுவத்தினரின் உதவியுடன் நோயாளர்களுக்கு தேவையான கட்டில் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக்கொண்டு அவசர நிலைமை இல்லாத நோயாளர்களை ஒதுக்கி, கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு முக்கியத்துவம் வழங்க வேண்டும்.

நாட்டை முடக்கி ஒரு நாளைக்கு ஒரு இலட்சம் வரையிலான பி.சி.ஆர். பரிசோதனைகளை அதிகரித்து கொரோனா நோயாளர்களுக்கு சிகிச்சையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

## தமிழக சிறப்பு அகதிகள் முகாமில் இலங்கையர் உடலைக் கிழித்து போராட்டம்

திருச்சி சிறப்பு முகாமில் கடந்த சில நாட்களுக்கு முன்னர் உண்ணாவிரதமிருந்த இலங்கைத் தமிழர்கள் நேற்று மீண்டும் தமது போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர். இதன்போது, ஒருவர் உடலினை கிழித்துக் கொண்டு போராட்டத்தில் ஈடுபட்டார்.

தமிழகத்தினுள் அடைக்கலம் புகுந்த ஈழத் தமிழர்களில் ஒரு பகுதியினர் சாதாரண அகதிகள் முகாமிலும், இன்னொரு பகுதியினர் திருச்சி சிறப்பு முகாமிலுமாக தங்க வைக்கப்பட்டுள்ளனர். தமது உறவுகளுடன் தம்மைச் சேர்ந்து வாழ அனுமதிக்குமாறு குறித்த போராட்டக்காரர்கள் கடந்த மாதம் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றினை முன்னெடுத்திருந்தனர்.

மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட அதிகாரிகள் உள்ளிட்டோர் கடந்த மாதம் போராட்டக்காரர்களை சந்தித்து நிலுவையிலுள்ள அவர்களின் வழக்குகளை விரைவாக முடித்து தாயகம் செல்ல விரும்புவோரை தாயகம் அனுப்புவதாகவும், ஏனையவர்களை சாதாரண முகாமிற்கு மாற்ற நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்திருந்தனர்.

காலங்கடந்தும் இன்னமும் தங்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை என்று தெரிவித்து ஈழத்தமிழர் ஒருவரே நேற்று தமது உடல்களைக் கிழித்துக்கொண்டு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

குறித்த சம்பவத்தில் ரமணன் (43) என்பவரே வயிற்றினைக் கிழித்து போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

படுகாயமுற்ற அவரை சிறைக்காவலர்கள் விரைந்து மாவட்ட அரசு மருத்துவமனைக்குக் கொண்டு சென்றுள்ளனர்.

குறித்த சம்பவத்தால் சிறப்பு முகாமில் பதற்றமான சூழ்நிலை உருவாகியுள்ளது.

## 48 மணிநேரத்தில் 46 பேருக்கு கொரோனா

**ஹட்டன் பிரதேசத்தில் மேலும் 09 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத் தப்பட்டதையடுத்து 48 மணிநேரத்தில் ஹட்டன் பிரதேசத்தில் 46 கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக டிக்கோயா நகர சபையின் சுகாதாரப் பிரிவு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.**

**அதற்கமைய, ஹட்டன் ஆரியகம, சுற்றுவட்டார வீதி உள்ளிட்ட பிரதேசங்களில் நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களுடன் தொடர்பினைப் பேணியவர்களை சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தவும் அவர்களை பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.**

## மதுபோதையில் மகளை மண்வெட்டியால் தாக்கி படுகொலைசெய்த தந்தை!

### காலியில் கொடூரம்

காலி மாவட்டம், வாடுவெலிவிட்டிய பிரதேசத்தில் நபர் ஒருவர், தனது 33 வயது மகளை மண்வெட்டியால் தாக்கிப் படுகொலை செய்துள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவத்தில் குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த ரெஷானி கோன்கஹகே என்பவரே படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

மதுபோதையில் வீட்டுக்கு வந்துள்ள தந்தை, தனது மகளின் தலையில் மண்வெட்டியால் தாக்கியுள்ளார் என்றும், இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த குறித்த பெண் பத்தேகம வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்படும் வழியில் உயிரிழந்துள்ளார் என்றும் நாகொட பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர் தினமும் மதுபோதையில் வீட்டுக்கு வந்து வன்முறையில் ஈடுபடுவது வழக்கம் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய நபரைப் பொலிஸார் கைதுசெய்துள்ள நிலையில், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ரூபாவின் மதிப்பை குறைக்குமாறு வங்கிகளால் கோரப்படவில்லை

### மத்திய வங்கி தகவல்

இலங்கை ரூபாவை மதிப்புக் குறைக்குமாறு உரிமம் பெற்ற வங்கிகளால் கோரப்படவில்லையென இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இது தொடர்பில் மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

உடனடியாகச் செயற்படும் விதத்தில் இலங்கை ரூபாவை மதிப்புக் குறைக்குமாறு உரிமம்பெற்ற வங்கிகளால் உத்தியோகபூர்வமாக கோரப்பட்டுள்ளது என்ற செய்திகள் பரப்பப்பட்டு வருவதை இலங்கை மத்திய வங்கி அவதானித்துள்ளது.

அத்தகைய செய்திகள் எவ்விதத்திலேனும் அடிப்படையற்றவை என பொதுமக்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுவதுடன், செலாவணி வீதத்தை நிர்ணயிப்பதன் மீதான இலங்கை மத்திய வங்கியின் நிலைக்கு அல்லது தொழிற்பாட்டுரீதியான ஏற்பாடுகளுக்கு இலங்கை மத்திய வங்கி எந்தவித மாற்றத்தையும் மேற்கொள்ளவில்லை.

சமூக வலைத்தளங்கள் ஊடாகவும், வழமையான ஊடகங்கள் ஊடாகவும் பரப்பப்பட்டு வருகின்ற தவறானதும், தவறாக வழிநடத்துகின்றதுமான தகவல்களை நம்பவேண்டாம் எனவும் பொதுமக்களுக்கு ஆலோசனை வழங்கப்படுகின்றது. இலங்கை மத்திய வங்கி விடுக்கும் ஏதேனும் உத்தியோகபூர்வ அறிக்கை, இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர், துணை ஆளுநர் அல்லது பெயர் மற்றும் பதவி மூலம் அடையாளப்படுத்தப்படுகின்ற இலங்கை மத்திய வங்கியின் எவரேனும் வேறு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் மூலமே வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## நிவ் டெல்மன் வைத்தியசாலையின் தலைவர் காலமானார்



கொழும்பு, வெள்ளவத்தை நிவ் டெல்மன் வைத்தியசாலையின் தலைவர் மொஹிதீன் ஹாஜியார் நேற்று காலமானார் .

அன்னாரின் ஜனாஸா ஜாவத்த ஜும்மா பள்ளிவாசல் மையவாடியில் நேற்று மாலை நல்லடக்கம் செய்யப்பட்டது.

கட்டிட நிர்மாணத்துறையில் முக்கிய பிரமுகரான தொழிலதிபர் மொஹிதீன், 1991 ஆம் ஆண்டு டெல்மன் வைத்தியசாலையை நிர்மாணித்தார். அவரின் மறைவுக்கு பலரும் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

## ரத்கம தகராறில் கை துண்டிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வந்த நபர் உயிரிழப்பு

**காலி, ரத்கம - சிறிகதுர பிரதேசத்தில் இரு தரப்பினருக்கிடையே கடந்த 14 ஆம் திகதி இடம்பெற்ற தகராறின்போது கை துண்டாக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டு வந்த நபர் உயிரிழந்துள்ளார்.**

**தாக்கப்பட்ட குறித்த நபர் கராப்பிட்டி ஆதார வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைபெற்று வந்த நிலையில், நேற்றிரவு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.**

**45 வயதான குறித்த நபர் தொடந்தூவ பகுதியைச் சேர்ந்தவராவார்.**

**பழைய தகராறு காரணமாக இரு குழுக்களுக்கிடையே ஏற்பட்ட மோதலில் ஒருவர் பலியானதுடன், பலர் காயமடைந்துள்ளனர்.**

**மேலும், இந்தச் சம்பவம் தொடர்பாக இரு தரப்பையும் சேர்ந்த நான்கு பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.**



புதிதாக நியமிக்கப்பட்டுள்ள வெளிநாட்டமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் நேற்று தனது கடமைகளை அமைச்சில் வைத்து பொறுப்பேற்றுக் கொண்டார். இந்நிகழ்வில், கல்வியமைச்சர் தினேஷ் குணவர்தன, பிராந்திய ஒத்துழைப்புக்கான இராஜாங்க மைச்சர் தாரக்க பாலசூரிய உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.



## பாணந்துறை வைத்தியசாலை பிணவறையில் இட நெருக்கடி; சடலங்களை உடனடியாக தகனம் செய்ய மாற்று நடவடிக்கை

### நகரசபைத் தலைவர் நந்தன குணதிலக தெரிவிப்பு

**யோ.தர்மராஜ்**

பாணந்துறை ஆதார வைத்தியசாலையில் கொரோனா நோயாளர்களின் மரணங்கள் வேகமாக அதிகரிப்பதால், வைத்தியசாலையிலுள்ள உடல்களை உடனடியாக தகனம் செய்வது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக பாணந்துறை நகரசபை தலைவர் நந்தன குணதிலக தெரிவித்துள்ளார்.

அத்தோடு, வாகன சக்கரங்கள் மற்றும் விறகுக் கட்டைகளைக் கொண்டு உடல்களை எரிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

உடல்களைத் தகனம் செய்வதற்காக மயானங்களுக்கு வெளியே தற்காலிக தகனசாலைகளை அமைப்பதற்கான திட்டங்கள் இருந்தாலும், அதற்கு செலவாகும் அதிக பணத்தை செலவளிக்க உள்ளூராட்சி மன்றங்களுக்கு முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பாணந்துறை நகரப் பகுதியில் ஒரேயொரு தகன நிலையம் மாத்திரமே இருக்கின்றது. இந்நிலையில், அங்கு ஒரு நாளைக்கு அதிகபட்சம் 3 உடல்களை மாத்திரம் எரிக்க முடியும். இதனால், சில உடல்களை கொரகானா, மொரட்டுவ, வாதுவ மற்றும் சுற்றியுள்ள பகுதிகளிலுள்ள தகன நிலையங்களுக்கு அனுப்ப ஏற்பாடு செய்யப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

ஆனால், நாளுக்கு நாள் கொரோனா மரணங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் மயானங்களில் கடுமையான இடநெருக்கடி ஏற்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உடல்களை மற்ற பகுதிகளில் அடக்கம் செய்ய அரசு திட்டமிட்டிருந்தாலும், அந்தப் பகுதிகளிலுள்ள மக்கள் அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கலாம் என்பதால் அதை செய்ய முடியாதுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பாணந்துறை ஆதார வைத்தியசாலையின் பிணவறையில் அதிகபட்சம் 37 உடல்களை மாத்திரம் தேங்கிய வைக்கக் கூடி திறன் இருந்தாலும், தற்போது கிட்டத்தட்ட 50 இற்கும் மேற்பட்ட உடல்கள் தேங்கி கிடப்பதாக பாணந்துறை ஆதார வைத்தியசாலையின் வைத்தியர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

## தேசிய வைத்தியசாலையில் 265 பேருக்கு கொரோனா

### 27 மருத்துவர்களும் அடங்குவர்

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் மருத்துவர்கள், தாதியர் உள்ளடங்கலாக 265 பேருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

நேற்று வெளியான கொரோனா பரிசோதனை முடிவுகளின்படி இந்த விடயம் தெரியவந்துள்ளது.

27 மருத்துவர்கள், 105 தாதியர் மற்றும் 133 சுகாதார ஊழியர்களுக்கே இவ்வாறு தொற்று உறுதியாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கொழும்பு தேசிய வைத்தியசாலையில் கொரோனா தொற்றுக்குள்ளாகி 600இற்கும் மேற்பட்டோர் சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# நுவரெலியா மாவட்டத்தில் 9854 பேருக்கு தொற்று: 205 பேர் உயிரிழப்பு – சுகாதாரப் பிரிவு

(தலவாக்கலை நிருபர்)

நுவரெலியா மாவட்டத்தில் இதுவரையில் தொள்ளாயிரத்து 854 பேர் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளதுடன், 205 பேர் உயிரிழந்துள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவிக்கின்றனர்.

மேலும் கடந்த 24 மணிநேரத்தில் 157 பேர் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர். நுவரெலியா மாவட்டத்தின் கொரோனா தொற்று நிலைவரம் தொடர்பாக நேற்று முன்தினம் மாலை வெளியான அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், ஐயாயிரத்து 591 குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் 157 பேருக்கு தொற்று உறுதியாகியுள்ள தாகவும் 62 குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்பகமுவ பகுதியில் இரண்டாயிரத்து 76 குடும்பங்களும் கொத்மலை பகுதியில் ஆயிரத்து 242 குடும்பங்களும் ஹங்குரன்கெத்த பகுதியில் 244 குடும்பங்களும் வலப்பனை பகுதியில் ஆயிரத்து 218 குடும்பங்களும் நுவரெலியாவில் 811 குடும்பங்களுமாக மொத்தமாக ஐயாயிரத்து 591 குடும்பங்கள் தனிமைப் படுத்தப்பட்டுள்ளன.

கொரோனா தொற்று உறுதியானவர்களில் அதிகமானவர்கள் அம்பகமுவ பிரதேசத்தை சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அந்த வகையில் அம்பகமுவ பகுதியில் ஆயிரத்து 823 பேரும் பொகவந்தலாவ பகுதியில் ஆயிரத்து 86 பேரும் ஹங்குரன்கெத்த பகுதியில் 452 பேரும் கொட்டகலை பகுதியில் 695 பேரும் கொத்மலையில் 774 பேரும் லிந்துலையில் 807 பேரும் மஸ்கெலியாவில் 664 பேரும் மதுரட்ட பகுதியில் 194 பேரும் நுவரெலியா மாநகர சபை எல்லைக்குட்பட்டவர்களில் 563 பேரும் புதிய திஸ்பனை பகுதியில் 860 பேரும் நுவரெலியாவில் 815 பேரும் இராகலையில் 632 பேரும் வலப்பனை பகுதியில் 489 பேருமாக மொத்தமாக தொள்ளாயிரத்து 854 பேர் பி.சி.ஆர். பரிசோதனையின் மூலமாக தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர்.

தொற்றாளர்கள் அதிகம் இனங்காணப்பட்ட பிரதேசமாக அம்பகமுவ பிரதேசம் காணப்படுகின்றது.

இங்கு ஆயிரத்து 823 பேர் இனம் காணப்பட்டுள்ளதுடன், இதுவரையில் நுவரெலியா மாவட்டத்தில் 205 பேர் உயிரிழந்துள்ளதுடன் , அதில் 85 பேர் நுவரெலியா பகுதியிலேயே உயிரிழந்துள்ளனர்.

இது தவிர, அம்பகமுவ பகுதியில் 56 பேரும் வலப்பனை பகுதியில் 32 பேரும் கொத்மலையில் 28 பேரும் ஹங்குரன்கெத்த பகுதியில் 4 பேருமாக 205 பேர் உயிரிழந்துள்ளனர். கடந்த 24 மணித்தியாலத்தில் (17) மாலை 4 மணிவரை வலப்பனை பகுதியில் 80 பேர் தொற்றாளர்களாக இனம் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நோர்வூட்டில் வர்த்தக நிலையங்கள் அனைத்தும் மூடப்பட வேண்டும்

## பிரதேசசபை உறுப்பினர் கல்யாணகுமார் கோரிக்கை



கொரோனா வைரஸ் பரவுவதைக் கட்டுப்படுத்தும் வகையில் நோர்வூட் பிரதேச சபைக்குட்பட்ட நகரங்களின் வர்த்தக நிலையங்களை இரண்டு வாரங்களுக்கு மூடுவதற்கு நகர வர்த்தகர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதி பொதுச் செயலாளரும் நோர்வூட் பிரதேச சபையின் உறுப்பினருமான கல்யாணகுமார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

நகரங்களுக்கு வந்து செல்கின்ற மக்களின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தும் வகையில் நாட்டில் இதுவரை 35 நகரங்களுக்கும் மேற்பட்ட நகரங்களில் வர்த்தக நிலையங்களை வர்த்தகர்கள் மூடியுள்ளனர். இதன் காரணமாக நகருக்கு வருகின்ற மக்களின் எண்ணிக்கை வெகுவாக குறைந்துள்ளது.

இதனை கருத்திற்கொண்டு நோர்வூட் பிரதேச சபைக்குட்பட்ட பொகவந்தலாவை, நோர்வூட், புளியாவத்தை, டின்சின், கெம்பியன் போன்ற நகரங்களிலுள்ள வர்த்தக நிலையங்களை முன்னறிவித்தலோடு மூடுவதற்கு வர்த்தகர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதன்மூலம் நோர்வூட் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா பரவலை கட்டுப்படுத்த முடியும் - என்றார்.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# ஹாலிஎலயில் வர்த்தக நிலையங்கள் இன்றுமுதல் ஒருவாரத்துக்கு பூட்டு

(அசோக்குமார்)

நாட்டில் பரவியுள்ள கொவிட் தொற்று காரணமாக மக்கள் பெரும் அபாயத்தை எதிர்நோக்கி வருகின்றனர். இதனைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை





பதுளை நகர வர்த்தக சங்கம் மற்றும் மொத்த, சில்லறை வர்த்தகர்கள் மேற்கொண்டுள்ளனர்.

மேலும், நேற்றுமுதல் ஒருவார காலத்துக்கு நகரத்திலுள்ள வர்த்தக நிலையங்களை மூடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதன்படி, பதுளை நகரிலுள்ள மருந்தகங்கள், ஆயுர்வேத மருந்தகங்கள் மற்றும் மருத்துவ நிறுவனங்கள் தவிர, ஏனைய அனைத்து வணிக நிறுவனங்களும் மூடப்பட்டு நகர வீதிகள் வெறிச்சோடி காணப்படுகின்றன.

# கொட்டகலையில் இன்று முதல் வர்த்தக நிலையங்கள் முடக்கம்

(கினிகத்தேனை, தலவாக்கலை நிருபர்கள்)

கொரோனா பரவலைக் கட்டுப்படுத்தும் வகையில் கொட்டகலை நகரிலுள்ள வர்த்தக நிலையங்களை இன்றுமுதல் 26 ஆம் திகதிவரை மூடுவதற்கு கொட்டகலை வர்த்தக சங்கம் தீர்மானித்துள்ளதாக வர்த்தக சங்கத்தின் தலைவர் விஸ்வநாதன் புஷ்பா தெரிவித்தார்.

கொட்டகலை வர்த்தக சங்க உறுப்பினர்கள் நேற்று முன்தினம் கூடி ஆராய்ந்ததன் பின்பே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

குறித்த தீர்மானம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொட்டகலை நகர், கொட்டகலை நகரைச் சூழவுள்ள தோட்டங்கள் மற்றும் கிராமங்களில் கொரோனா தொற்றுக்குள்ளானோர் இனங்காணப்பட்டுள்ளனர். மேலும் கொட்டகலை பிரதேசத்தில் கொரோனாவினால் அண்மையில் இருவர் உயிரிழந்துள்ளனர். இவற்றைக் கருத்திற்கொண்டும் கொட்டகலை பிரதேசத்தில் கொரோனாவைக் கட்டுப்படுத்தும் வகையிலும் கொட்டகலை நகர வர்த்தக நிலையங்களை இன்றுமுதல் தொடர்ந்து ஒருவார காலத்துக்கு மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

கொட்டகலை பிரதேசசபையின் உதவியுடன் நகரம் மூடப்பட்ட காலத்தில் நகரத்தின் அனைத்து இடங்களையும் கிருமிநீக்கம் செய்து சுத்தம் செய்ய முடிவுசெய்யப்பட்டுள்ளது.

# மாத்தளை மக்கள் அசமந்தப்போக்குடன் நடந்துகொள்வதை தவிர்க்கவும்

## மாவட்ட சுதந்திரக் கட்சி அமைப்பாளர் ஷியாட் ஹாரீஸ் வேண்டுகோள்

(மாத்தளை நிருபர்)

நாட்டில் அதிவேகமாக பரவி வரும் கொவிட் தொற்றிலிருந்து மக்களை பாதுகாத்திட அரசு முனைப்புடன் செயற்பட்டு வருகின்றபோதும் பொதுமக்களின் அசமந்தப்போக்கு காரணமாக தொற்றுக்குள்ளாவோரின் எண்ணிக்கையும் மரணமடைபவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருவதால், மாத்தளை மாவட்ட பொதுமக்களை மிகவும் அவதானமாகவும் பாதுகாப்பாகவும் இருக்கும்படி மாத்தளை மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளர் ஷியாட் முஹமட் ஹாரீஸ் கேட்டுக்கொண்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாத்தளை மாவட்டத்தில் தற்பொழுது 220 மரணங்கள்வரை ஏற்பட்டுள்ளன. இதில் அதிகமானோர் 60 வயதைத் தாண்டியவர்கள். இவ்வைரஸ் தொற்றிலிருந்து அரசு எங்களை பாதுகாக்கும். எனவே, நாம் எவ்வாறு நடந்து கொண்டாலும் எமக்கு நடக்கும் விபரீத நடவடிக்கைகளுக்கு அரசே உத்தரவாதம் எனவும் சிலர் மடமையான கருத்துகளை தெரிவிப்பதை அறியமுடிகிறது.

அரசு எவ்வளவுதான் தடுப்பூசிகளை வழங்கினாலும் சட்டத்திட்டங்களை வகுத்தாலும் எம்மை நாமே பாதுகாத்துக்கொள்ளாதவரை வைரஸின் பிடியிலிருந்து தப்பித்துக்கொள்வது மிகவும் கஷ்டமான காரியம்.

கொரோனா தொற்றுக்குள்ளாவோரின் நிலைமைகளை கண்டறிந்து அவர்களுக்கு தேவையான நலன்புரி சேவைகளை வழங்கிடச் சென்று பார்க்கும்போதுதான் கொரோனா தொற்றுக்குள்ளானோர் எவ்வாறு



அவஸ்தைப்படுகின்றார்கள் என்பதை நேரில் காணும்போது எம்மில் இருக்கக்கூடிய எந்த ஒரு எதிரிக்கும் இந்த நோய் தொற்றக்கூடாது என இயற்கையாகவே ஒரு பிரார்த்தனை எம்மனதுக்குள் தோன்றுகின்றது.

கொரோனா தொற்றினால் மரணித்தவர்களின் பிரேதங்களை வைத்தியசாலைகளில் இருந்து உரிமையாளர்களுக்கு பெற்றுக் கொடுத்திடும் பணிகளை மேற்கொள்ளும் போது மரணித்தவர்களின் உறவுகள் படும் வேதனைகளை நாம் கண்கூடாகவே காண்கின்றோம். கொரோனா தொற்று காரணமாக வைத்தியசாலைகளில் தனிமைப்படுத்தி சிகிச்சைபெற்றுவரும் தொற்றாளர்களை எந்த உறவுகளும் பார்க்க அனுமதிக்கப்படுவதில்லை. இவர்களுக்கு வெளியிலிருந்து எந்தவொரு உணவுப் பண்டங்களையும் கொண்டுசெல்ல முடியாது. வைத்தியசாலைகளில் வழங்கப்படக்கூடிய உணவே இவர்களுக்கு கொடுக்கப்படக்கூடிய பொருத்தமான உணவுகள் என சுகாதாரத் தரப்பினர் தெரிவிக்கின்றனர்.

எனவே, இத் தொற்றிலிருந்து நம்மை நாமே பாதுகாத்துக்கொள்ள வேண்டும். அரசும் சுகாதாரத் திணைக்களமும் எங்களை பாதுகாக்கும் என்ற அசமந்தப்போக்கில் இருந்துவிட வேண்டாம்.

வைரஸை கட்டுப்படுத்திட வைத்தியர்களாலும் பொதுச் சுகாதார பரிசோதகர்களாலும் இயலாத காரியம். எனவே, எங்களை பாதுகாத்துக்கொள்ள நாங்களே நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இந்த இக்கட்டான காலத்தில் எந்தவொரு காரணத்திற்காகவும் வீட்டை விட்டு வெளியேராமல் வீட்டுக்குள்ளே அடங்கிக் கிடப்பதே இவ்வைரஸிலிருந்து எம்மை பாதுகாத்துக்கொள்ளக்கூடிய ஒரே வழி என்பதால் வீட்டுக்குள்ளே முடங்கி எம்மையும் எம் குடும்பத்தாரையும் பாதுகாத்திட ஒவ்வொருவரும் தனி முயற்சியுடன் ஈடுபட்டால் நிச்சயம் இக்கொரோனா வைரஸிலிருந்து எம்மை பாதுகாத்துக்கொள்ள முடியும் - என்றார்.

# ஹட்டன் தபாலகத்திற்கு பூட்டு

(நோட்டன் பிரிட்ஜ் நிருபர்)

ஹட்டன் தபாலக ஊழியர்கள் இருவருக்கு கொரோனா தொற்று உறுதியானதையடுத்து 14 நாட்களுக்கு தபாலகம் மூடப்பட்டுள்ள அதே வேளை, அங்கு இருவருக்கு தொற்று உறுதியானதையடுத்து கடமையாற்றிய 19 பேர் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

மாற்று ஊழியர்களை வைத்து தபாலகத்தை நடத்த பொது சுகாதார அதிகாரிகளினால் அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் ஊழியர்கள் அனைவரும் தொற்றுக்குள்ளான இரண்டு ஊழியர்களுடன் தொடர்பினை பேணியுள்ள நிலையிலேயே எதிர்வரும் 14 நாட்களுக்கு தபாலகம் மூடப்பட்டுள்ளதாக தபாலக அதிகாரிகள் தெரிவித்தனர்.



# மத்திய மாகாணத்தில் 1,129 பேர் மரணம்; சுகாதாரத் திணைக்களம் தெரிவிப்பு

(மாத்தளை நிருபர்)

நாட்டில் அதிவேகமாக பரவிவரும் கொவிட் தொற்று காரணமாக மத்திய மாகாணத்தில் மரணித்தவர்களின் மொத்த எண்ணிக்கை ஆயிரத்து 129 ஆக அதிகரித்துள்ளதாக மத்திய மாகாண சுகாதாரத் திணைக்கள அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இதனடிப்படையில் கண்டி மாவட்டத்தில் 716 மரணங்களும், மாத்தளை மாவட்டத்தில் 217 மரணங்களும், நுவரெலியா மாவட்டத்தில் 196 மரணங்கள் உட்பட மொத்தம் ஆயிரத்து 129 மரணங்கள் ஏற்பட்டுள்ளதாக மத்திய மாகாண சுகாதாரத் திணைக்களம் அறிவித்துள்ளது.

# தோட்டத் தொழிலாளர்களுக்கு தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கையை விரைவுபடுத்த வேண்டும்

## வட்டகொடையில் 1,500 பேர் திருப்பி அனுப்பப்பட்டதாக மத்திய மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ஶ்ரீதரன் குற்றச்சாட்டு

(கினிகத்தேனை நிருபர்)

தோட்டப் பகுதிகளில் கொவிட்-19 தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் மிகவும் மந்தகதியில் இடம்பெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கொத்மலை பிரதேச சபைக்குட்பட்ட வட்டகொடை மடக்கும்புர தோட்டத்தில் சுமார் ஆயிரத்து 500 பேருக்கு தடுப்பூசி ஏற்றப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டு மக்கள் தயாராக சென்றபோதிலும், தடுப்பூசி வரவில்லை என்று திருப்பியனுப்பப்பட்டுள்ளனர். இவ்வாறு தொழிலாளர்களை கண்டுகொள்ளாமல் இருப்பது பாரதூரமான செயலாகும் - என தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதி நிதிச் செயலாளரும், மத்திய மாகாண சபை முன்னாள் உறுப்பினருமான சோ. ஶ்ரீதரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில்,

நாட்டில் கொரோனா மற்றும் டெல்ட்டா வைரஸ் பரவல் வெகுவாக அதிகரித்துவரும் நிலையில், தோட்டத் தொழிலாளர்களுக்கு தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கையை துரிதப்படுத்தி



உயிராபத்துகளிலிருந்து பாதுகாக்க வேண்டும். கடந்த ஒன்றரை வருட காலமாக எமது நாட்டில் 3 இலட்சத்து 60 ஆயிரத்துக்கும் அதிகமானோர் கொரோனா தொற்றுக்கு ஆளாகியும், ஆறாயிரத்து 250இற்கும் அதிகமானோர் மரணமாகியும், 3 இலட்சம் பேர் குணமாகியும் வருகின்ற இந்நேரத்தில் தோட்டப் பகுதிகளில் இன்னமும் முறையாக தடுப்பூசி ஏற்றப்படாமல் இருக்கின்றது.

நாடே கொரோனா தொற்றால் முடங்கிக் கிடந்தபோதிலும் தோட்டத் தொழிலாளர்கள் முடங்காமல் தேயிலைப் பயிர்ச்செய்கையை காப்பாற்றி வந்துள்ளார்கள். கொரோனா ஆரம்ப காலத்தில் அவர்களின் பாதுகாப்பு தொடர்பாக கவனம் எடுத்தபோதிலும் நாளடைவில் கையுறைகள், முகக்கவசங்கள் மற்றும் பாதுகாப்பு தொடர்பான நடவடிக்கைகள் எடுக்கப்படாமல் உள்ளன. அத்தோடு, தோட்ட மக்கள் மத்தியில் இன்றுவரை போதுமான விழிப்புணர்வு ஏற்படாமலும், ஏற்படுத்தப்படாமலும் இருக்கின்றது. இன்றைய உயிராபத்து நிறைந்த சூழ்நிலையில் தோட்டப் பகுதி மக்கள் மிகவும் அச்சத்துடனேயே வாழவேண்டியவர்களாக இருக்கின்றார்கள்.

கொரோனா தொற்றுக்குள்ளானவர்களை அவரவர் வீடுகளில் தனிமைப்படுத்தி கவனிக்குமாறு அரசாங்கம் அறிவித்துள்ள நிலையில் லயன்களில் வாழும் தோட்ட மக்களை தனிமைப்படுத்துவதற்கு ஏற்ற வசதிகள் எதுவும் இல்லாதுள்ளது. முழுக் குடும்பமுமே ஒரு வீட்டில் வசிக்கும்போது தனிமைப்படுத்துவதற்கான அறைகளோ, மலசலகூட வசதிகளோ இல்லாதுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இத்தகைய இக்கட்டான நிலையில், மஸ்கெலியா வைத்தியசாலையை கொரோனா மத்திய நிலையமாக மாற்ற நடவடிக்கை எடுக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் பழனி திகாம்பரம் நாடாளுமன்றத்தில் வேண்டுகோள் விடுத்திருந்தார். அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டும் இதுவரை எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டதாக தெரியவில்லை. அதேநேரம், டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலையில் கொரோனா தொற்றுக்குள்ளானவர்களின் தொகை நாளாந்தம் அதிகரித்துவருவதோடு, அங்கு உயிரிழப்பவர்களின் சடலங்களை வைத்திருப்பதற்குத் தேவையான களஞ்சிய அறைகள் இல்லை என்றும் சுட்டிக் காட்டப்பட்டு வருகின்றது. அங்கு தினசரி 6-7 கொரோனா மரணங்கள் ஏற்பட்டு வருகின்றன.

எனவே, வைத்தியசாலைகளில் இடமில்லாமலும், வீடுகளில் தனிமைப்படுத்தும் வசதிகள் இல்லாமலும் மக்கள் அவதிக்குள்ளாகி வருகின்ற நேரத்தில், தோட்டங்களிலுள்ள பழைய தேயிலை தொழிற்சாலைகள், சனசமூக நிலையங்கள் மற்றும் கலாசார மண்டபங்கள் போன்றவற்றை தனிமைப்படுத்தும் நிலையங்களாக மாற்ற அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியமாகும்.

மேலும், இன்று கொரோனா, டெல்ட்டா வைரஸ்கள் வேகமாகப் பரவி வருவதால் பொது மக்கள் அநாவசியமாக நகரங்களுக்கு வருவதை தவிர்த்துக்கொள்ள வேண்டும். முகக்கவசம் அணிந்து, சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுவதில் கூடுதலான கவனம் செலுத்த வேண்டும். எந்த நேரத்திலும் நாடும், நகரங்களும் முடக்கப்பட்டு ஊரடங்கு பிறப்பிக்கப்படலாம். முடிந்தவரை அத்தியாவசியப் பொருட்களை கொள்வனவுசெய்து வைத்துக் கொள்வதிலும் மக்கள் கவனம் செலுத்த வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

தமிழன் வணிக உலகம் Business world GROWTH

www.thamilan.lk

# Quick Pay செயலியினூடாக ஒரு பில்லியன் ரூபாவை திரட்டி வாடிக்கையாளருக்கு சௌகரியத்தை வழங்குவதில் முதன்மை நிறுவனமாகத் திகழும் AIA இன்ஷூரன்ஸ்!



AIA இன்ஷூரன்ஸ் நிறுவனத்தின் வெல்த் பிளேனர்கள் மற்றும் நிதியியல் திட்டமிடல் அதிகாரிகள் வாடிக்கையாளர்களின் கட்டுப்பணங்களைத் திரட்டுவதற்காக விசேடமாக வடிவமைக்கப்பட்ட புதுமையான டிஜிட்டல் கட்டுப்பணச் செலுத்தல் செயலியான (App) AIA AIA Quick Pay ஜூலை 2021இன்படி பாரிய ஒரு பில்லியன் ரூபா பெறுமதியான பரிமாற்றங்களையும் கட்டுப்பணச் சேகரிப்புகளையும் நிறைவுசெய்திருந்தது. இச்செயலி அறிமுகம் செய்யப்பட்டதிலிருந்து வெறும் 22 மாதங்களில் மிகப்பாரிய அதிசிறந்த ஈடுபாட்டையும் மற்றும் செயற்றிறனையும் வெளிக்காட்டியிருப்பதானது வாடிக்கையாளரின் சௌகரியத்தை மையப்படுத்திய AIAஇன் உறுதியான அர்ப்பணிப்பின் சான்றாகவும் அமைந்துள்ளது.

AIA வாடிக்கையாளர்கள் கட்டுப்பணங்களை மிகவும் இலகுவாகவும் மற்றும் வேகமாகவும் செலுத்தும் விதமாக இலங்கையின் ஆயுள் காப்புறுதித்துறையில் வடிவமைக்கப்பட்ட முதலாவது தன்னியக்கக் கட்டணம் செலுத்தும் செயலியாகவே AIA AIA Quick Pay காணப்படுகின்றது. வாடிக்கையாளர்கள் ஒன்லைன் (நிகழ்நிலையின்) மூலமாக தங்களது புதிய காப்புறுதித் திட்டங்களுக்கு கட்டணம் செலுத்தல், கிரமமான முறையில் மீண்டும் செலுத்தும் கட்டணத் திட்டங்கள் அல்லது நிலையியல் கட்டளைகளை உருவாக்கல் மற்றும் காப்புறுதித் திட்டப் புதுப்பித்தல் செயற்பாடுகளுக்குக் கட்டணம் செலுத்தல் ஆகியவற்றை மேற்கொள்வதற்கு வாடிக்கையாளர்களை அனுமதிக்கின்ற ஓர் அத்தியவசியமான டிஜிட்டல் தீர்வாகவும் இது அமைந்துள்ளது.

AIAஇன் பிரதான நிறைவேற்று அதிகாரி நிகில் அத்வானி கருத்துத் தெரிவிக்கையில், ''வெறும் 22 மாதங்களில் ரூபா ஒரு பில்லியன் பெறுமதியான கட்டுப்பணச் சேகரிப்பின் சாதனையானது டிஜிட்டல் மயமாக்கலை நோக்கிய பாரிய வாடிக்கையாளர் சௌகரியம் மற்றும் மாற்றத்தை வழிநடத்துகின்ற AIAஇன் வெற்றிப் பயணத்தில் மிகப்பாரிய மற்றுமொரு மைல்கல்லாகும். AIAஇல் நாங்கள் எங்களுடைய வாடிக்கையாளர்களின் நேரத்தை மதிப்பதோடு, அவர்களுக்கான சௌகரியம் மிகவும் முக்கியமானதொரு விடயம் என்பதனை விளக்கிக் கொள்கின்றோம். அதனாலேயே வாடிக்கையாளர்கள் தங்களது இல்லத்தில் மிகவும் பாதுகாப்பாகவும், சௌகரியமாகவும் இருந்தவாறு தங்களது டெபிட் அட்டை அல்லது கடன் அட்டை போன்ற ஒன்றைப் பயன்படுத்தி மிகவும் இலகுவாகவும், பாதுகாப்பாகவும் கட்டுப்பணங்களைச் செலுத்துவதற்கு அல்லது நிலையியற் கட்டளைகளை உருவாக்குவதற்கான வழியொன்றை நாங்கள் நாடவேண்டிய தேவையொன்று இருந்தது'' என அவர் கருத்துத் தெரிவித்திருந்தார்.

''நாங்களை இச்செயலி வசதியினை அதாவது கொவிட் பெருந்தொற்று ஏற்படுவதற்கு முன்னர் செப்டெம்பர் 2019இல் அறிமுகம் செய்திருந்தோம். எனவே, எங்களுடைய வாடிக்கையாளர்கள் மிகவும் நம்பிக்கையுடன் இலகுவாக அனைத்துத் தருணங்களிலும் இதன் மூலமாக தங்களது கட்டுப்பணங்களைச் செலுத்த முடியுமாகவே இருக்கும். தற்போதைய சூழ்நிலையில் எங்களுடைய வாடிக்கையாளர்களின் பாதுகாப்பு முதன்மைக்குரிய விடயமொன்றாகவே காணப்படுகின்றது. உண்மையில் இவ்வாறான செயலியை வடிவமைத்து நிறுவி மற்றும் நிலைநிறுத்தி வைத்திருப்பதையிட்டு நாங்கள் பெருமகிழ்ச்சியடைகின்றோம். எனவே, எங்கள் வாடிக்கையாளர்கள் தங்களது கட்டுப்பணங்களைச் செலுத்துவதில் எவ்வித சிக்கல்களுக்கும், ஆபத்துகளுக்கும் முகங்கொடுக்கவேண்டிய தேவையிருக்காது'' என அவர் மேலும் கருத்துத் தெரிவித்திருந்தார்.

AIAஇன் பிரதிப் பிரதான நிறைவேற்று அதிகாரி மற்றும் பிரதான முகவர் நிறுவன உத்தியோகத்தர் உபுல் விஜேசிங்க கருத்துத் தெரிவிக்கையில், ''எவ்விதமான தடங்களற்ற நிதியியல் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு உரிய நேரத்தில் கட் டுப்பணங்களைச் செலுத்துவது மிகவும் முக்கியமானதொரு விடயமாகும். உண்மையில் AIA AIA Quick Pay தானியக்க முறையில் எவ்விதத் தடங்களுமற்ற மிகவும் சௌகரியமாக கட்டுப்பணச் செலுத்தல் வசதியையே ஏற்படுத்தித் தருகின்றது. வெல்த் பிளேனர்கள் தங்களது வாடிக்கையாளர்களின் கட்டுப்பணச் செலுத்தல்களை 5 நிமிடங்களுக்கும் குறைவான நேரத்தில் செயல்முறைப்படுத்துவதன் மூலம் அவர்களுக்கான மிகவும் விரைவான மற்றும் சிறந்த சேவை வழங்கலை உறுதிப்படுத்த முடியும். AIAஇன் ஒட்டுமொத்த டிஜிட்டலாக்கத் திட்டத்தின் அங்கம் ஒன்றாக இருக்கும் மிகவும் பாதுகாப்பான மற்றும் நம்பகமான புரட்சிகரமான இத்தீர்வானது விசேடமாக எங்களுடைய வாடிக்கையாளர்களுக்கும் மற்றும் வெல்த் பிளேனர்களுக்கும் மிகவும் வேகமான மற்றும் சௌகரியமான தீர்வுகளை வழங்குவதில் கவனம் செலுத்துகின்றது.

AIA AIA Quick Pay இலங்கையில் DirectPayஇன் உதவியோடு கார்கில்ஸ் வங்கியின் ஊடான மாஸ்டர் கார்ட் கட்டண நுழைவாயில் இயங்கு தளத்தின் பங்களிப்புடன் செயற்படும் மிகப்பாரிய காப்புறுதி டிஜிட்டல் கொடுப்பனவுத் திட்டம் ஒன்றாகும். DirectPay என்பது நிகழ்நேர, பாதுகாப்பான மற்றும் சௌகரியமான காப்புறுதிக் கட்டுப்பணக் கொடுப்பனவுத் தீர்வுகளை வழங்குகின்ற இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட கட்டணச் சேவை வழங்குநர் (PSP) ஒருவராகும். மேலும் இலங்கை மத்திய வங்கியின் வழிகாட்டுதல்களுக்கேற்ப கைபேசி செயலிகளுக்கென அடிப்படைப் பாதுகாப்புத் தரநிலைகளுக்கு (BSS) இணங்க மிகவும் உயர் நிதிசார் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் பின்பற்றுகின்றது'' - என்றார்.

DirectPayஇன் பிரதான நிறைவேற்று அதிகாரி கனிஷ்க வீரமுண்ட கருத்துத் தெரிவிக்கையில், ''AIA நிறுவனம் எங்களை அணுகியபோது நாங்கள் முழுமையாக ஒருங்கிணைந்த கட்டணத் திட்ட அம்சங்களை வடிவமைக்கின்ற ஆரம்ப நிறுவனமொன்றாகவே செயற்பட்டுக்கொண்டிருந்தோம். எனினும், தற்போது ரூபா ஒரு பில்லியன் கட்டுப்பணத்திற்கும் அதிகமான தொகையைத் திரட்டியிருக்கின்ற காப்புறுதித் துறையின் முன்னோடியான தீர்வொன்றையே நாங்கள் இணைந்து வடிவமைத்திருக்கின்றோம். AIA போன்ற பல்தேசிய நிறுவமொன்றுக்கு சேவை வழங்குநராகச் செயற்படுவதில் நாங்கள் மிகவும் பெருமையடைகின்றோம். மேலும் அவர்களுடைய வாடிக்கையாளர்களுக்கு முன்னொருபோதும் இல்லாதவாறான இணையற்ற சௌகரியத்தினையும் மற்றும் எளிமையான கட்டணத் திட்டத்தினையும் வழங்கி இரு நிறுவனங்களுமாக சாதித்திருப்பதையிட்டு நான் மிகவும் பெருமையடைகின்றேன்'' எனக் கருத்துத் தெரிவித்திருந்தார்.

''புதிய தொழில்நுட்பங்களை நோக்கிய எங்க ளுடைய பயணத்தை நாங்கள் தொடர்ந்தும் முன்னெடுப்பதோடு AIA இன் வாடிக்கையாளர்களுக்குப் பணமற்ற கட்டண முறை மற்றும் தொலை பரிவர்த்தனைகள் ஆகியவற்றை அவர்களுடைய மேலதிக சௌகரியத்திற்கான அம்சங்களாகவும் விரிவுபடுத்தவுள்ளோம்'' என அவர் மேலும் கருத்துத் தெரிவித்திருந்தார்.

# "வாகன உதிரிப்பாகங்கள் உற்பத்தியாளர்கள் மேல் மாகாணத்தில் 5000 இற்கும் அதிகமானோருக்கு தொழில்வாய்ப்புகளை ஏற்படுத்தியுள்ளனர்" – SLACMA

- புத்தம் புதிய வாகனங்களை உள்நாட்டில் பொருத்தும் SOP அறிமுகத்தைத் தொடர்ந்து இந்த எண்ணிக்கை எய்தப்பட்டுள்ளது
- கடந்த 6 மாதங்களில் பெண்களுக்கான தொழில்வாய்ப்புகளில் அதிகரிப்பு பதிவு
- 2021 ஒக்டோபர் மாதம்முதல் 10,000 உள்நாட்டில் பொருத்தும் மோட்டார் சைக்கிள்கள் உற்பத்தி நடவடிக்கைகள் ஆரம்பமாகும்







இலங்கை வாகன உதிரிப்பாகங்கள் உற்பத்தியாளர்கள், கடந்த சில மாதங்களில் நாட்டின் மேல் மாகாணத்தில் 5000இற்கும் அதிகமான புதிய தொழில் நியமனங்களை வழங்கியுள்ளனர் - என இலங்கை வாகன உதிரிப்பாகங்கள் உற்பத்தியாளர் சம்மேளனத்தின் தலைவர் திமந்த ஜயவர்தன இதனைத் தெரிவித்தார்.

ஆண்டின் முற்பகுதியில், தொழிற்துறைகள் அமைச்சுடன் இலங்கை வாகன உதிரிப்பாகங்கள் உற்பத்தியாளர்கள் மற்றும் வாகனப் பொருத்துகைகள் தொழிற்துறை ஆகியன நியம செயற்பாட்டு செயன்முறை (SOP) வாகன உற்பத்தி/பொருத்துகை துறை மற்றும் இலங்கை வாகன உதிரிப்பாகங்கள் உற்பத்தி தொழிற்துறைக்காக அறிமுகம் செய்யப்பட்டிருந்தது.

இந்த நியமனங்கள் தொடர்பில் ஜயவர்தன கருத்துத் தெரிவிக்கையில், "SOP அறிமுகத்துடன் துறைசார் பங்காளர்கள் கடுமையாக உழைப்பதை அவதானிக்க முடிந்ததுடன், புதிய சூழ்நிலை வாய்ப்புகளின் உச்சகட்ட பயனைப் பெற்றுள்ளதையும் அவதானிக்க முடிகின்றது. அண்மைக் காலத்தில், தொழிற்பயிற்சி கல்வியகத்தில் NVQ நிலை 3-4 சான்றிதழ் தகைமையைப் பெற்றுள்ளனர். இவர்களில் பலர் வாகன உதிரிப்பாகங்கள் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள தனியார்துறை நிறுவனங்களில் பணிக்கு சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர். அடுத்த இரண்டு முதல் மூன்றாண்டுகளில் இந்தத் தொழிற்துறையில் சுமார் 45,000 தொழில்வாய்ப்புகள் தோற்றம் பெறும் என நாம் எதிர்பார்க்கின்றோம்" - என்றார்.

பல்வேறு வாகன உதிரிப்பாகங்கள் தற்போது இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளதுடன், உலகின் பல்வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இவற்றில் டயர்கள், பற்றரிகள், புஷ்கள் மற்றும் காபெட் போன்ற இறப்பர் உதிரிப்பாகங்கள், சைலென்சர்கள், ஆசனங்கள், ரேடியேற்றர்கள், பொடி பெனல்கள் மற்றும் பந்தயக் கார்களுக்கான பம்பர்கள், ஆசனப் பட்டிகள் தாக்க உணரி ஆளிகள் மற்றும் எயார் பாக்க மற்றும் ட்ரக் ட்ரெய்லர்கள் போன்றன அடங்குகின்றன.

"சந்தையில் புதிய ட்ரக் உற்பத்தியாளர் ஒருவர் பிரவேசிப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது. 2021 ஒக்டோபர் மாதத்தில் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பத்தாயிரம் மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்காக அறிமுகம் செய்யப்படும். இந்த சைக்கிள்களில் உள்நாட்டில் உற்பத்திசெய்யப்பட்ட பற்றரிகள், ஆசனங்கள், வயர் ஹார்னெஸ், பிளாஸ்ரிக் மற்றும் இறப்பர் பொருட்கள் மற்றும் டயர்கள் போன்றன அடங்கியிருக்கும்" என அவர் மேலும் குறிப்பிட்டார்.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் முன்வைக்கப்பட்ட 2021ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் உள்நாட்டில் வாகன உதிரிப்பாகங்கள் உற்பத்தியை ஊக்குவிப்பது தொடர்பான பல்வேறு கொள்கைகள் உள்ளடங்கியிருந்தன. "கடந்த ஆண்டில், SLACMA இனால் நிதி அமைச்சுக்கு 10 ஆண்டு கால திட்டம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. உள்நாட்டு வாகன பொருத்துகை மற்றும் உதிரிப்பாகங்கள் விநியோகத்துறையை அடுத்த நிலைக்கு கொண்டுசெல்வதற்கான முக்கிய பங்காக இது அமைந்திருக்கும். துறையில் ஒற்றுமை மற்றும் நிதி அமைச்சு மற்றும் தொழிற்துறைகள் அமைச்சிடமிருந்து எமக்குக் கிடைத்த நேர்த்தியான பதிலளிப்புகள் போன்றன இந்தத் திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு எமக்கு உதவியாக அமைந்திருந்தன" - என்றார்.

அவர் தொடர்ந்து குறிப்பிடுகையில், "தொழில் வாய்ப்புகள் உருவாக்கம் என்பதை காண்பதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம். வயர் ஹார்னெஸ் என்பதை பெருமளவு பெண்கள் உற்பத்தி செய்கின்றனர். இதனூடாக, இந்தத் துறையில் பெண்களுக்கான தொழில் வாய்ப்பு 60 இலிருந்து 70 சதவீதமாக அதிகரித்திருந்தது. தொற்றுப் பரவலின் அழுத்தத்தின்போதும், மேம்படுத்தப்பட்ட மற்றும் அதிகரித்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் பொருத்துகையில் தொழில் வாய்ப்புகள் உருவாக்கம் அதிகரித்துள்ளதை அவதானிக்க முடிந்துள்ளது" - என்றார்.

## தன நிதானய

உத்தியோகபூர்வ முடிவுகள்

ஆங்கில எழுத்து: W

வெற்றி இலக்கங்கள்: 15 18 30 34

திகதி: 18.08.2021

சீட்டிழுப்பு இலக்கம்: 0570

| | கட்டமைப்பு | பரிசுகள் | வெற்றியாளர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 1,000,000.00 | 0 |
| 2 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 100,000.00 | 3 |
| 3 ஆம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 3,000.00 | 59 |
| 4 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 1,000.00 | 142 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 100.00 | 3209 |
| 6 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் சரியாயின் | ரூபா 60.00 | 2152 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூபா 20.00 | 54433 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூபா 20.00 | 10457 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூபா. 2,366,820.00

பரிசுகளை வென்ற வெற்றியாளர்களின் எண்ணிக்கை. 70,455

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசுத் தொகை

ரூ. 81,348,303.60

- ரூபா. 5 இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசின் வரி சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது.
- பரிசுத்தொகையை பெற்றுக்கொள்ளும் போது தேசிய அடையாள அட்டை கட்டாயமானது.
- சீட்டிழுப்பு தினத்திலிருந்து 6 மாதகாலத்திற்கு மாத்திரமே வெற்றி லொத்தர் செல்லுபடியாகும்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
NATIONAL LOTTERIES BOARD

இல 32 தேசமான்ய N.W.J. முதலிகே மாவத்தை, கொழும்பு 01,
தொலைபேசி: 0112-324324, 0114 607000
Web: www.nlb.lk

## கொவிசெத

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம்: 2835 சீட்டிழுப்பு திகதி: 18.08.2021

ஆங்கில எழுத்து: J

வெற்றி இலக்கங்கள்: 03 21 38 74

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுத் தொகை ரூ. | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000,000.00 | 1 |
| 2 ஆம் பரிசு | 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 100,000.00 | 2 |
| 3 ஆம் பரிசு | இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 2,000.00 | 131 |
| 4 ஆம் பரிசு | 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 1,000.00 | 253 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 100.00 | 6373 |
| 6 ஆம் பரிசு | 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 40.00 | 4279 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | 20.00 | 106187 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 20.00 | 19375 |

இந்த சீட்டிழுப்பில் உருவாகிய வெற்றியாளர்களின் எண்ணிக்கை 136,601

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்தத் தொகை

ரூ. 5,034,700.00

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு

ரூ. 60,455,385.60

வெற்றி பெறும் சீட்டுகள் சீட்டிழுக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சமோ அதற்கு கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரி சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டது. பரிசை பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
NATIONAL LOTTERIES BOARD

இல 32 தேசமான்ய N.W.J. முதலிகே மாவத்தை, கொழும்பு 01,
தொலைபேசி: 0112-324324, 0114 607000
Fax: 0114 663416 Web: www.nlb.lk

## ජාතික සම්පත — JATHIKA SAMPATHA — ஜாதிக சம்பத

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம்: 1138

திகதி: 18.08.2021

லக்னம்: (ரிஷபம் சின்னம்)

வெற்றி இலக்கங்கள்: 8 9 4 1 4 2

வலமிருந்து இடமாக பரிசுக்கட்டமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | பரிசுத் தொகை | பரிசுகள் |
|---|---|---|---|
| 01 பரிசு | 8 9 4 1 4 2 | ரூ. 1,000,000.00 | 0 |
| 02 பரிசு | 9 4 1 4 2 | ரூ. 100,000.00 | 3 |
| 03 பரிசு | 4 1 4 2 | ரூ. 10,000.00 | 18 |
| 04 பரிசு | 1 4 2 | ரூ. 1,000.00 | 195 |
| 05 பரிசு | 4 2 | ரூ. 100.00 | 1882 |
| 06 பரிசு | 2 | ரூ. 20.00 | 18804 |

இடமிருந்து வலமாக பரிசுக்கட்டமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | பரிசுத் தொகை | பரிசுகள் |
|---|---|---|---|
| 07 பரிசு | 8 9 4 1 4 | ரூ. 10,000.00 | 2 |
| 08 பரிசு | 8 9 4 1 | ரூ. 1,000.00 | 14 |
| 09 பரிசு | 8 9 4 | ரூ. 200.00 | 197 |
| 10 பரிசு | 8 9 | ரூ. 100.00 | 1930 |
| 11 பரிசு | (லக்னம்) | ரூ. 20.00 | 15682 |
| 12 பரிசு | வெற்றி இலக்கங்கள் ஆறும் எந்த ஒழுங்கில் பொருந்தினாலும் | ரூ. 200.00 | 69 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூ. 1,833,120.00

வெற்றி பெறும் சீட்டுகள் சீட்டிழுக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத் தொகை அரசாங்க வரிச் சட்டதிட்டங்களுக்கு உட்படும். பரிசினைப் பெறுவதற்கு அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

அடுத்த சனிக்கிழமைக்கான சுப்பர் பரிசு ரூ. 16,839,019.30

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
NATIONAL LOTTERIES BOARD

32, தேசமான்ய என்.டபிள்யூ.ஜே முதலிகே மாவத்தை, கொழும்பு 01.
தொலைபேசி: 011 4607000, 011 2324324
பக்ஸ்: 011 4669416

## மஹஜன சம்பத

சீட்டிழுப்பு இலக்கம்: 4540

உத்தியோகபூர்வ முடிவுகள்

திகதி: 18.08.2021

வெற்றி எழுத்து: Q

வெற்றி இலக்கங்கள்: 5 6 9 3 1 6

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

| பரிசு | இலக்கங்கள் | பரிசுத் தொகை | வெற்றியாளர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1ஆம் பரிசு | 5 6 9 3 1 6 | ரூபா 2,000,000/- | 0 |
| 2ஆம் பரிசு | 6 9 3 1 6 | ரூபா 100,000/- | 9 |
| 3ஆம் பரிசு | 9 3 1 6 | ரூபா 10,000/- | 88 |
| 4ஆம் பரிசு | 3 1 6 | ரூபா 1,000/- | 827 |
| 5ஆம் பரிசு | 1 6 | ரூபா 100/- | 8273 |
| 6ஆம் பரிசு | 6 | ரூபா 20/- | 81873 |

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

| பரிசு | இலக்கங்கள் | பரிசுத் தொகை | வெற்றியாளர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 7ஆம் பரிசு | 5 6 9 3 1 | ரூபா 10,000/- | 8 |
| 8ஆம் பரிசு | 5 6 9 3 | ரூபா 1,000/- | 85 |
| 9ஆம் பரிசு | 5 6 9 | ரூபா 100/- | 822 |
| 10ஆம் பரிசு | 5 6 | ரூபா 50/- | 8218 |
| 11ஆம் பரிசு | Q | ரூபா 20/- | 32767 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை – ரூ. 6,385,200.00

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 25,917,517.20

NLB வாழ்வின் கனவிற்கு அதிர்ஷ்டத்தின் ஆசீர்வாதம்

தேசிய லொத்தர் சபை

32, தேசமான்ய N. W. J. முதலிகே மாவத்தை, கொழும்பு - 01.
தொலைபேசி: 011-4607000, 011-2324324. Fax: 011-4669416.

www.nlb.lk

## Mega POWER — மெகா பவர்

சீட்டிழுப்பு இலக்கம்: 0888

உத்தியோகபூர்வ முடிவுகள்

திகதி: 18.08.2021

ஆங்கில எழுத்து: T சுப்பர் இலக்கம்: 06

வெற்றி இலக்கங்கள்: 14 29 32 41

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுத் தொகை ரூ. | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000,000.00 | 0 |
| 2 ஆம் பரிசு | 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 100,000.00 | 4 |
| 3 ஆம் பரிசு | இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000.00 | 51 |
| 4 ஆம் பரிசு | 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 500.00 | 146 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 100.00 | 3542 |
| 6 ஆம் பரிசு | 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 40.00 | 2317 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | 20.00 | 58996 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 20.00 | 10761 |

இலங்கையின் அதிகூடிய சுப்பர் பரிசு

அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 144,170,345.20

அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை

ரூ. 2,366,020.00

N.W.J. முதலிகே மாவத்தை, கொழும்பு 01, தொலைபேசி: 0112-470662, 0114 607000 இணையம்: www.nlb.lk

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
NATIONAL LOTTERIES BOARD

ஐந்து இலட்சம் அல்லது அதற்குக் கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும்.

# மட்டக்களப்பு மாவட்டத்தில் 24 மணிநேரத்தில் 303 பேருக்கு கொரோனா தொற்று - மூவர் உயிரிழப்பு

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 24 மணிநேரத்தில் மூவர் உயிரிழந்ததையடுத்து, இதுவரை உயிரிழந்தோரின் எண்ணிக்கை 152 ஆக அதிகரித்துள்ளதுடன், 303 பேர் கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். எனவே, மக்களாகிய நீங்கள் சமூக பொறுப்புடன் செயற்படுங்கள். தொற்றுக்குள்ளானவர்கள் வீட்டைவிட்டு வெளியில் வரவேண்டாம். அதனை மீறி வெளியில் வருபவர்களுக்கு எதிராக கொரோனா சட்டத்தின்கீழ் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் - என மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் நா.மயூரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கோறளைப்பற்று மத்தி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவரும், செங்கலடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவரும், பட்டிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவருமாக 3 பேர் உயிரிழந்துள்ளனர்.

மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 106 பேரும், களுவாஞ்சிக்குடியில் 38, வவுணதீவில் 27, செங்கலடியில் 25, வாழைச்சேனையில் 22, ஆரையம்பதியில் 15 பேருமாக 303 பேர் கடந்த 24 மணிநேரத்தில் தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

இதுவரை 152 மரணங்கள் இடம்பெற்றுள்ளதுடன், மூன்றாவது அலையில் 143 மரணங்களும் அதில் 30 தொடக்கம் 50 வயதுக்குட்பட்ட 15 பேரும் 50 வயதுக்கு மேற்பட்டோர் 137 பேரும் மரணமடைந்துள்ளதுடன், உயிரிழந்தவர்களில் 54 வீதமானோர் ஆண்களாவர்.

மாவட்டத்தில் சிறுசிறு கொத்தணிகள் உருவாக காரணமாக இருந்தவை ஒன்றுகூடல்களேயாகும். குறிப்பாக, திருமண வீடுகள், மரண வீடுகள், கோவில்களுக்கு சென்று வந்தவர்கள் மூலம் இந்தக் கொத்தணி உருவாகியது. எனவே, ஒன்றுகூடல்களை முற்றாக தவிர்க்கும் பட்சத்தில்தான் தொற்றைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரமுடியும்.

இதேவேளை, 651 கட்டில்கள் கொண்ட இடைத்தங்கல் முகாம்களும் கொரோனா சிகிச்சையளிக்கும் நிலையங்களில் 118 கட்டில்களும் மட்டு. போதனா வைத்தியசாலையில் 104 கட்டில்களும் தயார் நிலையிலுள்ளதுடன், அவசர சிகிச்சைப் பிரிவான காத்தான்குடியில் 6 கட்டில்கள் உள்ளதுடன், வாழைச்சேனை, களுவாஞ்சிக்குடி ஆகிய பிரதேசங்களில் 14 கட்டில்களுடன் அவசர சிகிச்சைப் பிரிவுகளை உருவாக்கவுள்ளோம்.

இருந்தபோதும் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் தற்பொழுது கொரோனா தொற்றுக்குள்ளானவர்கள் சிலர் கடைகளுக்கு சென்று வருகின்றனர். எனவே, அவர்களுக்கு என்ன தேவைப்படுகின்றதோ அவர்களின் உறவினர்கள் அல்லது நண்பர்கள் மூலம் அந்தத் தேவைகளை பூர்த்திசெய்யுங்கள். தொற்றுக்குள்ளானவர்களுடன் நேரடி தொடர்பிலுள்ளவர்கள் அவர்களும் வீட்டை விட்டு எந்தச் சந்தர்ப்பதிலும் வரவேண்டாம். அதனை மீறி வெளியில் வருபவர்களுக்கு எதிராக கொரோனா சட்டத்தின்கீழ் கடுமையான சட்டநடவடிக்கை எடுக்கப்படும் - என அவர் தெரிவித்தார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# கல்முனை பிராந்தியத்தில் 24 மணிநேரத்தில் 95 பேருக்கு கொரோனா - நால்வர் மரணம்

(சாய்ந்தமருது நிருபர்)



கல்முனை பிராந்தியத்தில் நேற்று 95 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ள அதேவேளை, நால்வர் உயிரிழந்துள்ளனர் - என பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஜீ.சுகுணன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

13 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளை உள்ளடக்கிய கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை நிர்வாகப் பிரிவில் நாளாந்தம் சுமார் 100 பேர் அளவில் கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்படுகின்றனர்.

நேற்று புதன்கிழமை முற்பகல் 10 மணி வரையான 24 மணிநேரத்தில் 95 புதிய கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டிருக்கின்றனர். இவர்களுள் ஆகக்கூடிய நோயாளர்கள் கல்முனை வடக்கு சுகாதாரப் பிரிவிலிருந்து 24 பேர் அடையாளம் காணப்பட்டிருக்கின்றனர். காரைதீவு சுகாதாரப் பிரிவில் 14 பேரும் ஆலையடிவேம்பு சுகாதாரப் பிரிவில் 10 பேரும் சாய்ந்தமருது, சம்மாந்துறை, நிந்தவூர் ஆகிய சுகாதாரப் பிரிவுகளில் தலா 06 பேர் வீதமும் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

அத்துடன், கொரோனா தொற்று காரணமாக கல்முனை பிராந்தியத்தில் ஒரேநாளில் நால்வர் உயிரிழந்திருக்கின்றனர்.

கல்முனை தெற்கு சுகாதாரப் பிரிவைச் சேர்ந்த 73 வயது ஆண் ஒருவரும் சாய்ந்தமருது பிரதேசத்தைச் சேர்ந்த 74 வயது பெண் ஒருவரும் சம்மாந்துறையைச் சேர்ந்த 55 வயது ஆண் ஒருவரும் அட்டாளைச்சேனையைச் சேர்ந்த 64 வயது ஆண் ஒருவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இதன்படி கல்முனை பிராந்தியத்தில் இதுவரை கொரோனா தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 112 ஆக உயர்ந்துள்ளது. அதேவேளை, இதுவரை கொரோனா தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கை 5306 ஆக அதிகரித்துள்ளது. இவர்களுள் தற்போது 1158 பேர் வைத்தியசாலைகளிலும் கொவிட் சிகிச்சை நிலையங்களிலும் சிகிச்சைபெற்று வருகின்றனர். அத்துடன், 3,681 பேர் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் - என பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஜீ.சுகுணன் மேலும் தெரிவித்தார்.

# கிழக்கு மாகாணத்தில் கொரோனா கொடூரம்; மக்களை அவதானமாக செயற்படுமாறு கோரிக்கை

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் தௌபீக்



(கிண்ணியா நிருபர்)

இலங்கையின் மேல் மாகாணத்தில் அதிகரித்துக்கொண்ட கொவிட்-19 தொற்று கிழக்கு மாகாணத்திலும் அதிகரித்து வருகிறது. இதனால் மரண வீதங்களும் நான்கு மடங்காக அதிகரித்துள்ளன. மக்கள் அவதானமாக செயற்படவும்- என கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் ஏ.ஆர்.எம்.தௌபீக் தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு நேற்று கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் தெரிவிக்கையில், நாம் அடிக்கடி மக்களுக்காக ஊடகங்களில் கூறுவது பிரபல்யத்துக்காக அல்ல. மக்கள் கவனத்திற்காக சுகாதாரத்துறையினர் அர்ப்பணிப்புடன் பணியாற்றுகிறார்கள். மக்களும் இதற்காக ஒத்துழைக்க வேண்டும். நோய் தொற்று பரவாமல் கவனமாக செயற்படவும். சாதாரண தடுமல் ஏற்பட்டாலும் பிரத்தியேகமாக வைத்தியரிடம் சென்று மருந்துகளை பெற்றுவிட்டு வெளியில் நடமாடி தொற்றை பரப்பாமல் நிதானமாக செயற்படவும்.

தேவையான - தேவையற்ற நிகழ்வுகள், திருமண வைபவங்கள், கோயில், பள்ளிவாசல்கள், தேவாலயங்களில் ஒன்றுகூடுவதை நிறுத்தி, இரு மீற்றர் சமூக இடைவெளிகளை பேணியும் சவர்க்காரமிட்டு கைகளை கழுவியும் இறுக்கமாக சுகாதார நடைமுறைகளை கடைப்பிடிக்கவும். குறிப்பாக பேசும்போது முகக்கவசங்களை அணியவேண்டும்.

தொடர்ச்சியாக இதனை மக்கள் கடைப்பிடித்து செயற்படவும். சாதாரண நோய் ஏற்பட்டாலும் அலுவலகங்களுக்கோ வேலைகளுக்கோ செல்வதை தடுக்கவேண்டும். சில பிரதேசங்களில் கடைகளை சுயமாக மூடியுள்ளார்கள். இதனை ஏனைய பிரதேச மக்களும் பின்பற்றி கொரோனா வைரஸை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர அனைத்து பொதுமக்களும் ஒத்துழைப்புகளை வழங்குமாறும் மக்களை கேட்டுள்ளார்.

# சாய்ந்தமருதில் கொரோனா தொற்றுப் பரவல் தீவிரம்; இளைஞர்கள் எதிர்கால சமுதாயத்திற்கு முன்மாதிரியாக செயற்படவேண்டும்

## சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அமீன் றிசாட்



(நூருல் ஹுதா உமர்)

கொவிட்-19 தாக்கமானது சாய்ந்தமருது பிராந்தியத்தில் உச்சத்தை தொடும் அளவுக்கு இன்றைய நிலைமை சென்றுகொண்டிருக்கின்றது. சில இளைஞர்கள் முகக்கவசம் இல்லாமல் வெளியில் செல்வதாகவும் வீதி ஓரங்களில் கூடிநின்று கதைத்துக்கொண்டு இருப்பதாகவும் அறியமுடிகின்றது. இளைஞர்கள் இந்த நோய் தாக்கத்திற்கு உட்பட்டால் நோய் எதிர்ப்புச் சக்தி மிக அதிகமாக இருப்பதாக நினைத்துக் கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் எமது நாட்டில் ஏற்படக்கூடிய இளவயது மரணங்கள் பற்றி சமூக வலைத்தளங்கள் மூலமாக இன்னும் பார்க்கவில்லையா என்று கேட்க விரும்புகிறேன் - என்று சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எம்.அல் அமீன் றிசாட் கேள்வியெழுப்பியுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும், இன்றைய இளைஞர்கள் நாளைய தலைவர்கள் என்ற கருத்துக்கு மாற்றுக்கருத்தில்லை. அதேபோன்று இன்றைய இளைஞர்கள் எதிர்காலத்தில் வளர்ந்துவரும் சமுதாயத்திற்கு முன்மாதிரியாக திகழவேண்டும். எமது பிரதேசத்தில் மக்களுடைய பொருளாதாரம், உயிர்கள் மற்றும் ஏனைய அடிப்படைத் தேவைகளை முடக்கி மனித வாழ்க்கை வட்டத்தினை சிதைவடையச்செய்யும் கொவிட்-19 பற்றி நமது இளைஞர் சமுதாயம் அறியாமலும் இல்லை. இதனுடைய தாக்கத்தினை உணராமலும் இல்லை.

வீணாக வீதிகளில் உலாவுவதன் மூலம் இளைஞர்கள் நோயாளராக அடையாளம் காணப்பட்டால் அவர்களது குடும்பத்தில் பெற்றோர் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் இருப்பார்கள். அவர்கள் இந்த நோய்த்தாக்கத்திற்கு ஈடுகொடுக்க சக்தி வாய்ந்தவர்களாக உள்ளார்களா என்று சற்று சிந்திக்கவேண்டும். இளைஞர் சமுதாயம் அத்தியாவசியத் தேவையின்றி வெளியே செல்லாதீர்கள், வெளியில் செல்லவேண்டிய கட்டாய தேவையென்றால் முகக் கவசத்தினை முறையாக அணியுங்கள், சமூக இடைவெளியை பின்பற்றுங்கள், கைகளை நன்றாக கழுவிக்கொள்ளுங்கள் மற்றும் பொது இடங்களில் ஒன்றுகூடுவதனை தவிர்த்துக்கொள்ளுங்கள்.

கொவிட்-19 தொற்றாளர்களை கட்டுப்படுத்தும் முகமாக சுகாதார நடைமுறைகளை இறுக்கமாக கடைப்பிடிப்பதற்கு எமது அலுவலக பொதுச் சுகாதார பரிசோதகர் குழு தீர்மானித்துள்ளது. எமது சுகாதார வைத்திய அலுவலக பிரிவில் கடந்த சில தினங்களாக அதிகளவான நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டதுடன், மரணங்களும் ஏற்பட்டு கொண்டிருக்கின்றன.

மாலைநேரங்கள் மற்றும் இரவு நேரங்களில் விளையாட்டு மைதானங்கள், பொது இடங்கள், பூங்காக்கள், உள் வீதிகள், பிரதான வீதிகள் மற்றும் சனநெரிசலாக கூடும் இடங்களில் பாதுகாப்புத்துறையினரின் ஒத்துழைப்புடன் சுகாதார நடைமுறைகளை பின்பற்றாத நபர்களுக்கு எதிராக பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்படுவதுடன், அவர்களுக்கு எதிராக தனிமைப்படுத்தல் சட்ட விதிகளுக்கு அமைவாக நடவடிக்கைகளும் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது - என்று தெரிவித்துள்ளார்.

# மட்டு. போதனா வைத்தியசாலை ஊழியர் மூவாயிரம் போதை மாத்திரைகளுடன் கைது

(க.சரவணன், எஸ்.எம்.எம்.முர்ஷித்)



மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதியில் போதைப்பொருள் மொத்த வியாபாரி ஒருவர் மூவாயிரம் போதை மாத்திரைகளுடன் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

வாழைச்சேனை காகித ஆலை இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதியில் கல்முனை பிரதேசத்தில் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பின்போதே 32 வயதுடைய சந்தேக நபர் மூவாயிரம் போதை மாத்திரைகளுடனும் அதனை விற்பனை செய்வதற்காக பயன்படுத்திய மோட்டார் சைக்கிளுடனும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவர் நீண்டநாட்களாக ஓட்டமாவடி, வாழைச்சேனை பிரதேசங்களில் போதைப்பொருட்களை மொத்தமாக விற்பனைசெய்து வந்தவர் என்றும் இம்மாத்திரைகளை கல்குடா தொகுதிக்கு கொண்டு வரும்போதே, வாழைச்சேனை காகித ஆலை இராணுவ புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலுக்கமைய, புலனாய்வுப் பிரிவினர் நீலாவணை விசேட அதிரடிப் படையினரோடு இணைந்து குறித்த சந்தேக நபரை கைதுசெய்துள்ளனர்.

போதைமாத்திரைகளுடன் கைதுசெய்யப் பட்ட சந்தேகநபர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் ஊழியராக கடமையாற்றுபவர் என்பதுடன், இவர் கொழும்பிலுள்ள முகவரோடு நேரடியாக போதை மாத்திரைகளை இறக்குமதிசெய்து கடந்த ஆறு வருடங்களாக மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களுக்கு விற்பனைசெய்து வந்துள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

குறித்த சந்தேகநபரும் அவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட போதை மாத்திரைகள் மற்றும் மோட்டார் சைக்கிள் என்பன கல்முனை பொலிஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# பனங்காடு பிரதேச வைத்தியசாலை வைத்தியர் பொதுமகன் ஒருவரால் தாக்குதல் – பலர் கண்டனம்

## பாதுகாப்பில்லையென மருத்துவமனைக்கு டாக்டர் வருகைதர மறுப்பு






(அக்கரைப்பற்று நிருபர்)

அக்கரைப்பற்று பனங்காடு பிரதேச வைத்தியசாலையின் வைத்தியர் யூ.எல்.எம்.சகீல் பொதுமகன் ஒருவரால் தாக்கப்பட்டதையடுத்து பாதுகாப்பின்மை காரணமாக நேற்று அவர் பணியிலிருந்து விலகிக்கொண்டார்.

இதனால் சிகிச்சைக்காக அங்கு சென்ற பலர் இன்று ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர். இதேநேரம், கொரோனா உச்சத்தின் மத்தியிலும் மக்களுக்கு சிறந்த சேவையாற்றிவரும் குறித்த வைத்தியருக்கு ஏற்பட்ட நிலை தொடர்பில் வைத்தியசாலை அபிவிருத்தி குழுவும் ஆலையடிவேம்பு பிரதேச பொதுமக்களும் கவலையடைந்துள்ளதுடன், சம்பவத்திற்கு எதிராக பலத்த கண்டனத்தையும் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிலையில், சம்பந்தப்பட்டவருக்கெதிராக உச்ச நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் பொலிஸாரை கேட்டுக்கொண்டனர். நேற்று பிற்பகல் அலிக்கம்பை கிராமத்தில் இடம்பெற்ற வெடிப்புச் சம்பவத்தில் காயமடைந்த கணவன் - மனைவி இருவரும் பனங்காடு வைத்தியசாலைக்கு சிகிச்சைபெற வந்துள்ளனர்.

இந்நிலையில், உடனடி சிகிச்சையளித்த வைத்தியர், சன்னங்கள் காயங்களுக்குள் உள்ளதால் மேலதிக சிகிச்சைக்காக காயமடைந்தவரை அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலைக்கு மாற்ற நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

ஆயினும், காயமடைந்தவர்களை அழைத்துவந்த இன்னுமொருவர் அவர்களை மாற்றக்கூடாது என்றும் உம்மால் சிகிச்சையளிக்க முடியாதென்றும் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்ட துடன், வைத்தியரையும் கடமையிலிருந்த தாதி உள்ளிட்ட சிலரையும் தாக்கியுள்ளார். இதன்போது அங்கிருந்த அம்பியூலன்ஸ் சாரதி உள்ளிட்டவர்களால் வைத்தியர் பாதுகாக்கப்பட்டுள்ளதுடன், பொலிஸாருக்கு தகவலை வழங்கியுள்ளனர்.

இந்நிலையில், அங்கு விரைந்த பொலிஸார் குறித்த நபரையும் கைதுசெய்து விசாரணை மேற்கொண்டு வருவதுடன், காயமடைந்தவர்களை அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

இதனிடையே குறித்த வைத்தியசாலையில் தமக்கு உரிய பாதுகாப்பு இல்லை என தெரிவித்தும் நேற்று வைத்தியர் வைத்தியசாலைக்கு சமூகமளிக்கவில்லை. இதனால் சிகிச்சைக்காக அங்கு கைக்குழந்தைகளுடனும் நோயுடனும் தூரப்பிரதேசங்களிலிருந்து சென்ற பலர் ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர்.

ஆயினும் இத்தாக்குதல் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் இல்லாமை காரணமாகவே நடைபெற்றுள்ளதாகவும் வைத்தியசாலைக்கு தேவையான பாதுகாப்பு உத்தியோகத்தர்களை நியமித்து தருமாறும் வைத்தியசாலை அபிவிருத்திக்குழுவினரும் பொதுமக்களும் உயர் அதிகாரிகளை கேட்டுக்கொண்டனர்.

மேலும் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் கோரிக்கை முன்வைத்தனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# உத்தியோகபூர்வமாக கண்டுபிடிக்கப்படாவிடினும் மட்டக்களப்பில் டெல்ட்டா திரிபு இருப்பதற்கான சந்தர்ப்பங்கள் அதிகம்

## பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி மயூரன் எச்சரிக்கை



மட்டக்களப்பு மாவட்டத்தில் டெல்ட்டா திரிபு இதுவரை உத்தியோகபூர்வமாகக் கண்டுபிடிக்கப்படவில்லை. இருந்தும் தொற்றும் முறை மற்றும் மரண எண்ணிக்கைகளையும் பார்க்கும்போது டெல்ட்டா திரிபு மட்டக்களப்பில் இருப்பதற்கான சந்தர்ப்பங்கள் அதிகம் உள்ளன - என மட்டக்களப்பு பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி என்.மயூரன் தெரிவித்தார்.

நேற்றுக் காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மட்டக்களப்பு மாவட்டத்தில் கொவிட் தொற்றுக்குள்ளான ஒருசிலர் வெளியில் சென்றுவரும் சந்தர்ப்பங்கள் தற்போது அவதானிக்கப்பட்டுள்ளன. இந்த விடயத்தில் மக்கள்தான் சமூகப் பொறுப்புடன் செயற்படவேண்டும். தொற்றுக்குள்ளான வர்களுக்கு என்ன தேவை ஏற்படினும் உறவினர்கள், நண்பர்கள் மூலம் அத்தேவையைப் பூர்த்திசெய்துகொள்ளுங்கள். தயவுசெய்து வீட்டைவிட்டு வெளியில் வரவேண்டாம்.

தொற்றுக்குள்ளானவர்களுடன் நேரடித் தொடர்புடையவர்களும் வீட்டைவிட்டு வெளியில் வரவேண்டாம். அவ்வாறு வரும் சந்தர்ப்பத்தில் தனிமைப்படுத்தல் சட்டத்தின் அடிப்படையில் அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

ஒன்றுகூடல்களை முற்றாகத் தவிர்ப்பதன் மூலமே மட்டக்களப்பில் கொவிட் தொற்றைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரமுடியும். அத்துடன், மிகவும் தேவை இருப்பின் மாத்திரமே வீட்டைவிட்டு வெளிச் செல்லுங்கள், சுகாதார நடைமுறைகளை இறுக்கமாகப் பின்பற்றுங்கள்.

மட்டக்களப்பில் தற்போது தொற்றுக்குள்ளான வர்களை வீட்டில் வைத்துப் பராமரிக்கும் செயற்பாடு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இதில் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள், 02 வயதுக்குட்பட்டவர்கள் தவிர, ஏனையவர்களுக்காக வீடு காற்றோட்ட முடையதாக இருக்கவேண்டும். நோயாளிக்கு தனியான அறை, குளியலறை என்பன காணப்படல் வேண்டும் என்ற விதிமுறைகள் பின்பற்றப்படுகின்றது.

தொற்றுக்குள்ளான அறிகுறிகள் தென்படு மிடத்து - வைத்திய உதவிகள் தேவைப்படுமிடத்து மூன்று தொலைபேசி இலக்கங்கள் பொது மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. வைத்தியரின் தொலைபேசி இலக்கம், கொவிட் மட்டக்களப்பு செயலணியின் தொலைபேசி இலக்கம், பொதுச் சுகாதார உத்தியோகத்தரின் தொலைபேசி இலக்கம் இதன்மூலம் அவர்களுக்குரிய தேவைகளைப் பூர்த்திசெய்துகொள்ள முடியும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இதுவரை 2 இலட்சத்து 66 ஆயிரம் தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளன. இதில் 91 வீதமானவை முப்பது வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இரண்டாவது தடுப்பூசியைப் பொறுத்தவரையில் 61ஆயிரத்து 800 தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளன. மாவட்டத்தில் 30 வயதுக்கு மேற்பட்டவர்களின் 21 வீதமானவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. தொடர்ந்தும் முப்பது வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான தடுப்பூசிகள் வழங்கும் செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இன்னும் 50ஆயிரம் தடுப்பூசிகள் கிடைக்கும் பட்சத்தில் முப்பது வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் தடுப்பூசிகளை வழங்கமுடியும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் டெல்ட்டா திரிபு இதுவரை உத்தியோகபூர்வமாகக் கண்டுபிடிக்கப்படவில்லை. இருந்தும் தொற்றும் முறை மற்றும் மரண எண்ணிக்கைகளையும் பார்க்கும்போது டெல்ட்டா திரிபு மட்டக்களப்பில் இருப்பதற்கான சந்தர்ப்பங்கள் அதிகம் உள்ளன என்று தெரிவித்தார்.

### ஓய்வுபெற்ற கல்விப் பணிப்பாளர் மஜீத்

## கொரோனா தொற்றால் மரணம்



(சாய்ந்தமருது நிருபர்)

சம்மாந்துறை வலயத்திலுள்ள இறக்காமம் கல்விக் கோட்டத்தின் முன்னாள் கல்விப் பணிப்பாளரான எம்.எல்.அப்துல் மஜீட் தனது 70ஆவது வயதில் நேற்றுக் காலமானார்.

சுகயீனம் காரணமாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டபோது கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டதையடுத்து, அங்குள்ள கொரோனா விசேட வைத்தியப் பிரிவில் அவர் சிகிச்சைபெற்றுவந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

இறக்காமம் பெரிய பள்ளிவாசல் தலைவராக வும் அப்பிரதேச அனைத்துப் பள்ளிவாசல்கள் சம்மேளனத் தலைவராகவும் அப்துல் மஜீத் பணியாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இருவாரத்துக்கு கிண்ணியா நகரத்துக்கும் பூட்டு; அத்தியாவசிய வர்த்தக நிலையங்களுக்கு அனுமதி

(சீனக்குடா நிருபர்)

கிண்ணியா பிரதேச மற்றும் நகரசபை எல்லைப்பகுதிகளிலுள்ள அத்தியாவசிய தேவையான மரக்கறி, மீன், இறைச்சி பலசரக்குக் கடைகள், பேக்கரி, மருந்தகம் தவிர ஏனைய அனைத்து கடைகளையும் நேற்றிலிருந்து இரு வார காலம் மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கிண்ணியா பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி எம்.எச்.எம்.ரிஸ்வி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

கிண்ணியா பிரதேச கொரோனா கட்டுப்பாட்டுக் குழுவின் தீர்மானத்துக்கிணங்க இந்த முடிவு எடுக்கப்பட்டதாகவும் இதற்கு சகல வர்த்தகர்களும் பொதுமக்களும் ஒத்துழைப்பு தரவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளார்.

சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்று முன்தினம் கொவிட்



தொற்றுக்குள்ளாகி ஒருவர் மரணமடைந்துள்ளார். குறித்த நபர் கிண்ணியா மாலிந்துறை கிராமத்தைச் சேர்ந்தவர் எனவும் ஏற்கனவே நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டவர் என்றும் இதனடிப்படையில் இதுவரைக்கும் கிண்ணியா சுகாதார வைத்திய அதகாரி பிரிவில் கொவிட் 19 தொற்றுடன் மரணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 36 ஆக அதிகரித்திருக்கின்றது என்றும் தெரிவித்தார்.

ஏற்கனவே தொற்றுக்குள்ளானவர்களின் நெருங்கிய உறவினர்களிடமிருந்து நேற்று முன்தினம் 21 பேருக்கு செய்யப்பட்ட அன்ரிஜன் பரிசோதனை முடிவுகளின்படி ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 06 பேருக்கு தொற்று இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. குறித்த நோயாளர்கள் மாஞ்சோலைச்சேனை கிராமத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் அவர் குறிப்பிட்டார்.

கொரோனாவின் மூன்றாவது அலையின் பின்னர் இதுவரைக்கும் 500 நோயாளர்கள் கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

எனவே மக்களை மிக்க அவதானத்துடன் நடந்து கொள்ளுமாறும் சுகாதார நடைமுறைகளை பேணி அத்தியாவசிய தேவைகளுக்கு மாத்திரம் வெளியில் செல்லுமாறும் சுகாதார வைத்திய அதிகாரி எம்.எச்.எம்.றிஸ்வி மக்களை கேட்டுக்கொண்டுள்ளார்.

# கிண்ணியா நகரில் வெளியூர் வியாபாரிகளுக்குத் தடை

(கந்தளாய் நிருபர்)

கொரோனாவின் அபாயத்தை மீண்டும் கிண்ணியா நகர சபைக்குட்பட்ட பிரதேசங்களில் எதிர்கொண்டுள்ளதால் கிண்ணியா நகர சபை தவிசாளர் எஸ்.எச்.எம்.நழீம், அதிரடி உத்தரவொன்றை பொதுமக்களுக்கு அறிவித் துள்ளார்.

இதன்பிரகாரம் கிண்ணியாவிற்கு வெளியூர் வியாபாரிகள் வருவதற்கு தற்காலிகமாக தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதுபற்றி பொதுமக்களுக்கு மேலும் அவர் தெரிவித்துள்ளதாவது,

நாட்டில் கொரோனா மிக வேகமாக பரவி நோயாளர்களின் எண்ணிக்கையும், மரணித்தவர்களின் எண்ணிக்கையும், நாளாந்தம் அதிகரித்துக்கொண்டே செல்கின்றன.

இதன் அபாயத்தை உணர்ந்து பொதுமக்களாகிய நீங்கள் பொறுப்புணர்வுடன் செயற்பட்டு, உங்களையும், உங்கள் குடும்பத்தையும், சமூகத்தையும், பாதுகாத்துக்கொள்ளுமாறு அன்பாக கேட்டுக்கொள்கின்றேன்.

எனவே, பொதுமக்களாகிய நீங்கள் சுகாதாரத் துறையினரின் அறிவுறுத்தல்களை முழுமையாக கடைப்பிடித்து நடக்குமாறும், அவசர தேவைகளின்றி வெளியில் செல்வதனை முற்றாக தவிர்த்துக்கொள்ளுமாறும், பொது இடங்களில் ஒன்றுகூடுவதையும், மரண வீடுகளுக்கு செல்வதையும், திருமண வைபவங்கள் மற்றும் இதர வைபவங்களில் கலந்துகொள்வதையும் தவிர்த்துக்கொள்ளவும்.

மேலும், வாகனங்களில் கிண்ணியா தவிர்ந்த பிரதேசங்களிலிருந்து அங்காடி வியாபாரம் செய்ய வருபவர்கள் திருப்பி அனுப்பப்படுவார்கள் என்பதை அறியத்தருகிறேன். இத்தீர்மானம் நேற்று முதல் 7 நாட்களுக்கு அமுலில் இருக்கும். நிலைமை சீராகாதவிடத்து சுகாதார ஆலோசனைக்கமைய நீடிக்கப்படும் என்பதையும் அறிவிக்கின்றேன் -என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# திருமலையில் 24 மணிநேரத்தில் 213 பேருக்கு தொற்று

## கொரோனாவினால் இதுவரை 176 பேர் உயிரிழப்பு

(சீனக்குடா நிருபர்)

திருகோணமலை மாவட்டத்தில் கடந்த 24 மணி நேரத்தில் (ஓகஸ்ட் 16) 213 பேர் கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதில் 109 ஆண்களும் 104 பெண்களும் அடங்குகின்றனர். அத்தோடு நான்கு மரணங்களும் ஏற்பட்டிருக்கின்றன - என திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

திருகோணமலையின் தற்போதைய கொரோனா நிலைவரம் தொடர்பாக திணைக்களத்தால் வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

இதுவரை கொரோனா வைரஸ் தொற்றினால் திருகோணமலை மாவட்டத்தில் மொத்தம் 6837 பேர் பாதிக்கப்பட்டிருப்பதோடு, 176 மரணங்களும் ஏற்பட்டிருக்கின்றன.

இதில் 110 கர்ப்பிணித் தாய்மார்கள் பாதிக்கப்பட்டிருப்பதோடு, சிறுவர்களைப் பொறுத்தளவில் ஆறு மாதத்துக்கு குறைந்த சிறுவர்கள் 18 பேரும் ஆறு மாதம் தொடக்கம் ஒரு வயதுக்குட்பட்ட சிறுவர்கள் 24 பேரும் 1 தொடக்கம் 5 வயதுக்குட்பட்ட 92 சிறுவர்களும் பாதிக்கப்பட்டிருக்கின்றனர்.

இதுவரை 6,201 நோயாளிகள் குணமடைந்து இருக்கின்றனர் என்றும் 208 நோயாளிகள் தற்போது வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருவதோடு, 26 பேர் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கரடியனாறு பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வு; இராணுவத்தினரின் துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் காயம்



(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு, கரடியனாறு பொலிஸ் பிரிவிலுள்ள முந்தன்குமாரவேளி ஆற்றில் மண் அகழ்வில் ஈடுபட்டவர்கள் மீது இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். குறித்த சம்பவம் நேற்று காலையில் இடம்பெற்றுள்ளதாக கரடியனாறு பொலிஸார் தெரிவித்தனர்.

மண்அகழ்வில் ஈடுபட்ட 26 வயதுடைய முருகையா சசிக்குமார் என்பவரே இவ்வாறு துப்பாக்கிச்சூட்டில் படுகாயமடைந்துள்ளார்.

குறித்த பகுதி ஆற்றில் நேற்றுக் காலை சுமார் 7 மணியளவில் மணல் அகழ்வில் ஈடுபட்டுக்கொண்டிருந்தவர்கள் மீது அங்கு சிவில் உடையில் சென்ற இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியதில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார் என பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதில் படுகாயமடைந்தவர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளதுடன், இது தொடர்பான விசாரணை களை கரடியனாறு பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

இச் சம்பவம் தொடர்பாக துப்பாகிச்சூடு நடத்திய அனுரகுமார என்ற இராணுவ வீரரை மாவடி ஓடை இராணுவமுகாமில் வைத்து பொலிஸார் கைதுசெய்துள்ளதுடன், அவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# கொவிட் தனிமைப்படுத்தலில் இருப்போருக்கு சமைத்த உணவுகள் கந்தளாயில் வழங்கிவைப்பு



(கந்தளாய் நிருபர்)

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் பிரதேசத்தில் கொவிட் தொற்றுக்குள்ளாகி தனிமைப்படுத்தலில் இருக்கும் குடும்பங் களுக்கு சமைத்த உணவுகள் நேற்றிலிருந்து தினமும் வழங்கப்பட்டு வருகின்றன.

திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கபில அத்துக்கோரலவின் ஏற்பாட்டில் சமைத்த உணவுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

கந்தளாய் பிரதேசத்தில் வென்ராசன்புர, கந்தளாவ மற்றும் ரஜஎல போன்ற பகுதிகளில் தனிமைப்படுத்தலில் உள்ளவர்களுக்கு சமைத்த உணவுகள் வழங்கப்பட்டன.

கந்தளாய் பிரதேசத்தில் முந்நூறுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் தனிமைப்படுத்தலில் இருந்துவரும் நிலையில், நாடாளுமன்ற உறுப்பினர் இந்நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றார். கொவிட் தொற்றினால் தனிமைப்படுத்தலில் உள்ளவர்களுக்கு சமைத்த உணவுகளை திருகோணமலை மாவட்டம் முழுவதிலும் முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.



# மட்டு. போதனா வைத்தியசாலையில் குருதித் தட்டுப்பாடு; உடனடியாக இரத்தத்தை வழங்க முன்வருமாறு கோரிக்கை

## பொறுப்பாளர் வைத்தியர் கந்தசாமி கிருஷானந்

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் இரத்தத்திற்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. எனவே, இரத்தத்தை தானமாக வழங்க பொதுமக்கள் முன்வருமாறு வைத்தியசாலை இரத்த வங்கி பொறுப்பாளர் வைத்தியர் கந்தசாமி கிருஷானந் கோரிக்கை விடுத்துள்ளார்.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.சந்திரகாந்தனின் 46 பிறந்த தினத்தை முன்னிட்டு நேற்று இரத்தானம் வழங்கும் நிகழ்வு கட்சி காரியாலயத்தில் இடம்பெற்றபோது அதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையில் வைத்தியர் இவ்வாறு தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்திலுள்ள ஒரேயொரு போதனா வைத்தியசாலை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையாகும். இங்கு பொலநறுவை தொடக்கம் அம்பாறை



பொத்துவில் வரையிலான அதிகளவான நோயாளர்கள் இரத்த சிகிச்சைக்காக வருகின்றனர்.

இந்நிலையில், நாளொன்றுக்கு 30 தொடக்கம் 35 பைந் இரத்தம் தேவைப்படுகின்றது. அதேவேளை, எமது பிரிவின் கீழ் உள்ள களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலை, காத்தான்குடி ஆதார வைத்தியசாலை, வாழைச்சேனை ஆதார வைத்தியசாலைகளுக்கு எமது பிரிவின் ஊடாக இரத்தம் வழங்கப்படு கின்றது.

அதேவேளை, சிறுவர்களுக்கு ஏற்படும் களிசினியா நோயாளர்கள் அதிகளவானோர் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

இந்த நோயாளர்களுக்கு ஒரு மாதத்திற்கோ அல்லது இருவாரங்களுக்கு ஒருமுறை இரத்தம் ஏற்றவேண்டியுள்ளதுடன், விபத்தில் ஏற்படும் இரத்த இழப்பு மற்றும் சத்திரசிகிச்சை களுக்கும் பல்வேறு நோய்களுக்கும் இரத்தம் தேவைப்படுகின்றது.

தற்போது கொரோனா காரணமாக இரத்தம் பெறுவது மிகவும் கஷ்டமாக இருக்கின்றது. எனவே, 18 வயதுக்கும் 58 வயதுக்கும் இடையிலுள்ள சுகதேகியான பொதுமக்கள் இரத்தத்தை நன்கொடை வழங்குபவர்கள் வைத்தியசாலைக்கு நேரடியாக வந்து இரத்தத்தை வழங்குங்கள் அல்லது இரத்தத்தை வழங்கக்கூடிய முகாம்களை ஒழுங்குசெய்து தருமாறு அழைப்பு விடுக்கின்றோம் என அவர் தெரிவித்தார்.

# வேலையற்றோருக்கு வேலை வழங்கும் திட்டத்தில் வெளிநாட்டுப் பட்டதாரிகள் திட்டமிட்டு புறக்கணிப்பு

## அந்த சங்கம் குற்றச்சாட்டு

(கிண்ணியா நிருபர்)

வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலை வழங்கும் திட்டத்தின்கீழ் திட்டமிட்டு வெளிநாட்டுப் பட்டதாரிகள் புறக்கணிப்புக்குள்ளானதாக வெளிநாட்டுப் பட்டதாரிகள் சங்கம் நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

மேலும் அவ்வறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது,

இந்திய அரச பல்கலைக்கழகங்களில் பட்டம் முடித்தவர்கள்கூட இவ்வாறு புறக்கணிப்புக்குள்ளாகியுள்ளனர். அதுமட்டுமன்றி இந்தியாவின் சில அரச பல்கலைக்கழகங்கள் தரப்படுத்தலில் இலங்கை அரச பல்கலைக்கழகங்களை விட முன்னணி வகிக்கின்றன. இந்தியாவின் அரச பல்கலைக்கழகங்களில் பட்டம் முடித்தவர்களுக்கு இலங்கை அரச பல்கலைக்கழகங்கள் முதுமாணி கற்பதற்கு வாய்ப்பை வழங்கும்போது ஏன் தொழில்வாய்ப்பை வழங்குவதற்கு மறுக்கின்றது என்ற முரணை புரிந்துகொள்ள முடியவில்லை.

அதேநேரம், இலங்கை ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்புநாடுகளில் ஒன்று என்றவகையில் இவ்வாறு வெளிநாட்டுப் பட்டதாரிகளுக்கு அரச தொழில் வழங்கமாட்டோம் என்பது சர்வதேச நியமங்களை மீறும் ஒரு செயலாகும். அரசாங்கம் தொடர்ந்து எங்களை புறக்கணித்து வருமாக இருந்தால் எங்கள் பிரச்சினையை ஐ.நா. வரை கொண்டு செல்வதற்கு நிர்ப்பந்திக்கப்படுவோம் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

இருந்தபோதிலும் எமது அரசாங்கம் எமது நிலையைக் கருத்திற்கொண்டு எமக்கான தீர்வைப் பெற்றுத்தரும் என்பதில் நம்பிக்கை வைத்துள்ளோம்.

கடந்த காலங்களில் அரச நியமனங்கள் வழங்கும்போது உள்நாட்டுப் பட்டதாரிகள், வெளிநாட்டுப் பட்டதாரிகள் என்று பாரபட்சம் காட்டப்படவில்லை. தற்போது அரசியல் காரணங்களுக்காகவே இந்த பாரபட்சம் காட்டப்படுகிறது. தொடர்ந்து சிறுபான்மை மக்களை கறுவறுக்கும் செயலாகவே இதனை நோக்கவேண்டியுள்ளது. ஏனெனில், வெளிநாட்டுப் பட்டதாரிகளில் அதிகமானோர் தமிழ் பேசும் மக்களேயாகும்.

வெளிநாட்டுப் பட்டதாரிகள் தொடர்பாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டில் முக்கியமானவை இவர்கள் போலியாக பட்டம் முடித்தவர்கள் என்பதாகும். இந்தக் குற்றச்சாட்டின் மூலமாக வெளிநாட்டின் அரச பல்கலைக்கழகங்களில் முறையாக பட்டம் முடித்தவர்கள் இதனால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

இலங்கையில் போலி பட்டம் முடிப்பதற்கான காரணம் தனியார் பல்கலைக்கழகங்களையும் வெளிநாட்டு பல்கலைக்கழகங்களையும் சரியாக கண்காணித்து முகாமை செய்யாமையாகும்.

கடந்த காலங்களில் வெளிநாட்டுப் பட்டதாரிகளுக்கு அரச நியமனங்கள் வழங்காமல் வெளிநாட்டு பல்கலைக் கழகங்களில் கற்பவர்களுக்கு அரச நியமனங்கள் கிடையாது என சட்ட ஏற்பாடு செய்திருந்தால் நாங்கள் வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் பட்டம் முடிக்காமல் இருந்திருப்போம்.

தற்போது எமது காலநேரம், பொருளாதாரம் என்பவற்றை செலவழித்து பல்வேறு மனஉளைச்சல்களுக்கு உட்பட்ட பின்னர் இவ்வாறு நாங்கள் நிந்திக்கப் படுவது முறையாகுமா?

பல வெளிநாட்டுப் பட்டதாரிகள் 40 வயதைத் தாண்டி விளிம்பு நிலையில் பல்வேறு சுமைகளுக்கு மத்தியில் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். இவர்களின் வாழ்க்கையோடு விளையாடாமல் நல்லதொரு தீர்வு வழங்கப்பட வேண்டும்.

60 ஆயிரம் பட்டதாரிகளுக்கு அரச நியமனம் வழங்கும் திட்டத்தில் ஒரு வெளிநாட்டுப் பட்டதாரியும் உள்ளடக்கப்பட வில்லை என்பது வருந்தத்தக்க விடயமாகும். இலங்கையில் வெளிநாட்டுப் பட்டதாரிகள் 4,000 பேர் இருந்தபோதிலும் சுமார் 2,000 பேரே உயர்தரத் தகுதியுடன் பட்டம் முடித்தவர்களாகும்.

இவர்களுக்குள்ளும் முறையாக பட்டம் முடித்தவர்களை ஆராய்ந்து வழங்கினால் ஒரு குறிப்பிட்ட அளவானவர்களே இருக்கின்றனர்.

தற்போதைய அரச தீர்மானத்திற்கமைய வெளிநாடுகளுக்குச் சென்று பட்டம் பெற்றவர்களுக்கு நியமனம் வழங்கிவிட்டு இலங்கையில் வெளிநாட்டு பல்கலைக் கழகங்களின் கிளைகளில் கற்றவர்களை புறக்கணிப்பது ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு செயலாகும். வெறும் கண்துடைப்புக்காக இவ்விடயங்களை செய்யாமல் கஷ்டப்பட்டு படித்த பட்டதாரிகளின் வாழ்வில் விளையாடாமல் இதில் அரசியல் தந்திரங்களையும் இன, மத பாரபட்சமற்ற முறையில் சரியாக இந்த நியமன விடயம் கையாளப்பட வேண்டுமென மேலும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# புல்மோட்டை கொவிட் – 19 ஜனாஸா நலன்புரி சங்கத்திற்கு 2 இலட்சம் ரூபா பணம் – சவப்பெட்டிகள் வழங்கிவைப்பு

(திருகோணமலை நிருபர்)

திருகோணமலை புல்மோட்டை கொவிட்-19 ஜனாஸா நலன்புரிச் சங்கத்திற்கு ரொக்கப் பணமும் ஜனாஸா பெட்டிகளும் வழங்கப் பட்டன.

இலங்கையை மட்டுமல்ல, முழு உலகையே பேரதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ள கொவிட்-19ஐ புல்மோட்டையிலிருந்து முற்றாக இல்லாதொழிக்கும் நோக்கிலும் கொவிட்-19 தொற்றினால் மரணிப்பவர்களின் ஜனாஸாக்களை உறவினர்களின் பங்களிப்புடன் உரிய முறையில் நல்லடக்கம் செய்வதற்கு பல்வேறுபட்ட சவால்கள் காணப்படும் நிலையில், இந்தச் சவாலில் வெற்றிகரமாக செயற்பட்டுவரும் புல்மோட்டை கொவிட்-19 ஜனாஸா நலன்புரிச் சங்கத்திற்கு தன்னார்வ தொண்டு அமைப்பான AL-Mifthaவுடன் இணைந்து ஆதம்பாவா பைஷரின் ஏற்பாட்டில் திருகோணமலை புல்மோட்டை கொவிட்-19 ஜனாஷா நலன்புரிச் சங்கத்திற்கு 2 இலட்சம் ரூபா ரொக்கப் பணமும் நான்கு ஜனாஸா பெட்டிகளும் வழங்கப்பட்டன.

மேலும், நிகழ்வின் கொவிட்டினால் மரணிக்கும் ஜனாஸாக்களை கொண்டுசெல்வதற்காக பயன்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் தன்னார்வ தொண்டு அமைப்பான AL-Miftha அமைப்பின் உறுப்பினர்கள், ஆதம்பாவா பைஷர் மற்றும் முன்னாள் குச்சவெளி பிரதேச சபையின் தவிசாளர் ஆதம்பாவா தௌபீக் மற்றும் புல்மோட்டை கொவிட்-19 ஜனாஸா நலன்புரிச் சங்க உறுப்பினர்கள் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.





# யுத்தத்தின் அடிப்படையான விடயங்களுக்குத் தீர்வு எட்டப்படாமல் அரசாங்கம் தட்டிக்கழிக்க முடியாது

## அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கலையரசன்

(வீரமுனை நிருபர்)



அரசாங்கத்திற்கு கால நீடிப்பு கொடுக்கப்படாமல் இருந்திருந்தால் அல்லது பெரும்பான்மை பலத்தோடு இலங்கை அரசாங்கம் சார்பாக ஐ.நா. சபையில் பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டிருந்தால் இந்த அரசாங்கத்தின் மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கமுடியாத சூழல் ஏற்பட்டிருக்கும் - என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் த. கலையரசன் தெரிவித்தார்.

தமிழ்க் கட்சிகளும் தமிழ் அமைப்புகளும் சர்வதேசமும் இணைந்து கடந்த காலத்தில் இலங்கைய அரசாங்கத்திற்கு காலஅவகாசம் கொடுத்தது தொடர்பாக வினவியபோதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

யுத்தத்தின்போது இடம்பெற்றதாக கூறப்படும் அனைத்துப் பிரச்சினைகளுக்கும், பாதிக்கப்பட்ட மக்களுக்கும் நீதி வழங்கப்படவேண்டும் என்பதை தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகிறோம்.

காணாமற்போனோர் விடயத்திற்கு தீர்வு, யுத்தத்தின்போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்களுக்கான தீர்வு, யுத்தத்தின்போது பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மக்களை பொருளாதார ரீதியில் கட்டியெழுப்புதல், பெரும்பான்மையினரால் அபகரிக்கப்பட்ட காணிகளை உரிய மக்களிடம் ஒப்படைத்தல், தமிழ் அரசியல் கைதிகள் அனைவரையும் விடுவித்தல் உட்பட பல்வேறு விடயங்களை ஐ.நா. மனித உரிமைகள் பேரவை அமர்வுகளின்போது அழுத்திக் கூறியுள்ளோம்.

யுத்தத்திற்கு அடிப்படையான விடயங்களுக்குத் தீர்வு எட்டப்படாத நிலையில், தீர்வு பெற்றுக்கொடுக்கும் நடவடிக்கைகளை அரசாங்கம் தட்டிக்கழித்து செயற்பட முடியாது என்பதையும் அரசாங்கம் உணர்ந்து செயற்படவேண்டிய நிலையில் இருக்கிறது.

அன்றிலிருந்து இற்றைவரைக்குமாக பெரும்பான்மை அரசியல் தலைவர்களின் ஏமாற்று அரசியல் இன்னும் எத்தனை காலத்திற்கு வெற்றிபெறும் என்று தெரியவில்லை. எங்களுக்கு தர்மம் வெல்லும் என்ற நம்பிக்கை இருக்கிறது. நிச்சயமாக இறைவனின் நாட்டத்தினாலாவது தமிழ் மக்களுக்கு நிரந்தர தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது. ஏமாற்றுபவர்கள் ஏமாற்றினாலும் இறை நீதியாவது கிடைக்கும் - என்றார்.

# அரசின் பொறுப்பற்ற செயற்பாடு காரணமாக ஆட்சிபீடமேற்றிய மகா சங்கத்தினரது எதிர்ப்பையும் அரசாங்கம் சம்பாதித்துள்ளது

## மூதூர் பிரதேச சபை உப தவிசாளர் துரைநாயகம்

(கந்தளாய் நிருபர்)

நாட்டை முடக்கினால் அது ஆட்சிமாற்றத்துக்கு வழிவகுக்கும் என்பதால் அரசு நாட்டை முடக்குவதற்கு அஞ்சுகிறதா? - என மூதூர் பிரதேச சபை உப தவிசாளர் சி.துரைநாயகம் கேள்வி எழுப்பியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் கொவிட் தொற்று பல மடங்கு அதிகரித்துவரும் நிலையில், அதன் இறப்பு வீதம் இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளுடன் ஒப்பிடக்கூடியளவில் அதிகரித்து வருகின்றது. இந்நிலையில், வைத்திய நிபுணர்கள், பேராசியர்களென வைத்தியத்துறையுடன் சார்ந்த பலரும் நாட்டை முடக்குமாறு கோரிக்கை விடுத்து வரும் நிலையிலும் அரசாங்கம் இறுமாப்புடன் விடாப்பிடியாக இருப்பதன் நோக்கம்தான் என்ன?

நாட்டை முடக்கி நாட்டுமக்களை பாதுகாக்குமாறு உலக சுகாதார ஸ்தாபனமும் பரிந்துரை செய்துள்ள நிலையிலும் நாளாந்த கூலித்தொழிலாளிகள் பாதிக்கப்படுவார்களென ஒரு புறமும் இருக்க, நாட்டை முடக்க அரசு தயாராக இருக்கிறது. ஆனால், வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் எழுத்துமூலமான கோரிக்கைகளை முன்வைக்கவில்லை என்று மறுபுறம் அரசாங்கம் கூறுவது நகைப்புக்குரியதாகும்.

நாட்டை முடக்கும் பட்சத்தில் மக்களுக்கு பணம், உலருணவு போன்ற நிவாரணங்களை அரசு வழங்கவேண்டும். ஆனால், இவற்றை



வழங்குவதற்கு அரசிடம் நிதி இல்லை. இவற்றை வழங்காதபட்சத்தில் மக்களின் எதிர்ப்பை அரசாங்கம் மேலும் சம்பாதிக்க வேண்டிவரும். இது ஆட்சிமாற்றத்துக்கு வழிகோலும் என்பதால் அரசு நாட்டை முடக்க அஞ்சுகிறது.

நாட்டு மக்களை பாதுகாக்கவேண்டிய அரசாங்கம் தங்களை பாதுகாத்துக் கொள்வதற்காக மக்களை பலி கொடுத்துவருவதானது ஏற்றுக் கொள்ள முடியாத விடயமாகும். அரசின் பொறுப்பற்ற செயற்பாட்டின் காரணமாக இன்றைய நிலையில், அனைத்து மக்களது எதிர்ப்பை மாத்திரமல்லாது, அரசை ஆட்சிபீடமேற்றிய மகா சங்கத்தினரது எதிர்ப்பையும் அரசாங்கம் சம்பாதித்து நிற்கிறது. எனவே, அரசாங்கம் உடனடியாக அனைத்து தரப்பினரையும் ஒன்றிணைத்து வைத்திய நிபுணர்களின் கருத்துகளுக்கு முன்னுரிமை வழங்கி, நாட்டுமக்களை பாதுகாப்பதற்குரிய திட்டங்களை வகுத்து செயற்படுத்த வேண்டும் எனவும் சீனாவிடமிருந்து கடன் கிடைத்ததும் நாட்டை முடக்குவதற்கான வாய்ப்புகள் இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கிழக்கு
செய்திகள்
eastthamilan@gmail.com

# மட்டக்களப்பு – கொழும்பு பிரதான வீதியோரங்களில் வீசப்படும் கழிவுகளால் பிரதேசவாசிகள் அசௌகரியம்

## கவனிக்குமாறு ஓட்டமாவடி பிரதேச சபையிடம் மக்கள் கோரிக்கை





(எஸ்.எம்.எம்.முர்ஷித்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஓட்டமாவடி பிரதேச செயலகம் மற்றும் வாகரை பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட மட்டக்களப்பு - கொழும்பு பிரதான வீதியோரங்களில் மக்கள் பயன்படுத்திய கழிவுகள் கொட்டப்பட்டு காணப்படுகின்றன. இதனால் பல்வேறு அசௌகரியங்கள் ஏற்படுவதாக பிரதேசவாசிகள் குற்றஞ்சுமத்துகின்றனர்.

வீதியோரங்களில் சுகாதார துறையினரின் கொரோனா வைரஸ் பாதுகாப்பு ஆடைகள், முகக்கவசங்கள், மலசலகூட கழிவுப்பொருட்கள், மதுபோத்தல்கள், வீட்டுக்கழிவுகள் என்பன வீதிகளில் முறையற்ற விதத்தில் வீசப்பட்டு காணப்படுகின்றன.

இதனால் மட்டக்களப்பு கொழும்பு பிரதான வீதியைப் பயன்படுத்துவோர் நாளாந்தம் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர். அத்துடன், குறித்த பகுதியில் கூடுதலான கால்நடைகள், யானைகள் என்பன உணவு தேடிச் செல்வது வழமை. இவ்வாறு கொட்டப்பட்டு காணப்படும் கொரோனா பாதுகாப்பு கழிவுப்பொருட்கள் மற்றும் வீட்டுக் கழிவுப்பொருட்கள் என்பவற்றின் மூலம் உணவு தேடிச் செல்லும் நிலையில், அதனுள் காணப்படும் கிருமித் தொற்றுகள் கால்நடைகளை மற்றும் யானைகளை பாதித்துவிடக்கூடிய நிலைமை அதிகம் காணப்படுகின்றது.

குறிப்பாக, மட்டக்களப்பு - கொழும்பு பிரதான வீதியினால் பயணிக்கும் பெரும்பாலானோர் வாகனத்தில் செல்லும்போது கழிவுகள் மற்றும் முகக்கவசங்களை வீசிவிட்டு செல்கின்றனர். இதனால் குறித்த பகுதியில் காற்று வீசும் நிலையில் இதனை அண்டிய பகுதியில் வாழும் மக்கள் குடியிருப்புக்கு செல்கின்றது. அத்தோடு வீதியால் பயணிப்பவர்களின் உடல்களில் முகக்கவசங்கள் படுவதால் மக்கள் அச்சத்துடன் பயணிக்கின்றனர்.

குறித்த பகுதிகளில் முகக்கவசங்களை வீசி சூழலுக்கு ஆபத்தை ஏற்படுத்தும் வகையில் சென்றுள்ளதால் மக்கள் பல்வேறு விமர்சனங்களை தெரிவிக்கின்றனர். எனவே, ஓட்டமாவடி பிரதேச செயலாளர், வாகரை பிரதேச செயலாளர், ஓட்டமாவடி பிரதேச சபை இதில் கூடிய கவனம் செலுத்தி கொரோனா ஆடைகளையும், முகக் கவசங்களையும் அப்புறப்படுத்த நடவடிக்கை மேற்கொள்வதுடன், இனிமேலும் இவ்வாறான சம்பவம் இடம்பெறாமல் தடுக்க நடவடிக்கை எடுக்க முன்வரவேண்டும்.

# பத்திரிகையாளர் முபீதா உஸ்மான் காலமானார்

(சாய்ந்தமருது நிருபர்)

இலங்கையின் முதல் முஸ்லிம் பெண் பத்திரிகையாளரான ஊடக வித்தகர் கலாபூஷணம் முபீதா உஸ்மான் தனது 74ஆவது வயதில் காலமானார்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை திடீரென நோய்வாய்ப்பட்ட இவர், சாய்ந்தமருது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டிருந்த நிலையில், அன்றைய தினம் இரவு மரணமடைந்துள்ளார். அன்ரிஜன் பரிசோதனையின்போது இவருக்கு கொவிட்-19 தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருப்பதாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஜீ.சுகுணன் தெரிவித்துள்ளார்.

தலைநகர் கொழும்பை பிறப்பிடமாகவும் சாய்ந்தமருதை வசிப்பிடமாகவும்கொண்ட முபீதா உஸ்மான், கடந்த 55 வருடங்களுக்கும் மேலாக கலை, இலக்கிய, ஊடகத்துறை மற்றும் சமூகப்பணிகளில் மிகவும் அர்ப்பணிப்புடன் ஈடுபட்டு வந்துள்ளார்.

இலங்கையின் முதல் முஸ்லிம் பெண் பத்திரிகையாளர் என்ற அந்தஸ்த்தை பெற்றுள்ள இவர் தினபதி, சிந்தாமணி பத்திரிகைகளில் உதவி ஆசிரியராக பணியாற்றியிருப்பதுடன், பின்னர் அரசாங்க தகவல் திணைக்களத்தில் பிரசார உத்தியோகத்தராகவும் பத்திரிகை தொடர்பு உத்தியோகத்தராகவும் பல வருடங்கள் கடமையாற்றியுள்ளார்.

2001 - 2004 காலப்பகுதியில் அரசு - புலிகள் போர்நிறுத்த ஒப்பந்தத்தின் பிரகாரம் ஏற்படுத்தப்பட்ட முஸ்லிம் சமாதான செயலகத்தின் அம்பாறை பிராந்திய பணிப்பாளராகவும் இவர் சிறப்பாக கடமையாற்றியுள்ளார்.

2004ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தைத் தொடர்ந்து சர்வதேச அரச சார்பற்ற நிறுவனமொன்றில் திட்ட இணைப்பாளராக கடமையாற்றி, அம்பாறை மாவட்டத் தில் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப் பட்ட மக்களுக்கு வாழ்வாதார மற்றும் குடியிருப்பு வசதிகளை ஏற்படுத்திக்கொடுப்பதில் முன்னின்று உழைத்துள்ளார்.



கலை, இலக்கிய மற்றும் ஊடகத்துறை பணிகளுக்காக கடந்த 2008ஆம் ஆண்டு கலாசார அலுவல்கள் அமைச்சின் கலாபூஷணம் விருதையும் ஊடகத்துறை சேவைக்காக கடந்த 2013ஆம் ஆண்டு கிழக்கு மாகாண கல்வி, கலாசார, பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஊடக வித்தகர் எனும் முதலமைச்சர் விருதையும் இவர் பெற்றிருக்கிறார்.

அத்துடன், சமூக சேவைகளை மையப்படுத்தி 2012ஆம் ஆண்டு சாய்ந்தமருது பிரதேச செயலகப் பிரிவின் சிறந்த முதல் பெண்ணாகவும் அம்பாறை மாவட்ட ரீதியில் இரண்டாம் நிலையிலும் இவர் தெரிவுசெய்யப்பட்டு, மாவட்ட அரசாங்க அதிபரினால் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டிருக்கிறார்.

மேலும், கலை, இலக்கிய, ஊடகத் துறைக்கு ஆற்றிய சேவைக்காக கடந்த 2020ஆம் ஆண்டு கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில், சாய்ந்தமருது பிரதேச செயலகத்தினால் இவர் கலைஞர் சுவதம் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன், இவ்வருடம் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு ஐ.ரி.என். மற்றும் எம்.ரி.வி. தொலைக்காட்சி நிறுவனங்களினால் ஆளுமைப் பெண் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன் சிலோன் முஸ்லிம் கவுன்சில், மன்சூர் பவுண்டேஷன், மருதம் கலைக்கூடல் மன்றம், கலைச்சுடர் ஷக்காப் மௌலானா பவுண்டேஷன் போன்ற சிவில் சமூக, கல்வி, கலாசார அமைப்புகளினாலும் இவர் பாராட்டி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

தனது குடும்பச்சுமைக்கு மத்தியிலும் சமூகத்தில் குடும்பப் பெண்கள் எதிர் நோக்கும் பொருளாதார மற்றும் இதர பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பதிலும் பெண்பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளிலும் கூடிய கவனம் செலுத்தி, அவர்களை முன்னிலைக்குக் கொண்டுவருவதில் இவர் அயராது உழைத்து வந்துள்ளார்.

பல்வேறு நிறுவனங்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புகளை பிரதிநிதித்துவப்படுத்தி, இனங்களிடையே நல்லுறவு, ஐக்கியம் மற்றும் சுகவாழ்வை ஏற்படுத்தும் விடயங்களிலும் மக்களுக்கான நலன்சார் சேவைகளை பெற்றுக்கொடுப்பதிலும் பெரும் பங்காற்றி வந்துள்ளார்.

எப்போதும் எவருடனும் அன்பாகவும் பண்பாகவும் பழகுவதிலும் அவர்களது எந்த விடயமாயினும், அவற்றுக்கு முன்னின்று உதவுவதிலும் சாமர்த்தியமாகத் திகழ்ந்த ஊடக வித்தகர் - கலாபூஷணம் முபீதா உஸ்மான் ஒரு முன்னுதாரணமிக்க பெண்ணாக வாழ்ந்து, வழிகாட்டிச் சென்றுள்ளார்.

# கொரோனா ஜனாஸா நல்லடக்கத்திற்கு காணிப்பற்றாக்குறை; கிழக்கில் இராணுவக்கட்டளைத் தளபதியுடன் விசேட சந்திப்பு



(கல்குடா நிருபர்)

ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள சூடுபத்தினசேனையிலுள்ள கொரோனாவினால் மரணமடையும் உடல்களை அடக்கம் செய்வதில் ஏற்பட்டுள்ள காணிப்பற்றாக்குறை தொடர்பாகவும், உடல்களை அடக்கம் செய்யும் நடவடிக்கைகளை வேறு மாவட்டங்களுக்கு மாற்றம் செய்தல் உட்பட அதனுடன் தொடர்புபட்ட விடயங்கள் தொடர்பாகவும் நாவலடி இராணுவ முகாமில் விசேட சந்திப்பு இடம்பெற்றது.

இச்சந்திப்பில் கிழக்கு மாகாண இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சன்ன விஜயசூரிய, 23 ஆவது படைப்பிரிவின் இராணுவ கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் நளின் கொஸ்வத்த, ஓட்டமாவடி பிரதேச சபையின் தவிசாளர் ஏ.எம்.நௌபர், பிரதித் தவிசாளர் ஏ.ஜீ.எம்.அமீர், ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் எம்.எச்.எம்.தாரிக், பிரதேச சபை உறுப்பினர்கள், கல்குடா உலமா சபையின் பிரிதிநிதிகள், பள்ளிவாசல் நிர்வாகிகள், வர்த்தக சங்கப் பிரதிநிதிகள், கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர்கள், ஏறாவூர் மற்றும் காத்தான்குடி பள்ளிவாசல்கள், முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனப் பிரிதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். இவ்விசேட கூட்டத்தில் பல்வேறு விடயங்கள் விரிவாக ஆராயப்பட்டன.

தற்போது கொரோனாவினால் மரணமடையும் உடல்களை அடக்கம் செய்ய கோறளைப்பற்று மேற்கு பிரதேச செயலகத்தினால் வழங்கப்பட்ட ஐந்து ஏக்கர் காணி முடிவுறும் நிலையிலுள்ளதால், உடனடியாக கொவிட்-19 ஆல் மரணமடையும் உடல்களை அடக்கம் செய்யும் நடவடிக்கைகளை வேறு மாவட்டங்களுக்கோ அல்லது பொருத்தமான இடங்களுக்கோ மாற்றம் செய்யப்பட வேண்டுமெனவும் கொரோனா பாதிப்பில்லாத சடலங்களை நீதிமன்றக் கட்டளைக்கமைய இங்கு அடக்கம் செய்யக்கொண்டு வருவதைத் தவிர்த்து, அவற்றை வேறு பொருத்தமான இடங்களில் அடக்கம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டது.

விடயங்கள் அனைத்தும் விரிவாக ஆராயப்பட்டதன் பின்னர் கிழக்கு மாகாண கட்டளைத்தளபதி கருத்துத் தெரிவிக்கையில்,

மிக விரைவில் திருமலை மாவட்டத்தில் கொவிட் பாதிப்பு மரணங்களை அடக்கம் செய்வதற்கான நடவடிக்கைகளை தாம் மேற்கொண்டு வருவதைக் குறிப்பிட்டார். கொவிட் பாதிப்பில்லாத மரணங்களை இங்கு கொண்டு வராது அவற்றை வேறு பொருத்தமான இடங்களில் அடக்கம் செய்வதற்கான கோரிக்கையை அதனுடன் சம்பந்தப்பட்ட உரிய தரப்பினருக்கு தாம் உடனடியாக அறிவிப்பதாக உறுதியளித்தார்.

சூடுபத்தினசேனைப் பிரதேசத்தில் கொரோனாவினால் மரணமடையும் சடலங்களை அடக்கம் செய்யும் அடக்கஸ்தலம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள 12 ஏக்கர் பாதுகாப்பு வலய காணிகளை தவிர, ஏனைய காணிகளில் விவசாய நடவடிக்கைகள் மற்றும் ஏனைய நடவடிக்கைகளை விவசாயிகளும், பொதுமக்களும் மேற்கொள்வதில் எந்தத்தடையும் இல்லை என்பதையும் குறிப்பிட்டார்.

நாட்டின் தேசிய நலன், நாட்டு மக்களின் நலன், சுகாதாரப் பாதுகாப்பு நிலை என்பவற்றைக் கருத்திற்கொண்டும் நாடு கொவிட் பாதிப்பினால் மிக நெருக்கடியான சூழ்நிலையில் சிக்கியுள்ளதையும் இந்நிலையிலிருந்து இந்நாட்டையும், நாட்டு மக்களையும் மீட்டெடுக்கும் தேசியத்திற்கான மகத்தான பங்களிப்பை வழங்கும் பொருட்டு திருமலையில் அடையாளம் காணப்பட்டுள்ள இடத்தில் கொரோனாவினால் மரணமடையும் உடல்களை அடக்கம் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது எனவும், மாற்று இடத்தில் காணிக்கான அனுமதி கிடைக்கும் வரை தற்போதைய கொரோனாவினால் மரணமடையும் உடல்களை பாதுகாப்பு வலயமாகவுள்ள பிரதேசத்தில் சிறிதளவான காணியில் நல்லடக்கம் செய்வதற்கு கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச செயலாளரிடம் கோரிப் பெறுவதெனவும் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

# மாவனெல்ல புத்தர் சிலை உடைப்பு; தகவல் வழங்கியவருக்கு சன்மானம்

## 25 இலட்சம் ரூபா பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரால் வழங்கிவைப்பு




மாவனெல்ல புத்தர் சிலை உடைக்கப்பட்டமை குறித்து, பொலிஸாருக்கு தகவல் வழங்கிய மொஹமட் ராஷிக் மொஹமட் தஷ்லினுக்கு 25 இலட்சம் ரூபா சன்மானம் வழங்கப்பட்டுள்ளது.

இத்தகவலை பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. புத்தர் சிலை உடைக்கப்பட்டமை குறித்து பொலிஸாருக்கு தகவல் வழங்கியமைக்காக, இனவாதிகள் மொஹமட் ராஷிக் மொஹமட் தஷ்லின் மீது மிலேச்சத்தனமான தாக்குதலை நடத்தியிருந்தனர்.

இந்தத் தாக்குதல் சம்பவத்தில் மொஹமட் ராஷிக் மொஹமட் தஷ்லின், அங்கவீனராகிய நிலையிலேயே, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் இந்த சன்மானத் தொகையை வழங்கியுள்ளார்.

# கண்டி பெரஹெரவில் பங்கேற்ற நடனக் கலைஞர்கள் மூவர் உள்ளிட்ட 19 பேருக்கு கொரோனா




கண்டி ஸ்ரீ தலதா பெரஹெர வீதித்திருவிழா நடைபெற்று வருகின்ற நிலையில், அங்கு பலர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளன. திருவிழாவில் விஷ்ணு விகாரையைச் சேர்ந்த நடனக் கலைஞர்கள் பங்கேற்ற நிலையில், அவர்களில் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கண்டி - சில்வெஸ்டர் கல்லூரியின் சார்பில் நடனக் கலைஞர்களாகப் பங்கேற்றவர்களில் இருவருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளது. இதேவேளை, பெரஹெர விழாவில் பாதுகாப்பு சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த 16 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

# இலங்கை வானொலி முஸ்லிம் நிகழ்ச்சிகளுக்கு மூடுவிழா நடத்த எடுக்கப்பட்ட சூழ்ச்சி முறியடிப்பு

## நீதியமைச்சர் அலி சப்ரிக்கு தென்கிழக்கு முஸ்லிம் பேரவை நன்றி தெரிவிப்பு

(சாய்ந்தமருது நிருபர்)

கல்விச்சேவை நிகழ்ச்சிகளை ஒலிபரப்பும் போர்வையில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தேசிய சேவையில் ஒலிபரப்பாகி வந்த முஸ்லிம் நிகழ்ச்சிகளுக்கு மூடுவிழா நடத்த முற்பட்ட சூழ்ச்சியை விரைந்து முறியடித்த நீதியமைச்சர் அலி சப்ரிக்கு நன்றியும், பாராட்டும் தெரிவிப்பதாக தென்கிழக்கு முஸ்லிம் பேரவை குறிப்பிட்டுள்ளது.

இது விடயமாக பேரவையின் செயலாளர் செயிட் ஆஷிப் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கை வானொலி என்று அழைக்கப்படும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தேசிய சேவை 102.1 மற்றும் 102.3 அலைவரிசைகளில் கடந்த 70 வருட காலமாக முஸ்லிம் சேவை நிகழ்ச்சிகள் தினமும் ஒலிபரப்பாகி வந்த நிலையில், கடந்த திங்கட்கிழமை முதல் இந்த அலைவரிசைகளில் கல்விச் சேவை ஒலிபரப்பு செய்யப்பட்டு வந்தது.

இவ்விடயம் குறித்து நீதியமைச்சர் அலி சப்ரியின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டதைத் தொடர்ந்து அவர் ஊடக அமைச்சர் டலஸ் அழகப்பெரும, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத் தலைவர் ஹட்சன் சமரசிங்க ஆகியோருடன் மேற்கொண்ட அவசர கலந்துரையாடலையடுத்து வழமை போன்று முஸ்லிம் நிகழ்ச்சிகளை ஒலிபரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் இலங்கை வானொலியின் தேசிய சேவை அலைவரிசைகளில் நேற்று புதன்கிழமை (18) தொடக்கம் மீண்டும் வழமை போல் முஸ்லிம் சேவை நிகழ்ச்சிகள் மற்றும் பிறை எப்.எம். நிகழ்ச்சிகளும், பொதுவான தமிழ்ச்சேவை நிகழ்ச்சிகளும் ஒலிபரப்பாகி வருகின்றன.

இந்த அலைவரிசைகளில் தினமும் காலை 8.00 மணி முதல் மு.ப. 10.30 மணி வரையும் இரவு 8.00 மணி முதல் 9.00 மணி வரையும் முஸ்லிம் சேவை நிகழ்ச்சிகளும், இதேவேளை 102.1 அலைவரிசையில் காலை 10.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை கிழக்கு மாகாணத்தை மையப்படுத்திய பிறை எப்.எம்.சேவை நிகழ்ச்சிகளும் ஒலிபரப்பாகி வருகின்றன.

முஸ்லிம் சேவை மற்றும் பிறை எப்.எம். ஆகியவற்றின் மூலம் விளம்பரங்கள் ஊடாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கு பெரும் வருமானம் ஈட்டிக்கொடுக்கப்பட்டு வருகின்ற நிலையில்,இனவாத ரீதியாக சிந்தித்து, இவற்றுக்கு மூடுவிழா நடத்த இலங்கை வானொலியின் சில அதிகாரிகள் முயற்சித்துள்ளமை மிகவும் கவலைக்குரிய விடயமாகும். எவ்வாறாயினும், இது விடயத்தில் துரிதமாக செயற்பட்ட நீதியமைச்சர் அலி சப்ரி, இதன் பாரதூரத் தன்மையை ஊடக அமைச்சர், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத் தலைவர் ஆகியோருக்கு எடுத்துக்கூறியதன் பயனாக, நிலைமையை நேர்மையுடன் புரிந்து கொண்ட அவர்கள் இருவரும் உடனடி நடவடிக்கை எடுத்து, தேசிய சேவையை வழமை நிலைமைக்கு கொண்டு வந்துள்ளமை பாராட்டுக்குரியதாகும் என அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.



புதிதாக தனது கடமைகளைப் பொறுப்பேற்ற வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸை இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே நேற்று சந்தித்தார். பிராந்திய நிலைமைகள் மற்றும் பரஸ்பர நலன் உள்ளிட்ட விடயங்கள் குறித்து இருவரும் கலந்துரையாடியுள்ளனர்.




அண்மையில் மறைந்த சமூக சேவையாளரும், கொடை வள்ளலுமான ஸ்ரீலங்கா சிகாமணி ஸேம் றிபாய் ஹாஜியாரின் வாழ்வும், பணியும் தொடர்பிலான கட்டுரையை ஊடகவியலாளர் ரூமி ஹாரிஸ் எழுதியிருந்தார். 'தமிழன்' பத்திரிகையில் பிரசுரமான அந்தக் கட்டுரையின் பிரதியை ஸேம் றிபாய் ஹாஜியாரது புதல்வர் அல்ஹாஜ் அஹ்ஸன் றிபாயிடம், ஊடகவியலாளர் ரூமி ஹாரிஸ் கொழும்பிலுள்ள ஸேம் நிதியத்தின் தலைமையகத்தில் நினைவுப் பரிசாக வழங்கிவைத்தார்.

# ஒத்துழைப்பினூடாக பிராந்திய - உள்நாட்டு சுற்றுலாத்துறையை புத்துயிர் பெறச் செய்வதில் உலக மட்டத்தில் இலங்கை முன்னிலை

சுற்றுலா ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்காக ஆசிய நாடுகளின் தொடர்பு மற்றும் நம்பிக்கையை வளர்க்கும் நடவடிக்கைகள் பற்றிய மாநாட்டின் உறுப்பு நாடுகளுடனான மெய்நிகர் ரீதியான வணிக ஊடாடும் அமர்வு நேற்று முன்தினம் இலங்கை சுற்றுலா அபிவிருத்திப் பணியகத்துடன் இணைந்து வெளிநாட்டமைச்சு ஏற்பாடு செய்திருந்தது.

27 ஆசிய உறுப்பு நாடுகளிலுள்ள தொடர்பு மற்றும் நம்பிக்கையை வளர்க்கும் நடவடிக்கைகள் பற்றிய மாநாட்டில் பொது மற்றும் தனியார் துறையை பிரதிநிதித்துவப்படுத்தும் சுமார் 100 சுற்றுலாத்துறை வல்லுநர்கள் இந்த வெபினாரில் பங்கேற்றனர். சர்வதேச கூட்டு முயற்சிகளின் முக்கியத்துவம் மற்றும் நன்மைகள் மற்றும் தொற்றுநோய்க்குப் பிந்தைய காலத்தில் மிகவும் நெகிழக்கூடிய மற்றும் நிலையான சுற்றுலாத் துறையை உருவாக்குவதற்கான கூட்டு முயற்சிகள் குறித்து இந்தக் கலந்துரையாடல்களின் போது கவனம் செலுத்தப்பட்டன.

தொடக்கவுரைகளை வழங்கிய பிராந்திய ஒத்துழைப்புக்கான இராஜாங்க அமைச்சர் தாரக்க பாலசூரிய, இலங்கை அரசாங்கம் தனது அசைக்க முடியாத மற்றும் முழுமையான அர்ப்பணிப்பை தொடர்ச்சியாக வெளிப்படுத்தியிருந்தாலும், கொவிட்-19 தொற்றுநோயின் பயங்கரமான அலைகளால் கவலைக்கிடமான பொருளாதார மற்றும் சமூகத் தாக்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக வலியுறுத்தினார். தொற்றுநோயைத் தோற்கடிப்பதற்கும், எமது மக்களின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி அபிலாஷைகளை நிலைநிறுத்துவதற்கும் சுற்றுலாத்துறை முக்கிய பங்கு வகிக்கும் வகையில் ஆசிய உறுப்பு நாடுகளின் தொடர்பு மற்றும் நம்பிக்கையை வளர்க்கும் நடவடிக்கைகள் பற்றிய மாநாடு உட்பட அனைத்து சர்வதேச நிறுவனங்கள் மற்றும் நட்பு அரசாங்கங்களுடன் இலங்கை அரசாங்கம் செயற்படுவதாக அவர் குறிப்பிட்டார்.




இலங்கையானது பரந்த திறந்தவெளி மற்றும் இயற்கை சார்ந்த அனுபவங்கள் மற்றும் தொற்றுநோய்க்குப் பிந்தைய காலத்தில் நாட்டில் சுற்றுலாத்துறையின் மறுமலர்ச்சி தொடர்பான முயற்சிகளில் இலங்கையின் வளமான அனுபவங்களைப் பற்றி விரிவாகப் பேசுவதன் மூலம் தொற்றுநோய்க்குப் பிந்தைய பயண இடமாக தன்னை நிலைநிறுத்துவதற்கான அனைத்து பண்புகளையும் கொண்டுள்ளது என்பதை இலங்கை சுற்றுலாத் துறையின் தலைவர் கிமர்லி பெர்னாண்டோ தனது முக்கிய உரையில் எடுத்துக்காட்டினார்.

இலங்கைக்கு உள்வரும் சுற்றுப்பயண செயற்படுத்துனர்கள் சங்கத்தின் முன்னாள் தலைவர் மஹேன் காரியவம், சுற்றுலாத்துறையில் சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான சங்கத்தின் தலைவர் ரொஹான் அபேவிக்ரம மற்றும் இலங்கை ஹோட்டல் சங்கத்தின் தலைவர் சனத் உக்வத்தே ஆகியோர் இந்த அமர்வில் உரையாற்றினர். அமர்வை இலங்கை சுற்றுலா சந்தைப்படுத்தல் பணிப்பாளர் துஷான் விக்கிரமசூரிய நிர்வகித்தார்.

இந்த விடயத்தில் தமது அனுபவத்தையும், நிபுணத்துவத்தையும் பகிர்ந்து கொள்ளும் போது, வெபினாரில் பங்கேற்கும் உலகளாவிய தொழில் வல்லுநர்கள், கொவிட்டுக்குப் பிந்தைய சூழலில் ஆசியப் பிராந்தியத்தில் தொடர்பு மற்றும் நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகள் குறித்த மாநாட்டிற்குள் சுற்றுலா மறுமலர்ச்சிக்கான முன்னோக்கு வழியை உருவாக்குவதற்கான வரைபடத்தை உருவாக்க ஒப்புக்கொண்டனர்.

தொடர்பு மற்றும் நம்பிக்கையை உருவாக்கும் நடவடிக்கைகள் பற்றிய மாநாடானது ஆசியாவில் சமாதானம், பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மையை மேம்படுத்துவதற்கான ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட 27 உறுப்பு நாடுகளின் பன்னாட்டு மன்றமாகும்.

ஆசியாவில் தொடர்பு மற்றும் நம்பிக்கையை கட்டியெழுப்பும் நடவடிக்கைகள் பற்றிய மாநாட்டின் முழு அங்கத்துவத்தை 2018 இல் இலங்கை பெற்றதுடன், தற்போது சுற்றுலாத்துறையில் நம்பிக்கையை உருவாக்கும் நடவடிக்கைகளுக்கான இணை ஒருங்கிணைப்பாளராகப் பணியாற்றுகின்றது.

# சில்லறைக் கடைகள் மூடப்பட்டாலும் சதொச - கூட்டுறவு என்பன அத்தியாவசிய தேவைகளுக்காக திறந்திருக்கும்

## - அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவிப்பு



சுய தனிமைப்படுத்தலுக்குட்படுத்தும் உரிமை சகலருக்கும் இருக்கிறது. அதற்கமைய, மூடப்படும் வர்த்தக நிலையங்களை திறக்குமாறு யாரும் பலவந்தப்படுத்தப் போவதில்லை. அதேபோன்று, மக்களின் தேவைக்காக சதொச மற்றும் கூட்டுறவு போன்றன அத்தியாவசிய தேவைகளுக்காக திறந்திருக்கு மென வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

இதுதொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே இவ்வாறு குறிப்பிட்டார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொரோனா தொற்றுப்பரவல் நிலைமையின் மத்தியில் பொதுமக்களின் சேவைகளை நிவர்த்தி செய்வது தொடர்பில் நாங்கள் கலந்தாலோசித்தே வருகிறோம். மக்களின் அத்தியாவசிய சேவையை நிவர்த்திசெய்ய வேண்டியது அவசியம். விரும்பியோ விரும்பாவிட்டாலோ அந்த அத்தியாவசிய சேவையை முன்னெடுத்துச் செல்ல வேண்டியது அவசியமாகும்.

சுயமாக தனிமைப்படுத்தலுக்கான முழு உரிமையும் இருக்கிறது. நாடுபூராகவுமுள்ள சிறியளவான விற்பனை நிலையங்கள் மூடப்பட்டாலும் சதொச மற்றும் கூட்டுறவுகள் திறந்திருக்கும்.

ஆகவே, ஏனைய விற்பனை நிலையங்களின் உரிமையாளர்கள் தமது விருப்பத்துக்கேற்ப கடைகளை மூட முடியும். எந்தவொரு சந்தர்ப்பத் திலும் மூடப்பட்டுள்ள கடைகளை பலவந்தமாக திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது. அவ்வாறு அவர்கள் கடைகளை மூடிவைப்பார்களாக இருந்தால் எந்தப் பிரச்சினையும் ஏற்பாடு.

தம்மைத்தாமே தனிமைப்படுத்திக்கொள்ளும் உரிமை அவர்களுக்கு இருக்கிறது. எனவே, எதற்காகவும் பொலிஸாரோ அல்லது வேறு எவருமோ கடைகளை திறக்குமாறு பலவந்தப்படுத்த போவதுமில்லை.

# தொற்றா நோய்களை கவனிக்காவிட்டால் கொரோனா மரணங்கள் அதிகரிக்கக்கூடும்

## - வைத்தியர் எம்.அரவிந்தன் எச்சரிக்கை



கொரோனா தொற்று நோயால் ஏற்படுகின்ற மரணங்களை விட தொற்றா நோய்களை கவனிக்காது விட்டால் ஏற்படும் ஆபத்துகள் பாரதூரமாக அமையுமென வைத்தியர் எம்.அரவிந்தன் தெரிவித்தார்.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் யாழ். போதனா வைத்தியசாலை கிளையின் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று போதனா வைத்தியசாலையில் இடம்பெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதைய காலகட்டத்தில் நாங்கள் கொரோனா போன்ற தொற்று நோய்கள் பற்றி கதைத்துக்கொண்டு இருக்கின்றோம். அதேநேரத்தில் தொற்றாநோய்களை நாங்கள் மறந்துகொண்டே செல்கிறோம். கொரோனா எத்தனை வருடங்களுக்கு நிலைத்து நிற்கும் என்பதை எங்களால் கூற முடியாது. ஆகவே, தொற்றுநோய்களை கவனிப்பது போன்று தொற்றா நோய்கள் தொடர்பாக எமது கவனத்தை செலுத்தவேண்டிய காலகட்டத்தில் இருக்கின்றோம். நீரிழிவு நோய், உயர் குருதியமுக்கம், இதய நோய், சுவாச நோய் போன்றவை தொற்றா நோய்களாகும். நீரிழிவு நோயாளிகளுக்கு கொரோனா ஏற்படும்போது அவர்களுக்கான பாதிப்புகள் அதிகமாகவே ஏற்படும்.

யாழ். மாவட்டத்தைப் பொறுத்தவரை 15 சதவீதமானவர்களுக்கு நீரிழிவு நோய் இருக்கிறது. கொழும்பு மாவட்டத்தில் 30 வீதமானவர்களுக்கு நீரிழிவு நோய் இருக்கிறது. 25 சதவீதமானவர்களுக்கு உயர் குருதியமுக்கம் இருக்கின்றது. பலருக்கு கொலஸ்ட்ரோல் பிரச்சினை காணப்படுகின்றது.

இன்றைய காலகட்டத்தில் வயதானவர்களுக்கு நீரிழிவு நோய் இருக்கின்றபோதும் கொரோனா அச்சம் காரணமாக, அவர்கள் சிகிச்சைக்கு வருவதற்கு மிகவும் பயப்படுகிறார்கள்.

கொரோனா தொற்று நோயால் ஏற்படுகின்ற மரணங்களை விட இந்த தொற்றா நோய்களை கவனிக்காதுவிட்டால் ஏற்படும் ஆபத்துகள் பாரதூரமானவை. தொற்றாநோய் உள்ளவர்கள் மிகவும் அவதானமாக இருக்கவேண்டும். தங்களுடைய நோய்களுக்கான சிகிச்சைகள் அனைத்து வைத்தியசாலைகளிலும் வழங்கப்படுகின்றன. யாழ் போதனா வைத்தியசாலைக்கு வர முடியாவிட்டால் அருகிலுள்ள பிராந்திய சிகிச்சை நிலையங்களுக்கு சென்று சிகிச்சை பெற்றுக்கொள்ள முடியும்.

அதேபோல் மருந்துகளை வழங்குவதற்கு நடைமுறைகள் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. நீரிழிவு நோயாளர்கள் தங்கள் உடலில் உள்ள குளுக்கோஸின் அளவை கவனிக்கவேண்டும். மிக இலகுவாக அருகிலுள்ள வைத்தியசாலையில் இதனை பரிசோதித்துக்கொள்ளலாம். தற்போதைய வாழ்க்கை நடைமுறையில் மாற்றம் ஏற்படுகின்றது. அதிக கலோரியுள்ள ஆரோக்கியமற்ற உணவுகளை உண்டு வரும் தன்மை அதிகரித்து வருகின்றது. சிறுவர்களுக்கு நீரிழிவு நோய் ஏற்படுகின்றது. பெற்றோர்கள் அனைவரும் இணைந்து ஆரோக்கியமான உணவுப்பழக்கம் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

ஆகவே, தொற்றா நோய்கள் தொடர்பில் நாங்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும் இருதய நோய் உள்ளவர்களுக்கு மாரடைப்பு ஏற்படும் சாத்தியம் இருக்கின்றது. அத்தகைய நோயாளிகள் கூட இன்று வைத்தியசாலைக்கு வருவதற்கு தயங்குகின்றனர். இவ்வாறான நோயுள்ளவர்கள் பயங்களை தவிர்த்து சிகிச்சையை பெற்றுக்கொள்ளுங்கள்.

தடுப்பூசிகள் தொடர்பாக தொற்றாநோய் உள்ளவர்கள் அச்சம் கொண்டுள்ளனர். சிலருக்கு சில பிரச்சினைகள் ஏற்படலாம். ஆனால், இந்த தடுப்பூசி மிகவும் இன்றியமையாதது. தடுப்பூசி தொடர்பாக சந்தேகங்கள் இருப்பின் குடும்ப வைத்தியரின் ஆலோசனை பெற்றுக்கொள்ள முடியும் - என்றார்.

# சுவசெரிய அம்பியூலன்ஸில் சேவையாற்றும் பெண்ணொருவருக்கு கொரோனா தொற்று

## பொலிஸ் அதிகாரிகள் நால்வர் தனிமைப்படுத்தல்

(ஜூட் சமந்த)



சிலாபம் பொலிஸ் பிரிவில் சுவசெரிய (1990) அம்பியூலன்ஸில் சேவையாற்றும் பெண் சேவையாளர் ஒருவர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளமை நேற்று முன்தினம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதற்கமைய, அவர் தங்கியிருக்கும் சிலாபம் பொலிஸ் விடுதியிலிருந்த பெண் பொலிஸார் நால்வர் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.


இதேவேளை, நேற்றுக் காலைவரையில் புத்தளம் மாவட்டத்தில் 110 பேருக்கு கொரோனா உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. புத்தளம் பிரதேசத்தில் 4 பேருக்கும், சிலாபம் மற்றும் ஆராச்சிக்கட்டுவ ஆகிய பிரதேசங்களில் 40 பேருக்கும் தொற்று உறுதிப் படுத்தப்பட்டுள்ளது.

தங்கொட்டுவ பிரதேசத்தில் நால்வரும், வென்னப்புவ பிரதேசத்தில் ஆறு பேரும், நாத்தாண்டிய பிரதேசத்தில் எட்டு பேரும் , மஹவெவ பிரதேசத்தில் 12 பேரும் தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

தொற்றுக்குள்ளாகிய நிலையில் சிகிச்சை பெற்றுவந்த கொரோனா நோயாளர்கள் ஐவர் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

உடப்பு, சாலியவெவ, புத்தளம், சிலாபம் மற்றும் தங்கொட்டுவ ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

# புறக்கோட்டை இரண்டாம் குறுக்குத்தெரு முடக்கம்




ஆடைகள் மற்றும் பரிசுப் பொருட்களை மொத்த மற்றும் சில்லறை விலைக்கு விற்பனை செய்வதற்கு கொழும்பில் பிரபல்யமான கொழும்பு புறக்கோட்டை, இரண்டாம் குறுக்குத்தெருவிலுள்ள சகல தொகை மற்றும் சில்லறை விற்பனை நிலையங்களையும் மூடுவதற்கு அந்த விற்பனை நிலையங்களின் உரிமையாளர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

கொழும்பு கோட்டை, இரண்டம் குறுக்குத் தெருவுக்கு நாடுபூராகவுமுள்ள மக்கள் வருகை தருவதால், அதனைக் கருத்திற்கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

சுகாதாரப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக கொழும்பு கோட்டை, இரண்டாம் குறுக்குத்தெரு கடை உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# அவுஸ்திரேலியாவிலுள்ள இலங்கைச் சமூகத்தால் 2 தொன் மருத்துவ உபகரணங்கள் அனுப்பிவைப்பு



ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நேரடி விமானங்கள் மூலம் மெல்போர்னிலிருந்து கொழும்புக்கு அனுப்பிவைக்கப்பட்ட இரண்டு தொன் மருத்துவ உபகரணங்களை மெல்போர்னிலுள்ள இலங்கையின் துணைத் தூதரகம் ஒருங்கிணைத்தது.

இந்த உபகரணங்கள் கடந்த ஜூன் 09ஆம் திகதி முதல் ஓகஸ்ட் 07 வரையான காலப்பகுதியில் ஒன்பது கட்டங்களாக அனுப்பிவைக்கப்பட்டன.

இந்த உபகரணங்கள் விக்டோரியா, தெற்கு அவுஸ்திரேலியா மற்றும் மேற்கு அவுஸ்திரேலியாவிலுள்ள இலங்கைச் சமூக சங்கங்கள் மற்றும் நலன்விரும்பிகளால் நன்கொடையாக வழங்கப்பட்டன.

உயிர்காக்கும் நாசி ஒட்சிசன் இயந்திரங்கள், ஒட்சிசன் செறிவூட்டிகள், துடிப்பு ஒட்சிமீட்டர்கள், பி.ஐ.பி.ஏ.பி. இயந்திரங்கள், சி.பி.ஏ.பி. இயந்திரங்கள், உட்செலுத்துதல் பம்புகள், டயலிசிஸ் இயந்திரங்கள், நாசி கனுலா ஒட்சிசன் விநியோக முகமூடிகள், ஒட்சிசன் முகமூடிகள் மற்றும் இரத்த அழுத்த அவதானிப்பான்கள் ஆகியவை வழங்கப்பட்டன. இந்த உபகரணங்களை வழங்குவதற்காக ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் சலுகை விமானப் போக்குவரத்தை வழங்கிய அதேவேளை, அந்த உபகரணங்களை சுகாதார அமைச்சிற்கு அனுமதித்து, வழங்குவதற்காக இலங்கை வெளிநாட்டு அமைச்சு உதவியது.

இந்த மிகக் கடினமான காலங்களில் இலங்கையின் விலைமதிப்பற்ற உயிர்களைக் காப்பாற்றும் முகமாக, சரியான நேரத்தில் நன்கொடைகளை வழங்கியமைக்காக அனைத்து சங்கங்கள் மற்றும் நலன்விரும்பிகளுக்கு மெல்போர்னிலுள்ள இலங்கையின் துணைத் தூதரகம் பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கின்றது.





சிலாபம், முன்னேஸ்வரம் ஆலயத்தின் வருடாந்த தீ மிதிப்பு உற்சவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது. சுகாதார ஆலோசனைகளுக்கமைய இடம்பெற்ற இந்த தீ மிதிப்பு நிகழ்வில், குறைந்த எண்ணிக்கையிலான பக்தர்களே கலந்துகொண்டனர். முன்னேஸ்வர ஆலயத்தின் வருடாந்த திருவிழா கடந்த 27ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.
(படங்கள் : ஜூட் சமந்த)




## போதைப்பொருட்களுடன் சந்தேகநபர்கள் கைது

### தலங்கம

தலங்கம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தலாஹேன பிரதேசத்தில் நேற்று முன்தினம் தலங்கம பொலிஸ் அதிகாரிகளினால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது 05 கிராம் 100 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் முச்சக்கரவண்டியில் பயணித்த நபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கல்கடவல, அனுராதபுரம் பிரதேசத்தைச் சேர்ந்த 38 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, தலங்கம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹோகந்தர பிரதேசத்தில் நேற்று முன்தினம் தலங்கம பொலிஸ் நிலைய அதிகாரிகளினால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது 04 கிராம் 200 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஹோகந்தர பிரதேசத்தைச் சேர்ந்த 22 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

### கொம்பனித்தெரு

கொம்பனித்தெரு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வெக்ஷோல் வீதியில் நேற்று முன்தினம் கொம்பனித்தெரு பொலிஸ் நிலைய அதிகாரிகளினால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 02 கிராம் 100 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கியூ வீதி, கொழும்பு 02ஐச் சேர்ந்த 64 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட நபர் கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் ஆஜர்படுத்தப்பட்டிருந்த நிலையில், எதிர்வரும் 30 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

### பொரளை

பொரளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட டீ - 20 வத்தை பிரதேசத்தில் பொரளை பொலிஸ் அதிகாரிகளினால் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 02 கிராம் 850 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பொரளை பிரதேசத்தைச் சேர்ந்த 51 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## துப்பாக்கியுடன் நபரொருவர் கைது - உலுக்குளம்

உலுக்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மீனா நகர் பிரதேசத்தில் நேற்று முன்தினம் செட்டிக்குளம் விசேட அதிரடிப்படை முகாம் அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டு செட்டிக்குளம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

வவுனியா பிரதேசத்தைச் சேர்ந்த 48 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## சட்டவிரோத மதுபானத்துடன் சந்தேகநபர்கள் கைது

### பேலியகொட

போலியகொட குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலுக்கமைய நேற்று முன்தினம் ஜா-எல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கணுவன பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது, 97 லீற்றர் (130 போத்தல்கள்) மதுபானத்துடன் பெண் ஒருவர் கைதுசெய்யப்பட்டு ஜா - எல பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

கணுவன, ஜா - எல பிரதேசத்தைச் சேர்ந்த 50 வயதுடைய பெண்ணொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் நேற்று முன்தினம் வெலிசர நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய சந்தர்ப்பத்தில் அவர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டுள்ளார். அதனையடுத்து சந்தேகநபரிடம் தண்டப்பணம் அறவிடுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

### பண்டாரகம

பண்டாரகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட போல்கொட ஆற்றுப்பகுதியிலுள்ள காட்டுப்பகுதியில் நேற்று முன்தினம் இராணுவ புலனாய்வுப் பிரிவினால் வழங்கப்பட்ட தகவலுக்கமைய பண்டாரகம பொலிஸ் நிலைய அதிகாரிகளினால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது சட்டவிரோத மதுபான தயாரிப்புக்கு பயன்படுத்தப்படும் கோடாவுடன் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து 6 ஆயிரத்து 697 லீற்றர் கோடா கைபற்றப்பட்டுள்ளது. அதற்கமைய 8, 929 போத்தல்கள் இவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளன. அத்துடன், மதுபான தயாரிப்புக்கு பயன்படுத்தப்படும் உபகரணங்களும் கைபற்றப்பட்டுள்ளன.

பாணந்துறை மற்றும் மொரட்டுவை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 38 மற்றும் 29 வயதுடைய நபர்கள் இருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட இருவரையும் எதிர்வரும் 26ஆம் திகதி பாணந்துறை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அறிவித்து பொலிஸார் பிணையில் விடுவித்துள்ளனர்.

## வீதி விபத்துகளில் இருவர் பலி

### குருநாகல்

குருநாகல் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குருநாகல் - தம்புள்ளை வீதியில் நேற்று முன்தினம் படகமுவ காட்டுப்பகுதி பிரதேசத்தில் தம்புள்ளையிலிருந்து குருநாகல் திசையை நோக்கி பயணித்த கார் ஒன்று எதிர் திசையில் வந்த லொறியுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் பலத்த காயங்களுக்குள்ளான காரின் சாரதி குருநாகல் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார்.

பன்சலை வீதி, லெனதொர, தம்புள்ளை பிரதேசத்தைச் சேர்ந்த 47 வயதுடைய நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் குருநாகல் வைத்தியசாலையிக் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், விபத்து தொடர்பில் லொறியின் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார்.

### செவனகல

செவனகல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிரிஹிப்பன்வெவ பிரதேசத்தில் நேற்று முன்தினம் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக வீதியோரமாக நிறுத்திவைக்கப்பட்டிருந்த லொறியொன்று எம்பிலிப்பிட்டியவிலிருந்து தனமல்வில பிரதேசத்தை நோக்கி பயணித்த கெப் ரக வாகனமொன்று லொறியின் பின்னால் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் பலத்த காயங்களுக்குள்ளான கெப் ரக வாகனத்தின் முன்னால் பயணித்த பெண்ணொருவர் டங்டும வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் டங்டும வைத்தியசாலையின் பிரதேச அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், விபத்தில் காயங்களுக்குள்ளான கெப் ரக வாகனத்தின் சாரதியான உயிரிழந்தவரின் மகன் டங்டும வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகின்றார்.

# மன்னாரில் புதிதாக 43 கொரோனா தொற்றுக்குள்ளானோர்; தற்போதுவரை 13 கொவிட் மரணங்கள் பதிவு

(மன்னார் நகர் நிருபர்)

மன்னாரில் இதுவரை 13 கொரோனா மரணங்கள் நிகழ்ந்துள்ளபோதிலும், இவற்றில் 4 மரணங்கள் கொரோனா தடுப்பூசிகள் வழங்கப்பட்ட பின்னர் இடம் பெற்றுள்ளன. இந்த மரணங்களில் 3 பேர் தடுப்பூசி எதனையும் பெற்றுக்கொள்ளாத நிலையில் கொரோனா தொற்றால் உயிரிழந்துள்ளனர் – என மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னாரில் தற்போதுவரை 30 வயதுக்கும் மேற்பட்ட 58 ஆயிரத்து 378 பேருக்கு முதலாவது கொரோனா தடுப்பூசியும், 44 ஆயிரத்து 588 பேருக்கு இரண்டாவது தடுப்பூசியும் வழங்கப்பட்டுள்ளன.

முதலாவது தடுப்பூசி 30 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு 76 சதவீதமும், 2 ஆவது தடுப்பூசி 30 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு 55 சதவீதமும் நேற்று செவ்வாய்க்கிழமை மாலை வரை வழங்கி முடிக்கப்பட்டுள்ளன. மன்னாரில் மொத்தம் 1,330 கொரோனா தொற்றுக்குள்ளானோர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களில் 1,313 பேர் இவ்வருடம் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்களில் 979 பேர் புத்தாண்டு கொத்தணியுடன் தொடர்புடையவர்கள். இம்மாதம் மொத்தமாக 289 பேர் கொரோனா தொற்றுக்குள்ளானோராக அடையாளம் காணப்பட்டுள்ளனர். நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை மேலும் 43 கொரோனா தொற்றுக்குள்ளானோர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்களில் 11 பேர் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையிலும், 25 பேர் சமுதாயத்திலும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களில் 25 பேர் அன்ரிஜன் பரிசோதனையின்போது கொரோனா தொற்றுக்குள்ளானோராக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.மேலும், மன்னாரில் 13 கொரோனா மரணங்கள் நிகழ்ந்துள்ளன. இதில் நான்கு மரணங்கள் கொரோனா தடுப்பூசிகள் வழங்கப்பட்ட பின்னரே இடம்பெற்றுள்ளன.

இந்த மரணங்களில் 3 பேர் தடுப்பூசி எதனையும் பெற்றுக்கொள்ளாத நிலையில் கொரோனா தொற்றினால் உயிரிழந்துள்ளனர்.

அவர்களின் இருப்பிடங்களிலிருந்து சுமார் ஒரு கிலோ மீற்றர் தொலைவுக்குள் கொரோனா தடுப்பூசி வழங்கும் நிலையம் காணப்பட்டபோதிலும் அவர்கள் தடுப்பூசியை பெற்றுக்கொள்ளவில்லை.

மரணித்த நான்காவது நபர் முதலாவது தடுப்பூசியை பெற்றுக்கொண்டுள்ள நிலையில் உயிரிழந்துள்ளார். தற்போது கொரோனா தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுகிறது. எனவே, பொதுமக்கள் விழிப்புடன் சுகாதார நடைமுறைகளை பின்பற்றிக்கொள்ள வேண்டும். கொவிட் அறிகுறிகள் எவையும் காணப்பட்டால் அருகிலுள்ள வைத்தியசாலைக்கு சென்று தங்களை பரிசோதித்துக் கொள்வதற்கான வசதிகள் மன்னார் வைத்தியசாலையில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

தற்போது கொரோனா தொற்றுக்குள்ளானோர் போதுமான அளவு இடவசதியுள்ள காரணத்தினால் வீடுகளில் தங்கவைத்து சுகாதார அதிகாரிகளின் கண்காணிப்பின் கீழ் பராமரிக்கப்பட்டு வருகின்றமையினால் மக்கள் தமக்கு எதுவும் குணம் குறிகள் காணப்பட்டால் எவ்வித அச்சமுமின்றி சுகாதார வைத்திய அதிகாரி அல்லது அருகிலுள்ள வைத்தியசாலையையோ நாட முடியும். தற்போதைய சுகாதார வழிமுறைகளுக்கமைவாக எவ்வித ஒன்றுகூடலையும் நடத்த முடியாதென்பதால் மக்கள் அதனைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

பொலிஸார் அல்லது சுகாதாரத்துறையினருக்கு தெரியாமல் இரகசியமாக ஒன்றுகூடுவதைத் தவிர்த்துக்கொள்வது நல்லது. பைஸர் தடுப்பூசியின் 2ஆவது டோஸ் முருங்கன் டொன்பொஸ்கோ தொழிற்பயிற்சி நிலையத்திலும், மறுச்சிக்கட்டி அல்-ஜஸீர் பாடசாலையிலும் இன்று வியாழக்கிழமை காலை முதல் வழங்கப்படவுள்ளன.

இப்பகுதிகளில் 2 ஆவது தடுப்பூசியை பெற்றுக்கொள்ளாதவர்கள் சென்று பெற்றுக்கொள்ள முடியும்.

மன்னாரில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் காலை 9 மணிமுதல் நண்பகல் 12 மணிவரை 2ஆவது தடுப்பூசியை பெற்றுக்கொள்ள முடியும் - என்றார்.

வடக்கு செய்திகள்

thamilannorth@gmail.com

# விறகு வெட்டச் சென்ற ஒருவர் பரிதாப மரணம்

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட றெட்பானா சந்திக்கு அண்மித்த பகுதியில் விறகுவெட்டச் சென்றவர் இரத்தக் காயங்களுடன் சடலமாகக் காணப்பட்டுள்ளார்.

விறகு வெட்டச் சென்ற நிலையில், அவரைத் தேடிச் சென்றபோது மரக்குற்றி ஒன்றுடன் அவர் இரத்த வெள்ளத்தில் சடலமாகக் காணப் பட்டுள்ளார்.

மரக்குற்றியைத் தூக்கிச் சென்றபோது கால் தடுமாறி வீழ்ந்து குற்றி அவரின் மேல் விழுந்து உயிரிழந்திருக்கலாம் என்று கருதப்படுகின்றபோதிலும், மரணத்துக்கான சரியான காரணம் தெரியவில்லை என்று தெரிவிக்கப் படுகின்றது. இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

உயிரிழந்தவர் வள்ளுவர்புரத்தைச் சேர்ந்த 2 பெண் பிள்ளைகளின் தந்தையான செனவிரத்ன சமரக் கோன் என்று தெரியவந்துள்ளது.

# வர்த்தக நிலையங்களில் அதிகளவில் ஒன்றுகூடுவதை தவிர்த்துக்கொள்ளுங்கள்

## யாழ். வணிகர் கழகத் தலைவர் ஜெயசேகரன் வேண்டுகோள்



யாழ்ப்பாணம் மாவட்ட வர்த்தக நிலையங்களில் அதிகளவில் ஒன்றுகூடுவதைத் தவிர்த்து பாதுகாப்புடன் இருக்குமாறு யாழ்ப்பாணம் வணிகர் கழகத் தலைவர் இ.ஜெயசேகரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தற்போதைய கொவிட் -19 நிலைமைகளை எவ்வாறு கையாள்வது தொடர்பில் கேட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் அவர் தெரிவித்ததாவது;

யாழ்ப்பாணம் மாவட்ட வர்த்தகர்களுக்கான அறிவித்தலாக தற்போது நாட்டில் கொவிட்-19 மிக மோசமாகப் பரவி வருகின்றது. இதன் காரணமாக உயிரிழப்புகளும் அதிகரித்து வருகின்றன என செய்திகள் மூலம் அறிகின்றோம்.

சுகாதாரத்துறையினரும் தொடர்ச்சியாக அறிவுறுத்தல்களை வழங்கி வருகிறார்கள். எனவே, எம்மையும் எமது சமூகத்தையும் பாதுகாத்துக்கொள்வது நம் ஒவ்வொருடைய கடமையாகும். நகர வர்த்தகர்கள் உட்பட அனைத்து வர்த்தகர்களும் தங்கள் வர்த்தக நிலையங்களில் அதிகளவில் மக்கள் கூடுவதை தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

அத்துடன், உரிய சுகாதார விதிமுறைகளையும் இறுக்கமாகப் பின்பற்றுமாறு கேட்டுக்கொள்கிறேன். உணவு விநியோகத்தில் ஈடுபடும் வர்த்தகர்கள் தங்கள் வாடிக்கையாளர்களைத் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு பொருட்களை வீடுகளுக்கு எடுத்துச்சென்று விநியோகிக்கும் முறையைப் பின்பற்றுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

அதுமட்டுமன்றி, பொதுமக்களும் வர்த்தக நிலையங்களில் அதிகளவில் ஒன்றுகூடுவதைத் தவிர்த்து வர்த்தகர்களுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு பொருட்களை வீடுகளுக்கு கொண்டுவரும் நடைமுறையை பின்பற்ற வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

கொவிட்- 19 பரவலும், அதனால் ஏற்படும் உயிரிழப்புகளும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. இதனைக் கட்டுப்படுத்துவதற்காக திருகோணமலை, பதுளை உட்பட மேலும் சில இடங்களிலுள்ள வர்த்தக சங்கங்கள் தங்களது பிரதேச கடைகளை சில வாரங்களுக்கு மூடியுள்ளதாக அறிகின்றோம்.

எனவே, எமது பகுதியிலும் இவ்வாறான சூழ்நிலை ஏற்படாதிருக்க வர்த்தகர்களாகிய ஒவ்வொருவரும் அதியுட்ச கட்டுப்பாடுகளையும், சுகாதார நடைமுறைகளையும் பின்பற்றி ஒத்துழைப்பு வழங்கவேண்டுமென யாழ். வணிகர் கழகம் சார்பாக தங்களைத் தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன் – என்றார்.

# கிளிநொச்சி பொதுச் சந்தைக்கு பூட்டு; வெளியே வியாபாரம் செய்ய அனுமதி

## இச்செயல் கண்டிக்கத்தக்கதென பலரும் சுட்டிக்காட்டு



(கிளிநொச்சி நிருபர்)

கொரோனா தொற்றுக் காரணமாகவும், பொதுச் சந்தையில் அதிகளவு தொற்றுக்குள்ளானவர்கள் அடையாளம் காணப்பட்டதன் காரணமாகவும் கிளிநொச்சி பொதுச் சந்தை நேற்று முதல் மறுஅறிவித்தல் வரை மூடப்படுவதாக கரைச்சி பிரதேச சபை அறிவித்து சந்தை மூடப்பட்டபோது , சந்தைக்கு வெளியே வழமைபோன்று பொதுச் சந்தையின் செயற்பாடுகள் இடம்பெற்றுள்ளன.

சந்தையின் உள்ளே காணப்பட்ட ஓரளவான சுகாதார பாதுகாப்புக்கூட வெளியில் காணப்படாத அளவுக்கு செயற்பாடுகள் இடம்பெற்றுள்ளன. கிளிநொச்சி மாவட்டத்தில் நாளுக்கு நாள் தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. நேற்று முன்தினம் மாத்திரம் 257 பேர் தொற்றுக்குள்ளானோராக அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவ்வாறான நிலையில், பொதுமக்கள் அதிகளவு சுகாதார நடைமுறைகளை பின்பற்றி நடந்துகொள்ள வேண்டுமென சுகாதாரத் தரப்பினரால் வலியுறுத்தப்பட்டுவரும் நிலையில், அதற்கு மாறான செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றமை கவலை தரும் விடயம் எனவும், ஆபத்தின் நிலைமையை உணர்ந்து பொதுமக்களும் ஒத்துழைக்க வேண்டும் என்றும் சுகாதாரப்பிரிவினர் கோரி வருகின்றனர்.

இந்நிலையில், பொதுச்சந்தையைப் பூட்டிவிட்டு வர்த்தகர்களுக்கு வழிகாட்டாது, அவர்களை வெளியில் அனுமதித்து வழமைபோன்று செயற்படுவதற்கு அனுமதி வழங்கிய செயல் கண்டிக்கத்தக்கது எனவும், இது மேலும் தொற்றுப்பரவலுக்கு வழிசமைக்கும் என்றும் பலராலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# முல்லை விவசாயிகளுக்கு சேதனப்பசளை உற்பத்தியை ஊக்குவிப்பது தொடர்பில் விழிப்புணர்வுப் பிரசாரம்

(முல்லைத்தீவு நிருபர்)

முல்லைத்தீவு மாவட்ட விவசாயிகளுக்கு சேதனப்பசளை உற்பத்தியை ஊக்குவிப்பது தொடர்பிலான விழிப்புணர்வுப் பிரசாரம் மேற்கொள்ளப் பட்டு வருகின்றது.

இந்த சேதனப்பசளை ஊக்குவிப்புப் பிரசாரத்தை வடமாகாண விவசாயத் திணைக்களம் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட விவசாயத் திணைக்களம் என்பன இணைந்து முன்னெடுத்துள்ளன.

எதிர்வரும் காலபோகத்திற்கு குறிப்பாக நெற்செய்கை, மறுவயல் பயிர்ச்செய்கை, மரக்கறிப் பயிர்ச்செய்கை, பழப் பயிர்ச்செய்கை என்பவற்றிற்கு பெருமளவான சேதனப்பசளையின் தேவை விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ளது.

எனவே, அந்த சேதனப்பசளையை உற்பத்திசெய்யும்போது விவசாயிகள் கடைப்பிடிக்கவேண்டிய முறைமைகள் உள்ளிட்ட விடயங்கள் இந்த விழிப்புணர்வு பிரசாரத்தினூடாக விவசாயிகளுக்குத் தெளிவுபடுத்தப்பட்டு வருகின்றன.

அதேவேளை, முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒவ்வொரு பிரதேசத்துக்கும் விவசாயத் திணைக்கள அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் மற்றும் பணியாளர்கள் நேரில் சென்று விவசாயிகளுக்கு சேதனப்பசளை ஊக்குவிப்புத் தொடர்பான விழிப்புணர்வு பிரசாரங்களை மேற்கொண்டுவருகின்றனர்.

அந்த வகையில் நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைத்துறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட உடுப்புக்குளம், அளம்பில், கொக்குத்தொடுவாய், கொக்கிளாய் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகளுக்கு சேதனப்பசளை ஊக்குவிப்புத் தொடர்பிலான விழிப்புணர்வுப் பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டன.

மேலும், இந்நிகழ்வில் வடமாகாண விவசாயப் பணிப்பாளர் எஸ்.சிவகுமார், பதில் பிரதி மாகாணப் பணிப்பாளர் திருமதி ஜாமினி சசீலன் மற்றும் விவசாயப் போதனாசிரியர்கள், பாடவிதான உத்தியோகத்தர்கள், விவசாயிகள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நீர்த்தாங்கியில் தொங்கிய நிலையில் சடலம் மீட்பு

கிளிநொச்சி தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இராமநாதபுரம் மாவடி பகுதியிலுள்ள குடிநீர்த்தாங்கியின் ஏணியில் தொங்கிய நிலையில் சடலமொன்று மீட்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை குறித்த சடலம் இனங்காணப் பட்டுள்ளது. மூன்று பிள்ளைகளின் தந்தையான செல்லையா சிவன் என்பவரே இவ்வாறு நீர்த்தாங்கியில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை தர்மபுரம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஊரணி வைத்தியசாலையில் உயிரிழந்த வயோதிபப் பெண்ணுக்கு கொரோனா

## 2 நாட்களின் பின்னர் அறிவிப்பு

வல்வெட்டித்துறை ஊரணி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில், உயிரிழந்த பெண்ணுக்கு கொவிட்-19 நோய்த்தொற்று உள்ளதாக மூன்றாவது நாளான நேற்று அறிக்கையிடப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த 74 வயதுடைய பெண் ஒருவர் திடீர் சுகயீனம் காரணமாக ஊரணி பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில், நேற்று முன்தினம் உயிரிழந்தார்.

அவரது மாதிரிகள் மந்திகை ஆதார வைத்தியசாலை ஊடாக பி.சி.ஆர். பரிசோதனைக்கு அனுப்பப்பட்ட நிலையில், நேற்று மாதிரிகளின் அளவு போதாதென அறிக்கையிடப்பட்டது.

அதனால், அவரது மாதிரிகள் மீளப்பெறப்பட்டு நேற்று மீண்டும் பரிசோதனைக்கு அனுப்பப்பட்ட நிலையில், கொவிட்-19 நோய்த்தொற்று உள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. அதனால், அவரது சடலம் சுகாதார நடைமுறைகளின் கீழ் தகனம் செய்யப்படவுள்ளது.

இதேவேளை, பருத்தித்துறை சுப்பர்மடத்தில் நேற்று அதிகாலை சடலமாக மீட்கப்பட்ட பருத்தித்துறை இராஜகாமத்தைச் சேர்ந்த வைரவா நாகரட்ணம் (வயது -78) என்ற முதியவரின் மாதிரிகளும் மீளப்பெற வேண்டும் என்று அறிக்கையிடப்பட்டுள்ளது.

# கொரோனா அச்சத்தில் வேறு நோய்களுக்கு சிகிச்சை பெறாது உயிரிழப்பவர்கள் அதிகரிப்பு

## வைத்தியர் மதிவாணம் தெரிவிப்பு

கொரோனா தொற்று ஏற்பட்டுவிடும் என்று நினைத்து வேறு நோய்களுக்கு சிகிச்சை பெறுவதை தவிர்ப்பதால் உயிரிழக்கின்ற சந்தர்ப்பங்கள் அதிகளவில் நடந்திருக்கின்றன - என அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் யாழ். போதனா வைத்தியசாலை தலைவர் வைத்தியர் எஸ். மதிவாணம் தெரிவித்தார்.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் யாழ். போதனா வைத்தியசாலை கிளையின் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று போதனா வைத்தியசாலையில் இடம்பெற்றது. இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

டெல்ட்டா தொற்றினால் பாதிக்கப்படும் மக்களின் எண்ணிக்கை அதிகரித்து



வருவதுடன், வைத்தியசாலைகளுக்கு சிகிச்சைக்காக வருபவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.

ஆகவே, நோயை கட்டுப்படுத்துவதற்கு பொதுமக்கள் தங்கள் பொறுப்பை உணர்ந்து நடக்க வேண்டும்.

தங்களுக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுவிடும் என்று நினைத்து வேறு நோய்களுக்கு சிகிச்சை பெறுவதை தவிர்ப்பதால் உயிரிழக்கின்ற சந்தர்ப்பங்கள் அதிகளவில் நடந்திருக்கின்றன. இனியும் நடக்க வாய்ப்பிருக்கிறது. நாங்கள் கொரோனா நெருக்கடியிலும் ஏனைய நோய்களுக்கான சிகிச்சைகளையும் வழங்கி வருகிறோம்.

மருத்துவத்துறைக்குள் பல தொழிற்சங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருந்தாலும் கூட அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் நாட்டின் நிலைமையை கருத்திற்கொண்டு தொழிற்சங்க நடவடிக்கையில் தற்போது இறங்கவில்லை - என்றார்.

# டெல்ட்டா தொற்றுக்குள்ளானவரிடமிருந்து ஆறு பேருக்கு நோய் பரவும்

ஒரு டெல்ட்டா தொற்றுக்குள்ளானவர் இன்னும் ஆறு பேருக்கு இந்த நோயைப் பரப்ப முடியுமென்பதுடன், நோயாளர்களின் எண்ணிக்கை பல மடங்கானால் அதிகரிக்கும். அத்துடன் ஒட்சிசன் மட்டுமல்லாது சுவாசக் கருவிகள், செயற்கை சுவாசக்கருவிகள் என்பனவற்றைப் பெற்றுக்கொள்வதிலும் நெருக்கடி ஏற்பட்டு நோயாளிகளை பராமரிக்க முடியாத நிலை ஏற்படுமென வைத்தியர் எம்.ஆதவன் தெரிவித்தார்.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் யாழ். போதனா வைத்தியசாலைக் கிளையின் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று போதனா வைத்தியசாலையில் இடம்பெற்றது. இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

டெல்ட்டா திரிபு மிக வேகமாகப் பரவி வருகின்றது. முதலில் கண்டறியப்பட்ட கொரோனாவை விட டெல்டா இரு மடங்கு வீரியமாகப் பரவக்கூடியது. ஒரு டெல்ட்டா தொற்றுக்குள்ளானவர் இன்னும் ஆறு பேருக்கு இந்நோயைப் பரப்ப முடியும்.

கொழும்பு வைத்தியசாலைகளிலும் சரி, இந்தியாவிலும் சரி, தொற்று நிலைமை கட்டுக்கடங்காமல் அதிகரிப்பதால், வைத்தியசாலைகளின் பராமரிக்கும் திறனுக்கு மேலாக நோயாளர்கள் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

நோயாளர்கள் தொகை சற்று அதிகரித்தால் யாழ்ப்பாணத்திலும் இந்நிலை ஏற்படும். இதனை நாங்கள் குறைக்கவேண்டுமெனில் ஒவ்வொரு தனிநபரும் சில சுகாதார நடைமுறைகளை பின்பற்றவேண்டும். வீட்டிலிருந்து அநாவசியமாக வெளியில் வருவதை தவிர்க்க வேண்டும். ஏதாவதொரு காரணத்துக்காக வெளியில் வந்தால் போதிய சமூக இடைவெளியை பேணி எல்லா நேரங்களிலும் முகக்கவசங்களை சரியாக அணிந்திருத்தல் அவசியமாகும். அத்துடன் ஆலய திருவிழாக்கள், கலந்துரையாடல், ஒன்றுகூடல்களை முற்றாக தவிர்க்க வேண்டிய தேவை காணப்படுகின்றது. இந்த நிகழ்வுகளிலிருந்து தொற்று பரவக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன. இதனை நாங்கள் தவிர்க்க வேண்டும். ஒவ்வொரு வைத்தியசாலையும் தமது நோயாளர்களை பராமரிக்கும் தன்மையை பல மடங்கு அதிகரித்திருக்கின்றன. நோயாளிகளின் எண்ணிக்கை பல மடங்காக அதிகரித்துள்ளது. இந்நிலையை நாங்கள் தவிர்க்கவேண்டும்.

இல்லாவிடில் ஒட்சிசன் மட்டுமல்லாது, சுவாசக் கருவிகள், செயற்கை சுவாசக் கருவிகள் என்பனவற்றை பெற்றுக்கொள்வதிலும் நெருக்கடி ஏற்பட்டு நோயாளிகளை பராமரிக்க முடியாத நிலை ஏற்படும் - என்றார்.

# ஆப்கானிஸ்தான் அகதிகளுக்கு அடைக்கலமளிக்க விரும்பும் நாடுகள்!



ஆப்கானிஸ்தானில் வசிக்க விரும்பாத மக்களை அழைத்துக்கொள்ள பல்வேறு நாடுகளும் விருப்பம் தெரிவித்துள்ளன.

இந்நிலையில், 2 ஆயிரம் ஆப்கான் அகதிகளை ஏற்றுக்கொள்வதாக ஆபிரிக்க நாடான உகண்டா அறிவித்துள்ளது. முதற்கட்டமாக 500 பேர் உகண்டாவின் என்டபே விமானநிலையத்தில் தரையிறங்கியுள்ளனர்.

இதேபோல் 20 ஆயிரம் ஆப்கானிய அகதிகளை ஏற்றுக்கொள்வதாக பிரித்தானியா அறிவித்துள்ளது. நடப்பாண்டில் 5 ஆயிரம் பேருக்கு அங்கு வீடு கட்டிக் கொடுக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. புதிய திட்டத்தின்படி ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த பெண்களுக்கும், சிறுமிகளுக்கும் முன்னுரிமை அளிக்கப்படும் என்றும் பிரித்தானியா தெரிவித்துள்ளது.

**உலகத் தலைவர்களுக்கு மலாலாவின் வேண்டுகோள்**

இதேவேளை, ''ஆப்கானிலிருந்து வெளியேறும் அகதிகளுக்கு அனைத்து நாடுகளும் அடைக்கலம் தர வேண்டும்'' - என உலகத் தலைவர்களுக்கு அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற மலாலா யூசுப்சாய் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நெருக்கடியான காலகட்டத்தில் ஆப்கானிஸ்தானிலுள்ள பெண்கள், குழந்தைகள் குறித்து மிகுந்த கவலை கொள்வதாக தெரிவித்திருக்கும் மலாலா, ஆப்கனிலிருந்து வெளியேறும் மக்களை பாகிஸ்தானில் அனுமதிக்குமாறு பிரதமர் இம்ரான் கானுக்கு கடிதம் அனுப்பி இருப்பதாகவும் கூறியுள்ளார். மேலும் அந்தக் கடிதத்தில் குழந்தைகள், பெண்களுக்கு கல்வியும் பாதுகாப்பையும் உறுதிசெய்யவேண்டும் என்றும் தாம் வேண்டுகோள் விடுத்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

**வழமைக்குத் திரும்பாத காபூல்**

ஆப்கானில் தலிபான்கள் ஆட்சியை பிடித்து 2 நாட்களான நிலையில், இயல்பு நிலையை கொண்டுவர முயற்சிகள் நடைபெற்றாலும் காபூலில் நிலையற்ற தன்மையே காணப்படுகிறது.

காபூல் நகர வீதிகளில் பெண்களின் நடமாட்டம் மிகவும் குறைவாக காணப்பட்டது. எந்நேரம் என்ன நடக்கும் என தெரியாததால் காபூல் நகர மக்கள் பெரும்பாலும் வீடுகளிலேயே முடங்கியுள்ளதாக கூறப்படுகிறது.

# ஆப்கானில் ட்விட்டர் தொடர்ந்து செயற்படும்

ஆப்கானிஸ்தானில் ட்விட்டர் தொடர்ந்து இயங்கும் என ட்விட்டர் நிறுவனம் அறிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தானின் நிலைமை வேகமாக மாறிவரும் நிலையில், அங்குள்ள பொதுமக்கள், ட்விட்டர் பதிவுகள் மூலம் உதவிகள் மற்றும் நிவாரணம் கோருவதை காண முடிவதாக தெரிவித்துள்ளது.

பொதுமக்களின் நலனும், அவர்களது பாதுகாப்பும் முக்கியம் என்பதால், அதற்கு முக்கியத்துவமளிக்கும் வகையில், ட்விட்டர் சேவையைத் தொடர முடிவெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனைத்து டுவிட்டர் பதிவுகளையும் தொடர்ந்து கண்காணிப்பதாக தெரிவித்துள்ள ட்விட்டர் நிறுவனம், வன்முறையைத் தூண்டும் பதிவுகளை நீக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் விளக்கமளித்துள்ளது.

**பேஸ்புக்கை தொடர்ந்து வட்ஸ்அப் கணக்குகளும் முடக்கம்**

இதேவேளை, தலிபான்கள் மற்றும் அவர்களின் ஆதரவாளர்களின் வட்ஸ்அப் கணக்குகளும் முடக்கப்படுவதாக பேஸ்புக் நிறுவனம் அறிவித்துள்ளது.

''தலிபான்களின் பேஸ்புக் கணக்குகள் முடக்கப்பட்ட நிலையில் வட்ஸ்அப் கணக்குகளும் முடக்கப்படுகின்றன. தலிபான்களை பயங்கரவாத அமைப்பாக அமெரிக்கா அங்கீகரித்துள்ளதால் நடவடிக்கை எடுக்கப்படும்" என விளக்கமளித்துள்ளனர்.

# ஹெய்ட்டி நிலநடுக்கம்: 1,941 பேர் உயிரிழப்பு

**கரீபியன் தீவுகளில் ஒன்றான ஹெய்ட்டியில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 2 ஆயிரத்தை நெருங்கியுள்ளது.**

**கடந்த சனிக்கிழமை ஹெய்ட்டி தலைநகர் போர்ட் ஒவ் பிரின்ஸ்சிலிருந்து 160 கிலோமீற்றர் தொலைவில் 7.2 ரிச்டர் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இதில் 60,000 வீடுகள் இடிந்து தரைமட்டமான நிலையில், 76,000 கட்டடங்கள் சேதமடைந்தன.**

**இடிபாடுகளில் சிக்கியவர்களை மீட்கும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. இந்நிலையில், கட்டட இடிபாடுகளில் சிக்கி உயிரிழந்த 1,941 பேரின் உடல்கள் இதுவரை மீட்கப்பட்டுள்ளதுடன், 9,900 பேர் படுகாயமடைந்துள்ளனர் எனவும் அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.**

# வல்லரசுகளுக்கு அடங்காத ஆப்கானிஸ்தான்

யுத்தம், போராட்டம், பயங்கரவாதம், குண்டுவெடிப்பு, கடத்தல் எல்லாம் ஆப்கானிஸ்தானில் அடிக்கடி நடைபெறும் சம்பவங்கள். ஆப்கானிஸ்தானில் அமைதி நிலவவேண்டும் என்ற எண்ணத்துடன் அமெரிக்கா அங்கு ஆயுதங்களுடன் களமிறங்கியது. அமெரிக்காவுக்குத் துணையாக நேட்டோவில் அங்கம் வகிக்கும் ஐம்பது நாடுகள் இராணுவ வீரர்களுடன் ஆப்கானிஸ்தனில் கால் பதித்தன.

அமெரிக்காவுக்குத் துணையாக ஆப்கானிஸ்தானுக்குச் சென்ற நாடுகள் அனைத்தும் அங்கிருந்து கட்டம் கட்டமாக வெளியேறிவிட்டன. அமெரிக்காவின் ஜனாதிபதியாக ட்ரம்ப் பதவி வகித்தபோது அமெரிக்கப் படைகள் ஆப்கானிஸ்தானிலிருந்து வெளியேறுவதற்கு நாள் குறிக்கப்பட்டது. அமெரிக்கப் படைகள் வெளியேறிய பின் மூன்று மாதங்களில் தலிபான்கள் ஆப்கானிஸ்தானைக் கைப்பற்றுவார்கள் என அமெரிக்க புலனாய்வுத் தகவல்கள் தெரிவித்தன. ஆனால், ஆறு நாட்களில் தலிபான்கள் தலைநகர் காபூலைக் கைப்பற்றி ஆப்கானிஸ்தானை தமது முழுக் கட்டுப்பாட்டில் கொண்டுவந்தார்கள்.



தலிபான்களின் வெற்றியால் அமெரிக்காவினதும், ஏனைய நாடுகளினதும் வெளியுறவுக் கொள்கை தோல்வியடைந்துள்ளது. அதுமட்டுமல்லாது, உலகின் பெரும் வல்லரசுகளால் அடக்க முடியாத நாடாக வீறுகொண்டு எழுந்துள்ளது ஆப்கானிஸ்தான்.



ரஷ்யா, அமெரிக்கா ஆகிய இரண்டு நாடுகளும் ஆப்கானை அடக்க முயன்று தோல்வியுடன் வெளியேறின. பண்டைய வரலாற்றில் மங்கோலியரின் படையெடுப்பாலும் ஆப்கானிஸ்தானை அசைக்க முடியவில்லை.

1996ஆம் ஆண்டுமுதல் 2001ஆம் ஆண்டுவரை தலிபான்கள் வசம் ஆப்கானிஸ்தான் இருந்தது. ஆனால், அமெரிக்கா மற்றும் நேட்டோ படைகளின் உதவியோடு தலிபான்கள் ஒடுக்கப்பட்டு, அங்கு ஜனநாயக ஆட்சி மலர்ந்தது.


20 ஆண்டு காலமாக காபூல் நகரம் வளர்ச்சிப் பாதையில் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. தலிபான்களின் இறுக்கமான கட்டமைப்பினுள் இருந்த ஆப்கானிஸ்தான் 20 வருடங்களில் மேற்குலக கலாசாரத்துக்கு மாறிவிட்டது.



தலிபான்களின் வருகையால் ஆப்கான் மக்களில் பலர் நாட்டை விட்டு வெளியேற முயற்சி செய்கின்றனர். பாகிஸ்தான் தனது எல்லையை மூடிவிட்டது. ஆப்கானிஸ்தானிலிருந்து வெளியேறும் மக்களுக்கு தஞ்சம் வழங்கவேண்டிய நிலையில் உலக நாடுகள் உள்ளன. உலகிலே ஆப்கானிஸ்தான் அகதிகள் அதிகரிக்கும் நிலை உருவாகியுள்ளது. தலிபான்களுக்குப் பயந்து 1996ஆம் ஆண்டு ஆப்கானிஸ்தானை விட்டு வெளியேறிய இலட்சக்கணக்கன மக்கள் மீண்டும் தாயகம் திரும்பாமல் அகதி வாழ்க்கை வாழ்கின்றனர்.

கிராமங்களிலிருந்து நகரங்களுக்குள் புகுந்த தலிபான்களுக்கு பெருமளவிலான எதிர்ப்பு இருக்கவில்லை. அமெரிக்காவால் பயிற்சியளிக்கப்பட்ட ஆப்கானிஸ்தான் படை வீரர்கள் ஆயுதங்களைக் கொடுத்து விட்டு சரணடைந்தார்கள். இரத்தக்களரி இல்லாமல் முழு நாட்டையும் தலிபான்கள் கைப்பற்றியுள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் 20 வருடங்களாக நிலவிய சுதந்திரம் பறி போய்விட்டதாக அங்குள்ள சிலர் தெரிவிக்கின்றனர். பூங்காக்கள், பொழுதுபோக்கு நிலையங்கள், திருமணமண்டபங்கள் போன்றவை எதிர்காலத்தில் இல்லாதொழிக்கப்படும். திருமண மண்டபமொன்றில் காட்சிப்படுத்தப்பட்ட பெண்களின் படங்களை ஒருவர் வர்ணம் பூசி அழிப்பதை பல ஊடகங்கள் பகிர்ந்துள்ளன. இந்தச் சந்தடியில் களவெடுத்தவர்களுக்கு தலிபான்கள் தமது பாணியில் தண்டனை கொடுத்துள்ளார்கள்.



தலிபான்களில் ஆட்சியின் கீழ் வசிக்க முடியாது என்பதால் பல ஆப்கானிஸ்தானியர்கள் நாட்டைவிட்டு வெளியேறுகின்றனர். இதனால் காபூல் விமான நிலைய ஓடுபாதையில் மக்கள் நிரம்பியுள்ளனர்.

ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி அஷ்ரப் கானி நாட்டைவிட்டு வெளியேறிவிட்டார். இரத்தக்களரி ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காக நான் நாட்டைவிட்டு வெளியேறி விட்டேன் என்று அஷ்ரப் கனி வெளியிட்ட வீடியோவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.. இருப்பினும் அவர் எங்கே இருந்து இந்த வீடியோவை வெளியிட்டார் என்ற தகவலை பகிரங்கப்படுத்தப்படவில்லை.

ஆப்கானிஸ்தானிலிருந்து புறப்பட்ட அஷ்ரப் கனிக்கு, தஜிகிஸ்தானில் தரையிறங்க மறுக்கப்பட்டதாகவும், இதனால், ஓமன் சென்றுள்ளதாகவும் கூறப்படுகிறது. அமெரிக்காவில் அவர் தஞ்சமடைவார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆட்சியை கைப்பற்றியுள்ள நிலையில், நாட்டின் பெயரை 20 ஆண்டுகளுக்கு முன்பு அழைக்கப் பட்டது போன்று "ஆப்கானிஸ் தான் இஸ்லாமிய அமீரகம்" என மாற்றியுள்ளனர். நாட்டின் புதிய ஜனாதிபதியாக முல்லா அப்துல் கனி பராதர் அறிவிக்கப்பட்டுள்ளார். காபூலிலுள்ள பெரும்பாலான சோதனைச்சாவடிகளை தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளதாகவும், 90 சதவீதத்துக்கும் மேற்பட்ட அரச கட்டிடங்கள் தங்களது கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளதாகவும் தலிபான் அதிகாரிகள் தெரிவித்தனர். அரச கட்டிடங்களுக்கு எந்தவொரு சேதத்தையும் ஏற்படுத்தக்கூடாது என்று வீரர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.



பொதுமக்களுக்கு பாதிப்பு இருக்காது என்றும், விமான நிலையத்திலிருந்து நாட்டுக்குள் திரும்ப அனைவரும் அனுமதிக்கப்படுவார்கள் என்று விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

தலிபான்களை தாலாட்டி சீராட்டி வளர்த்துவிட்ட ரஷ்யாவும், அமெரிக்காவும் ஆப்கான் மக்களை நட்டாறில் விட்டுள்ளன. அமெரிக்காவுக்கும் ஆப்கானிஸ்தானுக்கும் இடையிலான பிரச்சினை எனது காலத்தில் முடிவுக்கு கொண்டுவரப்படவேண்டும் என அமெரிக ஜனாதிபதி ஜோ பிடன் தெரிவித்துள்ளார். அமெரிக்க வீரர்கள் ஆப்கானிஸ்தானில் கொல்லப்படக்கூடாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜோர்ஜ் டபிள்யூ புஷ், ஒபாமா, ட்ரம்ப், ஜோ பிடன் ஆகிய நான்கு அமெரிக்க ஜனாதிபதிகள் ஆப்கானிஸ்தான் பிரச்சினையில் சம்பந்தப்பட்டுள்ளனர்.

உலகளாவிய பயங்கரவாதத்துக்கு ஆப்கானிஸ்தான் உதவி செய்யாது, நாட்டு மக்களை துன்புறுத்த மாட்டோம் என தலிபான்கள் உறுதியளித்துள்ளனர். தலிபான்களின் வாக்குறுதி காப்பாற்றப்படுமா இல்லையா என்பதை அமையப்போகும் ஆப்கான் அரசாங்கத்தின் செயற்பாடுதான் தெளிவு படுத்த வேண்டும்.



**- ரமணி**

**2001, செப். 11:** ஆப்கானிஸ்தானில் செயற்பட்ட ஒசாமா பின்லேடனின் அல்-கொய்தா அமைப்பு அமெரிக்கா மீது பயங்கரவாதத் தாக்குதலை நடத்தியது. நியூயோர்க்கின் உலக வர்த்தக மையமான இரட்டை கோபுரம் தகர்ப்பு. 3,000 பேர் பலி.

**2001, ஒக். 7:** ஒசாமாவை ஒப்படைக்க ஆப்கானிஸ்தான் ஆட்சியில் இருந்த தலிபான் மறுப்பு. அமெரிக்க கூட்டணி படைகள் ஆப்கானிஸ்தான் மீது தாக்குதல்.

**2001, நவ. 13:** அமெரிக்க கூட்டணி படை வசம் தலைநகர் காபூல் வந்தது. தலிபான் அமைப்பினர் வெறியேறினர்.

**2004, ஜன. 26:** ஆப்கன் அரசியல் சாசனம் இயற்றப்பட்டது. ஒக். 2004இல் ஜனாதிபதித் தேர்தல் நடந்தது.

**2004, டிச. 7:** ஆப்கன் முதல் ஜனாதிபதியாக ஹமீத் கர்சாய் பதவி ஏற்பு. இரண்டு முறை (10 ஆண்டுகள்) ஜனாதிபதியாக இருந்தார்.

**2006, மே:** தலிபான் பிடியில் மீதம் இருந்த ஹெல்மாண்ட் மாகாணத்துக்கு பிரிட்டன் படை வருகை. சண்டையில் 450 பிரிட்டன் படையினர் பலி.

**2009, பெப். 17:** அமெரிக்கப் படை எண்ணிக்கையை 1.4 இலட்சமாக ஜனாதிபதி ஒபாமா அதிகரித்தார்.

**2011, மே 2:** பாகிஸ்தானின் அபோதாபாத்தில் அமெரிக்கப் படையால் ஒசாமா கொல்லப்பட்டார். அவரது உடல் கடலில் புதைக்கப்பட்டது. அமெரிக்காவின் 10 ஆண்டுகால ஒசாமா தேடுதல் வேட்டை முடிவுக்கு வந்தது.

**2013, ஏப். 23:** தலிபான் நிறுவுனர் முல்லா முகமது ஓமர் மரணம். இவரது மரணச் செய்தி இரண்டு ஆண்டுகள் ரகசியமாக வைக்கப்பட்டிருந்தது. உடல்நலக்குறைவால் பாகிஸ்தானின் கராச்சி மருத்துவமனை ஒன்றில் மரணமடைந்ததாக ஆப்கன் உளவுப் பிரிவினர் கூறினர்.

**2014, டிச. 28:** நேட்டோ கூட்டணி படைகள் ஆப்கானிஸ்தானை விட்டு வெளியேற முடிவு செய்தன. பெரும்பாலான அமெரிக்கப் படைகள் வாபஸ் பெற்றன.

**2015:** தலிபான் மீண்டும் எழுச்சி கண்டது. ஆப்கனில் பல இடங்களில் வெடிகுண்டுத் தாக்குதலை நடத்தியது

**2019, ஜன. 25:** 2014இல் இருந்து உள்நாட்டுப் போரில் 45,000 வீரர்கள் மரணமடைந்ததாக புதிய ஜனாதிபதி அஷ்ரப் கனி தெரிவித்தார்.

**2020, பெப். 29:** டோஹா தலைநகர் கட்டாரில் அமெரிக்கா - தலிபான் இடையே அமைதி ஒப்பந்தம் கையெழுத்து. அல்-கொய்தா அல்லது எந்தவொரு பயங்கரவாத செயலுக்கும் ஆப்கானிஸ்தானில் அனுமதி அளிக்கக்கூடாது என்ற நிபந்தனையை தலிபான் ஏற்றுக்கொண்டது. அமெரிக்கா, நேட்டோ படைகள் 2021, செப். 11க்குள் ஆப்கானிஸ்தானிலிருந்து முழுமையாக வெளியேற சம்மதம்.

**2021, ஆக. 15:** காபூல் நகரிலிருந்து ஜனாதிபதி அஷ்ரப் கனி வெளியேறினார். தலிபான் வசம் மீண்டும் ஆப்கன் வந்தது.

**(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)**

அதேபோல் மாகாண கல்வித் திணைக்களத்தின் மூலம் பிராந்திய வானொலி அலைவரிசைகள், கல்வி முகாமைத்துவ தொகுதி மற்றும் "பியோ டிவி " அலைவரிசைகள் மூலம் நிகழ்ச்சித்திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆனாலும் தரம்-1 தொடக்கம் தரம்-13 வரை அனைத்துப் பாடவிதானங்களும் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலமாக ஒளிபரப்புவதற்கு தற்போது கிடைக்கப்பெற்றுள்ள ஒளிபரப்பு நேரம் போதுமானதாக இல்லை. அதனால், ஸ்ரீலங்கா டெலிகொம் நிறுவனம் கற்பித்தல் உள்ளடக்கங்களை ஒளிபரப்புவதற்காக ஒதுக்கப்பட்ட 07 அலைவரிசைகள், பியோ டிவி அலைவரிசை வலைப்பின்னல் ஊடாக இலவசமாக வழங்குவதற்கு உடன்பாடு தெரிவித்துள்ளது. அதற்கமைய, 'குருகுலம்' கற்பித்தல் உள்ளடக்கங்களை குறித்த 07 அலைவரிசைகள் ஊடாக ஒளிபரப்புவதற்கும், எதிர்வரும் காலங்களில் குறித்த அலைவரிசைகளின் எண்ணிக்கையை 20 வரை விரிவாக்கம் செய்வதற்காகவும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

***13. கட்டுமான இயந்திரங்கள், உபகரணங்கள் மற்றும் ஏனைய, விநியோக மற்றும் போக்குவரத்து வாகனங்களை அரச நிறுவனங்களுக்கு வழங்குவதற்கான பெறுகைக் கோரல்.***

கட்டுமான இயந்திரங்கள், உபகரணங்கள் மற்றும் ஏனைய, விநியோக மற்றும் போக்குவரத்து வாகனங்களை அரச நிறுவனங்களுக்கு வழங்குவதற்காக முற்கூட்டிய தகைமைகளைப் கொண்ட விநியோகஸ்தர்களிடமிருந்து விலைமனுக் கோரலைப் பெறுவதற்கு 2021 மார்ச் மாதம் 15 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, 06 பக்கேஜின் கீழ் 04 நிறுவனங்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளன. அதற்கமைய, அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள நிரந்தர பெறுகைக் குழுவின் பரிந்துரைக்கமைய குறித்த பெறுகைகளை வழங்குவதற்காக நீர்ப்பாசன அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

உள்ளடக்க இணைப்புநிலை அபிவிருத்தி கருத்திட்டம் (Inclusive Connectivity and Development Project)

எமது நாட்டில் பயணிகள் போக்குவரத்து 95 வீதமும் பண்டங்கள் போக்குவரத்து 98 வீதமானவையும் தரைமார்க்கமாகவே இடம்பெறுகின்றன. அதனால், தங்குதடையின்றிய தரைமார்க்கப் போக்குவரத்துக் கட்டமைப்பு காணப்படுதல் கிராமிய பிரதேசங்களுக்கான பொருளாதார நடவடிக்கைகளுக்கு மிகவும் முக்கியமான காரணியாக அமைகின்றது. பாதுகாப்பான, வினைத்திறனான மற்றும் காலநிலைக்குத் தாங்குதிறன் கொண்ட வீதித் தொடர்புகளை ஏற்படுத்துவதற்கும், சமூக வலுவூட்டல் கருத்திட்டங்களை தெரிவுசெய்யப்பட்ட மாவட்டங்களில் விவசாய விநியோகச் சங்கிலியை பலப்படுத்தும் நோக்கிலும் உலக வங்கியின் நிதியுதவியுடன் உள்ளடக்க இணைப்புநிலை அபிவிருத்தி கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. குறித்த கருத்திட்டம் பாதுகாப்பான, வினைத்திறனான மற்றும் காலநிலைக்குத் தாங்குதிறன் கொண்ட வீதித் தொடர்புகளை மேம்படுத்தல் மற்றும் விநியோகச் சங்கிலி மற்றும் விவசாயிகளுக்கான சேவைகள் அணுகுமுறைகளை மேம்படுத்தல் எனும் இரு கூறுகளாக நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கமைய, முன்மொழியப்பட்டுள்ள கருத்திட்டத்தை விவசாய அமைச்சுடன் இணைந்து நடைமுறைப்படுத்துவதற்கும், அதற்குப் பொருத்தமான பொறிமுறையை வகுப்பதற்கும் பெருந்தெருக்கள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

***15. பாகிஸ்தான் - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் அரிசி இறக்குமதி செய்தல்***

தற்போது சந்தையில் நிலவும் அரிசித் தட்டுப்பாட்டுக்குத் தீர்வாக பாகிஸ்தான் - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் காணப்படும் ஏற்பாடுகளை பின்பற்றி துரிதமாக 6,000 மெட்ரிக் தொன் அரிசியை இறக்குமதி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக வர்த்தக அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

***(அரசாங்க தகவல் திணைக்களத்தின் பிரச்சார பிரிவினால் சிங்கள மொழியிலான அமைச்சரவை தீர்மான ஆவணம் தமிழ்மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது)***

# ஆப்கானிஸ்தானில் புதிய ஆட்சியமைக்க முன்னணி தலிபான் தலைவர்கள் வருகை

ஆப்கானிஸ்தானில் ஆட்சிமாற்றத்தைத் தொடர்ந்து புதிய அரசமைக்க தலிபான் இயக்கத்தின் முன்னணித் தலைவர்கள் அந்நாட்டுக்கு வந்துள்ளனர்.

கட்டார் தலைநகர் டோஹாவில், அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்திவந்த தலிபான் இயக்கத் தலைவர்கள் மீண்டும் ஆப்கானிஸ்தான் திரும்பியுள்ளனர். தலிபான் அமைப்பின் இணை நிறுவுனரும், ஜனாதிபதி பதவிக்காக பரிந்துரைக்கப்பட்டிருப்பவருமான முல்லா அப்துல் கனி பராதர் கந்தஹருக்கு வந்து சேர்ந்துள்ளார். அங்குள்ள விமானநிலையத்தில் வந்திறங்கிய அவருக்கு தலிபான்கள் உற்சாகக்குரல் கொடுத்து வரவேற்பளித்துள்ளனர்.

**10 ஆண்டுகளுக்குப் பின் ஆப்கானுக்கு திரும்பிய பராதர்**



தலிபான் அமைப்பை உருவாக்கிய 4 பேரில் ஒருவரான முல்லா அப்துல் கனி பராதர், 10 ஆண்டுகளுக்குப் பின்னர் ஆப்கானிஸ்தானுக்கு திரும்பியதாக தலிபான் அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

கந்தஹர் விமான நிலையத்தில் எடுக்கப்பட்ட காணொளியொன்றை தலிபான்கள் வெளியிட்டுள்ளனர். அதில் தலிபான் அமைப்பின் மூத்த தலைவரும் அந்த அமைப்பின் அரசியல் பிரிவுத் தலைவருமான முல்லா அப்துல் கனி பராதர் இராணுவ விமானத்திலிருந்து இறங்கும் காட்சிகளும் அவரை தலிபான்கள் வரவேற்று முழக்கமிட்டபடி அழைத்துச் செல்லும் காட்சிகளும் உள்ளன.



இது குறித்து விளக்கமளித்துள்ள தலிபான்கள்,

10 ஆண்டுகளுக்குப் பின்னர் கந்தஹரிலிருந்து அப்துல் கனி சொந்த மாகாணமான கந்தஹருக்கு திரும்பியதாக தெரிவித்துள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் அமையவிருக்கும் தலிபான்களின் புதிய அரசாங்கத்தில் தெரிவு பட்டியலில் பராதர் பெயர் முதலிடத்தில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

10 ஆண்டுகளுக்குப் பிறகு பராதர் கந்தஹருக்கு திரும்பிய நிலையில், புதிய அரசு குறித்தும் அமைச்சரவையின் விவரங்கள் குறித்தும் தலிபான்கள் எந்த நிமிடமும் அறிவிப்பு வெளியிடலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆப்கானிஸ்தானிலிருந்து வெளியேற விரும்பும் மக்களை பத்திரமாக வெளியேற்றுவது குறித்தும், அந்நாட்டிலிருந்து சர்வதேச படைகளை விலக்கிக்கொள்வது குறித்தும் தலிபான்களுடன் அமெரிக்கா பேச்சுவார்த்தை நடத்திவருகிறது.

மேலும், போரினால் பிரிந்து சென்ற குடும்பங்கள் ஒன்றுசேருவதற்காக தலிபான்களுடன் பேச்சு வார்த்தையில் ஈடுபடுவோம் என ஐரோப்பிய ஒன்றியமும் அறிவித்துள்ளது.

**தலிபான் தலைவர் ஹக்கானியை சந்தித்த ஹமீத் கர்சாய்**

தலிபான் தலைவர்களில் ஒருவரான ஆனஸ் ஹக்கானியை ஆப்கானிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி ஹமீத் கர்சாய் சந்தித்துப் பேசியுள்ளார். ஆப்கானிஸ்தான் முழுவதையும் கைப்பற்றியுள்ள தலிபான்கள் அடுத்த அரசை அமைப்பது பற்றிப் பேச்சு நடத்தி வருகின்றனர்.



இந்நிலையில், தலிபான்களில் ஒரு பிரிவுக்குத் தலைவரான ஆனஸ் ஹக்கானியுடன் முன்னாள் ஜனாதிபதி ஹமீத் கர்சாய், முந்தைய அரசின் சமாதானக் குழுவைச் சேர்ந்த அப்துல்லாஹ் ஆகியோர் சந்தித்துப் பேசியுள்ளனர். தலிபான்களின் முதல் ஆட்சிக்காலத்துக்குப் பின் 2001 முதல் 2014 வரை ஹமீத் கர்சாய் ஜனாதிபதியாக இருந்தமை குறிப்பிடத் தக்கது.

**ஜலாலாபாதில் துப்பாக்கிச்சூடு; இருவர் பலி**

ஆப்கானின் ஜலாலாபாத் பகுதியில் தலிபான்கள் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 2 பேர் உயிரிழந்துள்ளதுடன், மேலும் 10 பேர் படுகாயமடைந்துள்ளனர். ஆப்கானிஸ்தான் நாட்டுக் கொடியை கையிலெடுத்து மக்கள் கொண்டாடியதால் தலிபான்கள் துப்பாக்கிச்சூடு என தகவல் வெளியாகியுள்ளது.

**தலிபான்களுக்கு எதிராக பெண்கள் போராட்டம்**

இதேவேளை, தலிபான்களுக்கு எதிராக நூற்றுக்கும் மேற்பட்ட பெண்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். ஜலாலாபாத் நகரில் 100இற்கும் மேற்பட்ட பெண்கள் தங்களது உரிமைகளுக்காக தலிபான்களை எதிர்த்து போராட்டத்தில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அத்தோடு, தலைநகர் காபூலிலும் தமது உரிமைகளைக் கோரி பெண்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

மேலும் ஆப்கானின் மற்றொரு பகுதியில் பெண்களுடன் அமர்ந்திருக்கும் இளைஞரொருவரை தலிபானிகள் தாக்கும் காட்சி அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# தலிபான்களை ஆப்கான் அரசாக அங்கீகரிக்க முடியாது!

**கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ திட்டவட்டம்**



தலிபான்களை ஆப்கானிஸ்தான் அரசாக அங்கீகரிக்க முடியாது என கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

ஆப்கானை கைப்பற்றிய தலிபான் அரசோடு நட்புறவாக செயற்படத் தயார் என சீனா அறிவித்துள்ள நிலையில், ''கனடா சட்டத்தின்படி தலிபான்கள் தீவிரவாதிகளே'' என அந்நாட்டு பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, தலிபான்களை ஆப்கானிஸ்தான் அரசாக கனடா ஏற்காது என்றும் தெரிவித்துள்ளார்.

ஆப்கானிலுள்ள கனேடிய பிரஜைகளை அங்கிருந்து பாதுகாப்பாக வெளியேற்றவேண்டும் என்பதிலேயே தங்களின் முழு கவனம் உள்ளது என தெரிவித்துள்ள அவர், வெளிநாட்டினர் ஆப்கானிலிருந்து வெளியேறுவதை தலிபான்கள் தடுக்கக்கூடாது என்றும் வலியுறுத்தியுள்ளார்.

இதனிடையே ஆப்கான் விவகாரம் குறித்து அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனும், பிரித்தானிய பிரதமர் பொரிஸ் ஜோன்சனும் தொலைபேசியில் ஆலோசனை நடத்தினர்.

அப்போது ஆப்கானிஸ்தான் மீண்டும் பயங்கரவாதத்தின் புகலிடமாக அமைந்துவிடாமல் இருப்பதை வல்லரசு நாடுகள் உறுதி செய்யவேண்டும் என்று பொரிஸ் ஜோன்சன் வலியுறுத்தினார்.

ஆப்கான் நிலைவரம் குறித்து எதிர்வரும் 24ஆம் திகதி ஐக்கிய நாடுகள் சபையில் மீண்டும் விவாதம் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**ஆப்கானில் தூதரக செயற்பாடு குறித்து 31இற்கு பின்னரே முடிவு - அமெரிக்கா**

இந்நிலையில், ஆப்கானில் தூதரகத்தை தொடர்ந்து செயற்படுத்துவது குறித்து இம்மாதம் 31ஆம் திகதிக்குப் பின்னரே முடிவெடுக்கப்படும் என்று அமெரிக்கா அறிவித்துள்ளது. ஒகஸ்ட் 31இற்குப் பிறகு ஆப்கானில் பாதுகாப்பான சூழ்நிலை நிலவினால் தூதரகம் செயற்பட வாய்ப்பு ஏற்படும் என்று அமெரிக்க தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ஆப்கானின் 46 ஹெலிகொப்டர்கள் வலுக்கட்டாயமாக தரையிறக்கம்**

ஆப்கானிஸ்தானின் 22 இராணுவ விமானங்கள், 24 இராணுவ ஹெலிகொப்டர்களை வலுக்கட்டாயமாகத் தரையிறக்கப்பட்டன என உஸ்பெக்கிஸ்தான் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து உஸ்பெக்கிஸ்தான் தரப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

குறித்த 46 ஹெலிகொப்டர்களும், 585 வீரர்களுடன் அனுமதிபெறாமல் சட்டவிரோதமாக தங்களது எல்லையை கடக்க முயற்சி செய்தன. எனவே, அவற்றை டெர்மெஸ் விமான நிலையத்தில் வலுக்கட்டாயமாக தரையிறக்கப்பட்டன.

ஆப்கானிஸ்தான் போர் விமானமொன்றை தரையிறக்குவதற்கான முயற்சியில், அந்த விமானம் உஸ்பெக்கிஸ்தான் அரசு விமானத்துடன் மோதி விபத்து ஏற்பட்டது. இரு விமானங்களின் விமானிகளும் பெரசூட் உதவியுடன் குதித்து தப்பித்துவிட்டனர் - என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**குப்பை காடான காபூல் விமான நிலையம்**

ஆப்கானிஸ்தானை தலிபான்கள் கைப்பற்றியதையடுத்து, அங்கிருந்து வெளியேறுவதற்காக காபூல் விமான நிலையத்தில் மக்கள் குவிந்ததால் விமான நிலையம் குப்பை காடாக காட்சியளித்தது.

ஆப்கானில் தங்கியுள்ள வெளிநாட்டினரை மீட்க சம்பந்தப்பட்ட நாடுகளின் விமானங்கள் காபூல் விமான நிலையத்தை சென்றடைந்திருந்தன. குறித்த விமானங்கள் மூலம் தப்புவதற்காக ஆயிரக்கணக்கானோர் வந்திருந்ததால் ஹமீத் கர்சாய் சர்வதேச விமான நிலையம் குப்பை காடாக மாறியுள்ளது.

# வெட்கம்!



ஆப்கானிஸ்தானில் பெண்கள் தேர்தல் அரசியலில் ஈடுபட அனுமதிக்கப்படுவார்களா என்று ஊடகவியலாளரொருவர் கேட்ட கேள்விக்கு சிரிப்பை அடக்க முடியாமல் வெட்கி தலைகுனிந்த தாலிபன் பிரதிநிதி ஒருவர் கெமராவை ஒவ் செய்ய கூறும் வீடியோ வலைதளங்களில் வைரலாகியுள்ளது.

பெண் ஊடகவியலாளர் ஒருவர் ஆங்கிலத்தில் கேள்விளை கேட்க அதற்கு பதிலளிக்கும் தலிபான் பிரதிநிதியொருவரின் வீடியோ காட்சி வெளியாகியுள்ளது. அதில் இஸ்லாமிய ஷரியாத் சட்டம் அனுமதிக்கும் அளவுக்கு பெண்களுக்கு தங்களது ஆட்சியில் உரிமைகள் வழங்கப்படும் அவர் பதிலளிக்கிறார்.

## உலக செய்திகள்

# ஆப்கானுக்கு இனி நிதியுதவி கிடையாது

**அமெரிக்கா திட்டவட்டம்**

ஆப்கானிலுள்ள அமெரிக்க நிதி ஆதாரங்களைப் பயன்படுத்த முடியாதபடி தலிபான்களுக்கு அமெரிக்கா தடைவிதித்துள்ளது.

இதன்படி தமது வங்கிக் கணக்குகள், சொத்துகளை அமெரிக்கா முடக்கியுள்ளது. தலிபான்களுக்கு எந்தவித நிதியுதவியும் வழங்க இயலாது என்றும் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது.

இதேபோல் ஜேர்மன் உள்ளிட்ட இதர நாடுகளும் ஆப்கானுக்கு அனைத்து நிதியுதவிகளும் நிறுத்தப்படுவதாக அறிவித்துள்ளன.

**ஆப்கானிஸ்தான் இராணுவம் விட்டுச்சென்ற அதிநவீன ஆயுதங்கள்; தலிபான்களின் வசம்**



ஆப்கானில் இராணுவத்தினர் விட்டுச்சென்ற குவியல் குவியலான அதிநவீன ஆயுதங்களை தலிபான்கள் கைப்பற்றியுள்ளனர்.

நூற்றுக்கணக்கான ஆயுதம் தாங்கி வாகனங்களும் பீரங்கிகளும் இராணுவ ஹெலிகொப்டர்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. 89 பில்லியன் டொலர் முதலீட்டில் ஆப்கான் படைகளுக்கு அமெரிக்கா ஆயுதங்களை வழங்கியிருந்தது. இவை தலிபான்களுக்கு எதிரான யுத்தத்தில் 20 ஆண்டுகளாக பயன்படுத்தப்பட்டு தலிபான்களை முன்னேறவிடாமல் தடுத்து வந்தன. இப்போது இந்த அதிநவீன ஆயுதங்கள் அனைத்தும் தலிபான்களின் வசமாகியுள்ளன. இதனால் தலிபான்களின் ஆயுத பலம் மேலும் அதிகரித்துள்ளது.

# நாங்கள் எவரையும் பழிவாங்கப்போவதில்லை நம்பிக்கையுடன் எங்களை அங்கீகரிக்க வேண்டும்

**தலிபான் செய்தித் தொடர்பாளர் ஜபியுல்லா முஜாஹித் தெரிவிப்பு**



ஆப்கானிஸ்தானிலிருந்து எந்தவொரு நாட்டுக்கும் தீவிரவாத ஆபத்து கிடையாது என்று தலிபான்கள் அறிவித்துள்ளனர்.

காபூலில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்ட தலிபான் செய்தித் தொடர்பாளர் ஷய்புல்லாஹ் முஜாஹித் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

அனைத்து நாடுகளுடன் நாங்கள் நல்லுறவைப் பேண விரும்புகிறோம். ஆப்கானில் எங்களுக்கு எதிராக செயற்பட்ட அனைவருக்கும் பொதுமன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது. விமான நிலையங்களில் காத்திருப்போர் வீடு திரும்பலாம் என கேட்டுக்கொண்ட ஜபியுல்லா, அவர்களுக்கு எவ்வித அச்சுறுத்தும் நேராது என உறுதியளித்துள்ளார்.

சர்வதேச ஊடகங்கள் செய்திகளையும் விமர்சனங்களையும் வெளியிடத் தடையில்லை என்றபோதும், தேச நலன்களுக்கு எதிரான செய்திகளை வெளியிடக்கூடாது எனத் தெரிவித்தார்.

பெண்களுக்கு இஸ்லாமிய சட்டத்தின்படி உரிமைகள் வழங்கப்படும் என்றும் அரச நிர்வாகத்தில் பெண்களும் பங்கேற்க வரலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தாங்கள் யாரையும் பழிவாங்கப்போவதில்லை என்றும் உலக நாடுகளின் நம்பிக்கையுடன் அங்கீகாரத்தைக் கோருவதாகவும் தெரிவித்த ஜபியுல்லா, காபூலிலுள்ள தூதரகங்கள், தொண்டு நிறுவனங்களுக்கு பாதுகாப்பு அளிக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

**ஆப்கான் விவகாரம் குறித்து ஆலோசிக்க உலக நாடுகள் திட்டம்:**

# 24இல் கூடுகிறது ஐ.நா. மனித உரிமைகள் ஆணையம்



ஆப்கான் விவகாரம் குறித்து விவாதிக்க எதிர்வரும் 24ஆம் திகதி ஐ.நா. மனித உரிமைகள் ஆணையம் சிறப்பு கூட்டம் கூடவிருப்பதாக அறிவிப்பு வெளியாகியுள்ளது.


ஆப்கானிஸ்தானில் தலிபான்களுக்கும் அந்நாட்டு அரசுக்குமிடையே நடந்துவந்த போர் முடிவுக்கு வந்து தலிபான்கள் ஆட்சியமைக்கும் அதிகாரத்தைக் கைப்பற்றியுள்ளனர். ஆப்கானிஸ்தான் தலிபான் வசம் போய்விட்டது என்ற செய்தி வந்ததுமே உலக நாடுகள் பலவும் ஆப்கானிஸ்தானிலிருக்கும் தங்கள் நாட்டு தூதரங்களை மூடும் பணிகளை தொடங்கின.

தலிபான்கள் ஆப்கானிஸ்தானை கைப்பற்றியிருப்பதால் அந்நாட்டில் பெண்களுக்கான சுதந்திரம் பறிபோகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. மேலும், ஆப்கானில் பல்வேறு மனித உரிமை மீறல்களும் தலிபான்களால் அரங்கேற்றப்படும் அச்சம் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், ஆப்கானிஸ்தான் விவகாரம் தொடர்பாக ஐ.நா. சபையின் மனித உரிமைகள் ஆணையம் சிறப்பு கூட்டத்தை கூட்ட ஏற்பாடு செய்துள்ளது.

இந்த சிறப்புக் கூட்டம் எதிர்வரும் 24ஆம் திகதி நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் ஆப்கானிஸ்தானில் நடைபெற்றுவரும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக விவாதிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# தலிபான்களிடம் சரணடைய மாட்டேன் சட்டப்படி நான்தான் ஆப்கான் ஜனாதிபதி

**முன்னாள் துணை ஜனாதிபதி அம்ருல்லாஹ் சலோ ட்விட்**



தலிபான்களிடம் சரணடையப் போவதில்லையென ஆப்கானிஸ்தானின் முன்னாள் துணை ஜனாதிபதியாகவிருந்த அம்ருல்லாஹ் சலேஹ் தனது ட்விட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.




இதேபோன்று ''சட்டப்படி நான்தான் ஆப்கானிஸ்தானின் அடுத்த ஜனாதிபதி'' என மற்றுமொரு ட்விட்டர் பதிவில் அம்ருல்லாஹ் தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தான் முழுமையாக தலிபான்களின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டதையடுத்து அந்நாட்டு ஜனாதிபதி அஷ்ரப் கனி நாட்டைவிட்டு வெளியேறியுள்ளார். இதனையடுத்து துணை ஜனாதிபதி அம்ருல்லாஹ் சலேஹ், காபூலிலிருந்து தப்பி வடகிழக்கிலுள்ள பஞ்ச்ஷிர் பள்ளத்தாக்கில் தலைமறைவாகியுள்ளார்.

அதற்கு முன் அவர் வெளியிட்ட ட்விட்டர் பதிவில், தலிபான்களை கடுமையாக எதிர்த்தவரும் தமது குருவுமான அகமது ஷா மசூதிற்கு ஒருபோதும் துரோகம் செய்யமாட்டேன் எனவும் தம்மை ஆதரித்த இலட்சக்கணக்கான மக்களின் விருப்பத்திற்கு எதிராக தலிபான்களுடன் சேர மாட்டேன் எனவும் தெரிவித்துள்ளார்.

ஹிந்து குஷ் மலைச்சிகரப் பகுதியான பஞ்ச்ஷிர் பள்ளத்தாக்கில் அம்ருல்லா சலேஹும், அகமது ஷா மசூதின் மகனும் சேர்ந்து முன்னர் தலிபான்களுக்கு எதிரான கொரில்லா போரில் ஈடுபட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**நான்தான் அடுத்த ஜனாதிபதி**

''சட்டப்படி நான்தான் ஆப்கானிஸ்தானின் அடுத்த ஜனாதிபதி'' என அந்நாட்டு துணை ஜனாதிபதி அம்ருல்லாஹ் சலோ தெரிவித்துள்ளார்.

''தற்போதைய ஆப்கன் அரசியலமைப்பு சட்டப்படி ஜனாதிபதி இறந்துவிட்டாலோ, இராஜினாமா செய்துவிட்டாலோ அல்லது நாட்டைவிட்டு வெளியேறிவிட்டாலோ சட்டப்படி துணை ஜனாதிபதியே ஜனாதிபதியாக வரவேண்டும். அதன்படி ஜனாதிபதி அஷ்ரப் கனி நாட்டைவிட்டு வெளியேறிவிட்டதால், நான்தான் அடுத்த ஜனாதிபதி. சர்வதேச நாடுகளின் தலைவர்கள் ஒருமித்த கருத்துடன் எனக்கு ஆதரவு அளிக்கவேண்டும்.''

- இவ்வாறு அவர் ட்விட் செய்துள்ளார்.





ஆப்கான் மலைப்பகுதிகளில் வாழும் ஹசாரா சமூகத்தினருக்கும், தலிபான்களுக்கும் நெடுங்காலமாக முன்விரோதம் இருந்துவந்தது. 1995ஆம் ஆண்டு ஹசாரா இனத் தலைவரான அப்துல் அலி மஸாரியைத் தலிபான்கள் தூக்கிலிட்டனர். பிறகு அவரது நினைவாக பாமியனில் நிறுவப்பட்டுள்ள மிகப்பெரிய சிலையை தற்போது வெடி வைத்து தகர்த்தனர்.

**ஆளுநரை கடத்திய தலிபான்கள்**

மேலும், ஹசாரா சமுகத்தைச் சேர்ந்தவரும், சஹர்கிந்த் மாகாண பெண் ஆளுநருமான சலிமா மசாரியை தலிபான்கள் கடத்தி உள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

# ‘ஸ்டோக்ஸை அணிக்கு திரும்பி வரச்சொல்லி நிர்ப்பந்திக்க மாட்டோம்’

## இங்கிலாந்து பயிற்றுவிப்பாளர்




இந்திய அணியுடனான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி அதிர்ச்சித் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து அந்த அணி மீது அதிக அழுத்தங்கள் ஏற்பட்டுள்ளன. லோர்ட்ஸ் தோல்விக்கு பின் இங்கிலாந்து அணியில் பென் ஸ்டோக்ஸ் மீண்டும் இணையவுள்ளார் என்ற ஊகங்கள் வெளியாகின.

இந்நிலையில் இங்கிலாந்து அணியின் பயிற்றுவிப்பாளர் கிறிஸ் சில்வர்வுட் இது தொடர்பில் கருத்துதெரிவிக்கையில், “நாங்கள் ஸ்டோக்ஸை அணிக்கு திரும்பி வரச்சொல்லி நிர்ப்பந்திக்க மாட்டோம். இது போன்ற சந்தர்பங்களால் அவருக்கு மீண்டும் மனஅழுத்தம் அதிகரிக்கலாம். அவரே வந்து நான் விளையாடத் தயார் என்று சொல்லும் வரை நாங்கள் காத்திருப்போம். அவருக்கு நாங்கள் எந்த அழைப்பும் விடுக்கப்போவதில்லை’’ என்று தெரிவித்தார்.

இதேவேளை, பென் ஸ்டோக்ஸ் விவகாரத்தில், பயிற்றுவிப்பாளர் சில்வர்வுட்டின் கருத்தையே அணித் தலைவர் ஜோ ரூட்டும் ஆமோதித்துள்ளார்.

பென் ஸ்டோக்ஸ் அண்மையில் நடைபெற்ற பாகிஸ்தானுக்கு எதிரான தொடருடன் கிரிக்கெட்டிலிருந்து காலவரையறையற்ற விடுவிப்பு எடுத்தார். மனஅழுத்தம் காரணமாக கிரிக்கெட்டிலிருந்து சிறிது ஓய்வு தேவைப்படுவதாக பென் ஸ்டோக்ஸ் கூறியிருந்தார். அவரின் இந்த முடிவு இங்கிலாந்து ரசிகர்களிடம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தமை எகுறிப்பிடத்தக்கது.

# சாதிப்பதற்கு ஊனம் தடை அல்ல

(ரமணி)

கை, கால் இழந்து அங்கக் குறைபாடுள்ளவர்களை ஒதுக்கி விடாமல் அவர்களின் ஆற்றல்களை உலகுக்கு வெளிப்படுத்துவதில் முதன்மையானது பராலிம்பிக். நவீன உபகரணங்கள் போட்டியாளர்களின் திறமைகளை மேம்படுத்துகின்றன. புரோஸ்டெடிக்ஸ் முதல் கார்பன் ஃபைபர் சக்கர நாற்காலிகள், உதவி சாதனங்கள் வரை, பரா விளையாட்டுகளுக்கான தொழில்நுட்பம் புதிய பொருட்கள் மற்றும் மேம்பட்ட வடிவமைப்புகளுடன் முன்னேறி வருகிறது.

### பெட்மிண்டன் நாற்காலிகள்




டோக்கியோ பராலிம்பிக்கில் பெட்மிண்டன் அறிமுகமாகிறது. நிற்கும் பெட்மிண்டன் வீரர்களைப் போன்றே, சக்கர நாற்காலி விளையாட்டு வீரர்களும் செயற்படக்கூடிய வகையில் சக்கர நாற்காலி வடிவமைக்கப்பட்டுள்ளது. நீண்ட, குறுகிய, வேகமான, மெதுவாக, இழுத்தல், தள்ளுதல், நிறுத்துதல் என்பனவற்றுக்கான தொழில்நுட்ப உதவியுடன் சக்கர நாற்காலிகள் உருவாக்கப்பட்டுள்ளன. சக்கர நாற்காலிகள் பின்புறம் மற்றும் கூடுதல் காஸ்டர் சக்கரங்களைக் கொண்டுள்ளன. இதனால் வீரர்கள் சுதந்திரமாக நகர முடியும். முறுக்குவதில்லை அல்லது பின்னோக்கி சாய்வதில்லை.

### சைக்கிளிங் - டிராக் ரேஸிங் சைக்கிள்கள்



சைக்கிள் ஓட்டுபவர்கள் பாதையில் மணிக்கு 60 கி.மீ வேகத்தைத் தாண்டலாம். விளையாட்டுகளில் நிலையான பந்தய பைக்குகள் பாரா சைக்கிள் ஓட்டுபவர்களால் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால், அவை மாற்றங்களை அனுமதிக்கின்றன. கையில் குறைபாடுள்ள விளையாட்டு வீரர்களுக்கு, எந்தக் கையில் அதிக இயக்கம் உள்ளது என்பதைப் பொறுத்து கைப்பிடிகள் மாற்றியமைக்கப்படுகின்றன. அதே நேரத்தில் கால் துண்டிக்கப்பட்ட விளையாட்டு வீரர்கள் தங்கள் செயற்கை உறுப்பை பெடலில் சரி செய்ய அனுமதிக்கப்படுகிறார்கள்.

### அம்பு எய்தல் போட்டி



வில்வித்தையில் உதவி சாதனங்கள் அனுமதிக்கப்படுகின்றன. அவற்றில் வெளியீட்டு ப்ரேஸ் உள்ளது. இது வில்லாளரின் பின்புறத்தில் வைக்கப்பட்டு, ஒரு ப்ரேஸில் ஒட்டப்பட்டு மேல் உடலில் கட்டப்பட்டுள்ளது. அம்பை வெளியிடுவதற்கு ஒரு வில்லாளருக்கு உதவ ஒரு கையேடு தூண்டுதல் வழிமுறை சேர்க்கப்படுகின்றது.

# ஆப்கானிஸ்தான் அணியின் துடுப்பாட்ட பயிற்றுவிப்பாளராக அவிஷ்க




ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணியின் புதிய துடுப்பாட்டப் பயிற்றுவிப்பாளராக இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் அவிஷ்க குணவர்தன நியமிக்கப்பட்டுள்ளார். இதனை ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் சபை தங்களது உத்தியோகபூர்வ ட்விட்டர் பக்கத்தில் அறிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணியானது அடுத்த மாத ஆரம்பத்தில் இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு பாகிஸ்தான் கிரிக்கெட் அணியுடன் 3 போட்டிகள் கொண்ட ஐ.சி.சி உலகக் கிண்ண சுப்பர் லீக் தொடரின் ஒருநாள் சர்வதேச தொடரில் விளையாடவுள்ளது. இத்தொடரை அடிப்படையாகக் கொண்டே அவிஷ்க குணவர்தனவின் நியமனம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

44 வயதாகும் அவிஷ்க குணவர்தன இலங்கைக் கிரிக்கெட்டில் முன்னதாக துடுப்பாட்டப் பயிற்றுவிப்பாளராகவும், இலங்கை ‘ஏ’ அணியின் தலைமைப் பயிற்றுவிப்பாளராகவும் செயற்பட்டிருந்த நிலையில், தற்போது ஆப்கானிஸ்தான் அணியின் துடுப்பாட்டப் பயிற்றுவிப்பாளராக நியமனம் பெற்றுள்ளார். இவர் இலங்கை அணிக்காக 6 டெஸ்ட் போட்டிகளிலும், 61 ஒருநாள் சர்வதேச போட்டிகளிலும் விளையாடியுள்ளார்.

இலங்கைக் கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரரான அவிஷ்க குணவர்தன கிரிக்கெட் சூதாட்ட சர்ச்சையில் சிக்கியிருந்த நிலையில், சர்வதேச கிரிக்கெட் பேரவையானது கடந்த மே மாதம் தான் அவர் மீதான தடைகள் அனைத்தையும் நீக்கி, கிரிக்கெட் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு அனுமதி வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

# வூட் விளையாடுவதில் சந்தேகம்




சுற்றுலா இந்திய - இங்கிலாந்து அணிகளுக் கிடையிலான மூன்றாவது டெஸ்ட் போட்டி எதிர்வரும் 25ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில், இங்கிலாந்து அணியின் வேகப்பந்துவீச்சாளரான மார்க் வூட் மூன்றாவது போட்டியில் விளையாடுவதில் சந்தேகம் எழுந்துள்ளது. இரண்டாவது டெஸ்டின் நான்காவது நாளன்று இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர் மார்க் வூட்டுக்குத் தோள்பட்டையில் உபாதை ஏற்பட்டது. எனினும், வலியுடன் இந்தியாவின் இரண்டாவது இன்னிங்ஸில் அவர் பந்துவீசினார். தற்போது உபாதை காரணமாக மூன்றாவது டெஸ்டில் மார்க் வுட் பங்கேற்பது சந்தேகம் எனத் தெரிகிறது.

இது தொடர்பில் இங்கிலாந்து அணியின் பயிற்றுவிப்பாளர் தெரிவிக்கையில், “மார்க் வூட்டுக்கு மருத்துவர்கள் சிகிச்சையளித்து வருகிறார்கள். அடுத்த சில நாட்களில் அவர் விளையாடுவது குறித்து தெரியவரும். மூன்றாவது டெஸ்ட் நெருங்கும் சமயத்தில் அனைவருடன் கலந்தாலோசித்து முடிவெடுப்போம். மார்க் வூட் குணமாகவில்லையென்றால் நிச்சயமாக விளையாட வேண்டும் என்று அவரைக் கட்டாயப்படுத்த மாட்டோம். அவரைக் கவனித்துக்கொள்வோம்’’ என்று தெரிவித்தார்.




# பராலிம்பிக்கில் ரசிகர்களுக்கு அனுமதியில்லை

கொரோனா வைரஸின் கோரத்தாண்டவத்திற்கு மத்தியில் டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகள் நிறைவு பெற்றுள்ள நிலையில், அடுத்ததாக எதிர்வரும் 24ஆம் பராலிம்பிக் போட்டிகள் ஆரம்பமாகவுள்ள நிலையில், குறித்த பராலிம்பிக் போட்டிகளைப் பார்வையிட ரசிகர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

நாளாந்தம் அதிகரிக்கும் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானோரை கருத்திற்கொண்டு அண்மையில் நடைபெற்று முடிந்த டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகளுக்கு ரசிகர்கள் அனுமதிக்கப்படவில்லை. இந்நிலையிலேயே, எதிர்வரும் 24ஆம் திகதி டோக்கியோவில் ஆரம்பமாகவுள்ள மாற்றுத்திறனாளிகளுக்கான பராலிம்பிக்கிலும் ரசிகர்கள் மைதானத்திற்குள் அனுமதிக்கப்படமாட்டார்கள் என ஏற்பாட்டு குழுவினர் அறிவித்துள்ளனர். கடுமையான சுகாதார வழிகாட்டுதல்களுக்கு அமைய பராலிம்பிக் போட்டிகள் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஒலிம்பிக்கில் சறுக்கிய தருணங்கள்

டோக்கியோ ஒலிம்பிக்கில் ஆண்கள் 100 மீ. பெக்ஸ்ட்ரோக்கின் அரையிறுதி நீச்சல் போட்டிக்காக பிரான்ஸ் நாட்டு வீரரான யோஹன் என்டோய் பிரரூவர்ட் கலந்துகொண்டார். மேலும், அவர் பந்தயத்தின் பாதியை நோக்கிச் சென்றுகொண்டிருந்தபோது, சுவரில் மோதி நீந்த முடியாமல் அவதிப்பட்டார். அதனால் அவர் தகுதி நீக்கம் செய்யப்பட்டார்.






ஐரோப்பிய சம்பியனான யோஹன் என்டோய் பிரரூவர்ட் மீது பிரான்ஸ் நீச்சல் கூட்டமைப்பு பெரு நம்பிக்கை வைத்திருந்தது. அவர் தொடர்ந்து நீந்த முடியாமல் ஏன் வெளியேறினார் என்பதற்கான காரணம் உடனடியாகத் தெரியவரவில்லை. இரண்டு நாட்களுக்குப் பிறகு, என்ன நடந்தது என்பதை யோஹன் என்டோய் பிரரூவர்ட் விளக்கமாகத் தெரிவித்தார்.

அவருக்கு இரு கண்களிலும் கெரடோன்கோனஸ் என்ற நிலை உள்ளது. ஐரோப்பிய சம்பியன்ஷிப், அவரது உயர் கல்விப் பரீட்சை என்பனவற்றால் அறுவை சிகிச்சை செய்ய முடியவில்லை. அந்தத் தவறால் யோஹன் என்டோய் பிரரூவர்ட்டால் ஒலிம்பிக்கில் சாதிக்க முடியவில்லை. அவர் தனது தவறுக்கு ஒரு சாக்குபோக்கும் சொல்லவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# தேசிய கபடி அணியின் முதற்கட்டத் தேர்வில் நிந்தவூரை சேர்ந்த மூவர் தெரிவு

(எம்.என்.எம். அப்ராஸ்)

இலங்கையின் தேசிய கபடி அணியின் முதற்கட்டத் தேர்வில், அம்பாறை மாவட்டம் நிந்தவூர் மண்ணைச் சேர்ந்த மூவர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். நிந்தவூர் மதீனா விளையாட்டுக்கழகத்தின் வீரர்களான அஸ்லம் சஜா, எச்.எம்.எம்.ஹாலிஸ், ஏ.ஏ.அப்லால் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

சீனாவில் எதிர்வரும் 2022ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் இடம்பெறவுள்ள 19ஆவது ஆசிய மட்ட விளையாட்டுப் போட்டியில் கபடிப் போட்டிக்காக வீரர்களைத் தயார்படுத்தும் முகமாக இலங்கை கபடி சம்மேளத்தினால் கொழும்பிலுள்ள விளையாட்டு அமைச்சின் உள்ளக அரங்கில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற அணி வீரர்களின் முதற்கட்டத் தேர்வில் இவர்கள் மூவரும் தெரிவுசெய்யப்பட்டனர்.



இவர்கள் தங்களின் திறமை மூலம் அம்பாறை மாவட்டத்திற்கும், நிந்தவூர் பிரதேசத்திற்கும் பெருமை சேர்த்துள்ளனர்.

# எஸ்.எல்.சி. ரெட்ஸ் அணிக்கு அடுத்தடுத்து இரு வெற்றிகள்







தனஞ்சய டி சில்வா தலைமையிலான எஸ்.எல்.சி. ப்ளூஸ் அணிக்கு எதிரான போட்டியில் தினேஷ் சந்திமால் தலைமையிலான எஸ்.எல்.சி.ரெட்ஸ் அணி 6 விக்கெட்கள் வித்தியாசத்தில் இலகு வெற்றி பெற்று, தொடரில் அடுத்தடுத்து இரண்டு வெற்றிகளைப் பதிவு செய்தது.

இலங்கைக் கிரிக்கெட் சபையின் ஏற்பாட்டில் கண்டி பல்லேகல சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்றுவருகின்ற எஸ்.எல்.சி. இன்விடேஷனல் இருபதுக்கு 20 லீக் தொடரின் ஏழாவது போட்டி நேற்று மாலை நடைபெற்றது. இந்த போட்டியில் எஸ்.எல்.சி. ரெட்ஸ் - எஸ்.எல்.சி ப்ளூஸ் அணிகள் பலப்பரீட்சை நடத்தின. போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற தினேஷ் சந்திமால் முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தார்.

அதன் பிரகாரம் முதலில் துடுப்பெடுத்தாடிய ப்ளூஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 7 விக்கெட்களை இழந்து 146 ஓட்டங்களைக் குவித்தது. துடுப்பாட்டத்தில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக களமிறங்கிய சகலதுறை வீரரான தனஞ்சய லக்ஷான் 55 ஓட்டங்களை அதிகபட்ச ஓட்டங்களாகப் பெற்றுக்கொண்டார். ரெட்ஸ் அணியின் பந்துவீச்சில் ஹிமேஸ் ராமநாயக்க 31 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்களையும், சமிக்க கருணாரத்ன 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

147 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய ரெட்ஸ் அணி 19 ஓவர்களில் 4 விக்கெட்களை மாத்திரம் இழந்து 6 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றியிலக்கை அடைந்தது. துடுப்பாட்டத்தில் அணித்தலைவர் தினேஷ் சந்திமால் நிதானமாக 59 ஓட்டங்களைப் பதிவுசெய்து அணியின் வெற்றிக்குக் காரணமாக திகழ்ந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, நேற்றிரவு நடைபெற்ற எட்டாவது போட்டியில் தசுன் சானக்க தலைமையிலான எஸ்.எல்.சி. க்ரேஸ் அணியும், அஷான் பிரியஞ்சன் தலைமையிலான எஸ்.எல்.சி. க்ரீன்ஸ் அணியும் பலப்பரீட்சை நடத்தின.

Dialog INVITATIONAL T20 LEAGUE
நாளைய சாம்பியன்களை வலுவூட்டும்
Dialog

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7